விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 சித்திரை 17 ஞாயிற்றுக்கிழமை (30.04.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 132

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(ss-84407)

## கொத்திய பெண் பொலிஸாரால் கைது

(சாவகச்சேரி)
பெண் ஒருவரை மண்வெட்டியால் கொத்திக் காயப்படுத்திய சந்தேகநபரான குடும்பப் 16

## பிரதேச செயலர்கள் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்தில் உள்ள 15 பிர 15

## பொலிஸ் ஆட்சேர்ப்பு

(கொழும்பு)
பொலிஸ் துறை ஆட்சேர்ப்பில் தமிழ்பேசும் விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட 15

# தமிழருக்கான உரிமையை பேச்சுமூலம் பெற முடியாது!

## இருந்தும் முன்னேற்றம் வரும் என்ற நம்பிக்கையில் பயணிக்கிறோம் - சி.வி

(கிளிநொச்சி)
பேரினவாதிகளிடமிருந்து தமிழர்களுக்கான உரிமையை எந்தப் பேச்சுவார்த்தை மூலமும் பெற்றுக்கொள்ள முடியாது என்ற உண்மையை உலகுக்கு சிவராம் எடுத்து உரைத்து வந்தார். இன்றும் அவ்வாறான சிந்தனையில் நாம் இருந்தாலும், ஆயுதத்தை ஒதுக்கி வைத்து ஆளுமைமிக்க நெருக்குதல்கள் மூலம் நிலைமையில் முன்னேற்றத்தை கொண்டுவர முடியும் என்ற நம்பிக்கையில் நாம் பயணித்துக் கொண்டிருக்கிறோம் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.(14-ம் பக்.)

## ஹன்ரரை துரத்திய பொலிஸார்

(கரணவாய்)
பொதுமக்களின் உயிரைப் பணயம் வைத்து ஹன் 15

## மனைவி கைது!

(கரணவாய்)
துன்னாலைப் பகுதியில் கோஷ்டி மோதலில் ஈடுபட்ட பிரதான சந் 15

## மின் தாக்கி ஒருவர் சாவு

(வவுனியா)
வவுனியா மன்னார் வீதி சாம்பல் தோட்டத்தில் நேற்று காலை 10 மணியள 15

## மோ.சைக்கிளால் முதியவர் பலி!

(யாழ்ப்பாணம்)
மோட்டார் சைக்கிள் மோதியதில் காயமடைந்த முதியவர் சிகிச்சை பலனின்றி நேற்றைய தினம் யாழ் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

மன்னாரை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான ஆரோக்கியம் பிரான்சிஸ் (வயது 68) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

மன்னார் பகுதியில் உள்ள வீதியோரத்தில் நேற்று முன்தினம் இரவு 7 மணி 15

## மாமனிதர் சிவராம் நினைவு உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ காலத்தில் சுட்டுக்கொலை செய்யப்பட்ட மாமனிதர் தராகி சிவராமின் (தர்மரட்ணம் சிவராம்) 12 ஆம்ஆண்டுநினைவு நாள் நிகழ்வு கிளிநொச்சி 15




## சாட்சிக்கு அச்சுறுத்தல்
## வாக்குமூலத்தை தமிழில் பதிவு செய்ய கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
சுன்னாகம் சித்திரவதை கொலை வழக்கின் சாட்சி ஒருவருக்கு பொலிஸாரால் கொலை மிரட்டல் விடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பில், யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சிங்களத்தில் வாக்குமூலம் பதியப்பட்டதால் வாக்குமூலம் பதிவு செய்யும் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. குறித்த சாட்சி தனது வாக்குமூலத்தை தமிழில் பதிவு செய்யுமாறு கோரியதனை அடுத்தே நிறுத்தப்பட்டுள்ளது.

குறித்த கொலை 15

## கூட்டமைப்பின் மேதினம் கிளிநொச்சி, அம்பாறையில்

(கொழும்பு)
மே 01 ஆம் திகதி தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக மேதினம் கொண்டாடப்படவுள்ள நிலையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வடக்கில் கிளிநொச்சியிலும், கிழக்கில் அம்பாறையிலும் இந்த முறை மே தினக் கூட்டத்தினை நடத்தவுள்ளதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

அம்பாறையில் நடைபெறும் மே தினக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டு உரை யாற்றவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் தற்கால அரசியல் சூழ்நிலைகளுக்கு ஏற்ப 15

## நனவாகும் புலிகளின் கனவு!

(கொழும்பு)
தமிழீழ விடுதலைப் புலிகளால் திட்டமிடப்பட்டிருந்த பல அபிவிருத்தி நடவடிக்கைகள் தற்போது 15

## முள்ளிக்குளம் போராட்டம் வெற்றி காணிகள் விடுவிக்கப்பட்டன!

(பனிக்கன்குளம்)
மன்னார் - முள்ளிக்குள கடற்படையினர் வசமிருந்த மக்களின் குடியிருப்பு காணிகள் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் இருபத்தேழு குடும்பங்களின் 16



## சர்ச்சையில் சிக்கிய மோடியின் வருகை!




(புதுடில்லி)
இலங்கையின் உத்தியோகபூர்வ அழைப்பின் பேரில் வருகை தரவுள்ள இந்திய பிரதமர் நரேந்திர மோடி, சர்வதேச வெசாக் தின கொண்டாட்டம் தவிர வேறு 15

## ஈழத் தமிழர்கள்; இந்தியா மௌனம்

### – ராஜா சாடல்

(சென்னை)
ஈழத் தமிழர் தொடர்பில் தனது தார்மிக கடமையை செய்ய இந்தியா தவறுவதாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் டி.ராஜா குற்றம் சுமத்தியுள்ளார்.

ஈழத் தமிழர்களுக்காக 15



## காணி இல்லாவிட்டால் நட்டஈடு வழங்குக!

### ஐ.நா நிலைப்பாடு

(கொழும்பு)
பாதிக்கப்பட்ட மக்களின் காணிகளின் உரிமை தொடர்பான செயற்பாடுகள் அடையாளம் காணப்பட வேண்டும். அதன் பின்னர் அந்தக் காணிகள் உரிமையாளர்களுக்கு வழ 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிநிலை வெற்றிடம்

ஜெயந்திநகர், கிளிநொச்சியில் அமைந்துள்ள மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தில் கீழ்வரும் பணிநிலை வெற்றிடம் உண்டு.

கணினி மயப்படுத்தலுக்கும் கணக்கியல்படுத்துவதற்குமான பதவி

தகைமைகள்

1. கணக்கியல் தொழில்நுட்பவியலாளர் டிப்ளோமா - AAT (Association of Accounting Technicians) இரண்டு வருடக் கற்கை நெறியில் ஒரு வருடமாவது அவசியம் சித்தியடைந்திருத்தல் வேண்டும். பூரண பாதுகாப்பு போக்குவரத்து வழங்கப்படும். உயர் தகைமையுள்ளவர்கள் மட்டும் ஆலோசிக்கப்படும்.
2. பெண்பாலார் மட்டும் விண்ணப்பிக்கலாம். கணினியிலும் தகவல் தொழில்நுட்பத்திலும் அதியுயர் சித்தி பெற்றிருத்தல் அவசியம். நிறுவனத்தின் கணினிமயப்படுத்தும் திறமை ஆற்றலும் கொண்ட பதிவு பெற்ற நிறுவனமாக இருத்தல் வேண்டும். சகல அனுபவப் பதிவும் நாளாந்த வேலைத்திட்டமும் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். சம்பளம் பேசித் தீர்க்கப்படும். ஒரு வருடத்தில் திட்டம் முடிய வேண்டும்.
3. வயதெல்லை 25ற்கு மேற்பட்டவராகவும் 45 வயதுக்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். சுய விபரம் (CV) உட்பட அனைத்தும் அனுப்ப வேண்டும். அதி உச்ச திறமை மதிப்பிடப்பட்டே தெரிவு செய்யப்படுவர். கணினி மயப்படுத்தல் அவசியமானது.
4. அறிவு ஆற்றல், ஆளுமை, நல்ல தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும். 6 மாதத்தில் கணினி மயப்படுத்தப்பட்டு ஊழியர்களுக்குப் பயிற்சி வழங்கப்படும்.
5. எமது வேலைத்திட்டம் எமது பண்ணைகள், தோட்டங்கள் அனைத்தையும் கணினி மயப்படுத்தி பாதுகாப்புக் கமராக்கள் பூட்டி செயற்பட வைத்தல் வேண்டும். தியாகம், கிராஞ்சி, ஜெயந்திநகர் பண்ணைகள் உட்பட அனைத்தும் கணினியிலும் CCTV இலும் தகவல்படுத்தப்பட வேண்டும்.
6. தோட்டங்கள் கணக்குப் பகுதி உட்பட அனைத்தும் கணினிமயப்படுத்தி கமராவுடன் இணைத்தல் வேண்டும்.
7. ஒழுக்கம், நன்னடத்தையுடையவராக இருக்க வேண்டும். (கிராம சேவையாளர் நற்சான்றிதழ் மேலும் இரண்டு சமூகப் பெரியவர்களது நற்சான்றிதழ் இணைக்க வேண்டும்)
8. உயர் தகுதி ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம் உட்பட அனைத்தும் செயற்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும். 6 மாதத்தில் எமது 5 தோட்ட முகாமையாளர்களுக்கும் பயிற்சியும் 4 மாதத்தில் சகலரும் இணைக்க வேண்டும். இதற்கான தொழில்நுட்ப ஆதரவு இல்லையெனின் வேறு கம்பனிகளிடமிருந்து பெற்று மதிப்பீடு உட்பட அனைத்தும் செய்து தர வேண்டும். இது தொடர்பில் சகல விபரங்களும் கொண்ட வெளிப்பாடு திறமையாக தங்களால் பிரகடனப்படுத்தப்பட வேண்டும். முக்கிய இலக்கு சகல தோட்டங்களும் பண்ணைகளும் கணினிமயப்படுத்தலாகும்.

குறிப்பு :

- இல்லத்தில் தங்கியிருந்து பணியாற்ற வேண்டும். நாளாந்த வேலை அறிக்கை தர வேண்டும். எத்தனை பேரைப் பயிற்ற வேண்டும் என்ற விபரம் வேண்டும்.
- உணவு, தங்குமிடம், போக்குவரத்து என்பன இலவசமாக வழங்கப்படும் .
- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். 6 மாதத்தில் சகலதும் கணினியில் இடக் கூடியதாக இருத்தல் வேண்டும். ஊழியர்களைப் பயிற்ற வேண்டும். இதற்கு இணையாக CCTV கமரா மாதிரி இணைத்து சகலதையும் கண்காணிக்க வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "AAT கணக்கியல் உதவியியல் பயிற்சியாளர் பதவிக்கான விண்ணப்பம்" என்பதைத் தவறாது குறிப்பிட்டு (சகல சான்றிதழ்களின் பிரதிகளுடனும்) 10.05.2017ற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபாலில் அல்லது மின்னஞ்சலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். கால தாமதமாகும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. தங்களது திட்டம் தெளிவாக இருத்தல் வேண்டும். பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர் அனுபவம் வாய்ந்தவராகவும் இருப்பதுடன் பராமரிப்பு ஒப்பந்தம் செய்யப்பட வேண்டும். பராமரிப்பு மிக மிக அவசியம். தொடர் பராமரிப்பு அவசியமாகும்.

அனுப்பி வைக்க வேண்டிய முகவரி :-

தி.இராசநாயகம், தலைவர், மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம், ஜெயந்திநகர், கிளிநொச்சி

தொலைபேசி இல : 077 060 4950, 021 492 3118

மின்னஞ்சல் முகவரி : rasa46@yahoo.com

(C - 8427)


# கணினி திருத்தம்

உங்கள் வீடுகளுக்கே வந்து கணினிகள் திருத்தி தருகிறோம்! அழையுங்கள்.

GUNA BEST PC 0779086737

லப்டொப் கணினிகள்

திருத்தம் விற்றல் வாங்குதல்

LAPTOP COMPUTERS CCTV CAMERA

REPAIR SALE PURCHASE INSTALLATION

கணினி மதர்போட் சிசிரிவி திருத்தம் விற்றல் பொருத்துதல்

50/12 ஆஸ்பத்திரிவீதி யாழ்ப்பாணம். 522 மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம்

(சி-8425)

# காணி விற்பனைக்கு

சிறிய முதலீடு - நிரந்தர வருமானம்

A9 வீதி, நுணாவில் சந்தி அருகே மட்டுவில் வீதியில் 300M தூரத்தில் 10 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. வீடு கட்ட, தென்னை, மா, பலா, தேசி போன்ற மரங்கள் வைத்து பலன்பெற உகந்த இடம். (8881)

தொடர்பு

077 873 0129

## கனடாவில் கல்வி பெற...

QUEEN'S COLLEGE OF BUSINESS, TECHNOLOGY & PUBLIC SAFTY

(Authorized License of Lambton College Programs)

121, Brunel Road, Mississauga, Ontario, Canada, L4Z3E9. www.queenscollege.ca

Study & Graduate in Canada will give you an opportunity to settle in Canada with family.

Start with our One year Diploma Courses

- Business Analyst
- Computer Networking & Security
- Web Development

Minimum Qualification :

A/L pass & IELTS - 5.5 ( academic)

Meet the college Representative at Treatooo Hotel,

41, Kandy Road, Chundikull.

30th April From 10:00am to 5:00pm

For Career Information Session Free of Charge

Contact : Kumaresan : 011 744 5557 / 077 735 7529

Canada Contact: Shan Muralee: +1-905-8907833 ext225

e-mail : info@queenscollege.ca & srilanka@queenscollege.ca


# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



தோற்றம் 18 - 12 - 1946

மறைவு 31 - 03 - 2017

அமரர்

## சின்னத்தம்பி கிருஷ்ணபிள்ளை

31.03.2017 அன்று இறைபதம் அடைந்த எமது குலவிளக்கு **சின்னத்தம்பி கிருஷ்ணபிள்ளை** அவர்களது அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (30.04.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 5.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும்.

மேலும் சபீண்டீகரண நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அன்னாரது இல்லத்தில் அன்றைய தினம் காலை 11.00 மணியளவில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து மதியபோசன நிகழ்வு நடைபெறும். இந்நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்தாய்,
அல்வாய்.

(C-8423)

குடும்பத்தினர்

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# மரண அறிவித்தல்

## சேனாதிராசா தில்லைநடராசா (தவம்)



தோற்றம்:05.01.1946 மறைவு:29.04.2017

சுதுமலை மானிப்பாயை பிறப்பிடமாகவும் தட்டாமலை ஒட்டுசுட்டானை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லைநடராசா (தவம்) நேற்று (2017.04.29) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சேனாதிராசா - நகுலேஸ்வரி தம்பதிகளின் அன்புப் புதல்வரும் சிதம்பரப்பிள்ளை - காலஞ்சென்ற அழகம்மாவின் மருமகனும் தெய்வானைப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பூபாலசிங்கம் மற்றும் விக்கினேஸ்வரி, தர்மகுலசிங்கம், ஜெயபாலன், கிருஸ்ணபாலன், காலஞ்சென்ற தங்கராணி ஆகியோரின் சகோதரனும் நேசதுரை (ஆயுள் வேத வைத்தியர்), சிறிகாந் (யோகன்), சிறிதரன், சிறிவித்தியா, காலஞ்சென்ற சிறிமுருகன் மற்றும் சிறிகுமார், சிறிபிரியா, சுகிர்தா, ரின்சியா ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2017) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக பி.ப 3.00 மணியளவில் தட்டாமலை ஒட்டுசுட்டான் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

(C-8422)

தட்டாமலை,
ஒட்டுசுட்டான்.

தகவல்:-
குடும்பத்தினர்
077 626 3611

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்துக் கோயிலை சூறையாடிய கும்பல் சுவாமி சிலைகளை கால்வாயில் வீசியது



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் உள்ள சிந்து மாகாணத்தில் இந்து கோயிலை சூறையாடிய நாசக்காரர்கள் அங்கிருந்த சுவாமி சிலைகளை எடுத்து கால்வாயில் தூக்கி வீசிய சம்பவம் அதிர்ச்சியையும், பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தானில் உள்ள சிந்து மாகாணத்தில் உள்ள கராச்சி நகரில் இருந்து சுமார் 60 கிலோ மீற்றர் தூரத்தில் தாட்ட மாவட்டத்தில் உள்ள காரோ என்ற பகுதியில் 2 ஆயிரத்துக்கும் அதிகமான இந்து மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களின் வழிபாட்டுக்காக இங்குள்ள ஒரு கோயிலுக்குள் நுழைந்த நாசக்காரர்கள் கோயிலை சூறையாடியதுடன் அங்கிருந்த சுவாமி சிலைகளை உடைத்து அருகாமையில் உள்ள கால்வாயில் தூக்கி வீசி சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் பின்னிரவு சுமார் ஒரு மணியில் இருந்து நேற்று அதிகாலை ஐந்து மணிக்குள் நடைபெற்றதாக கருதப்படும் இந்த அத்துமீறல் தொடர்பாக மத அவமதிப்பு சட்டத்தின்கீழ் வழக்குப்பதிவு செய்துள்ள பொலிஸார் யாரையும் கைது செய்யவில்லை. (இ)

# இலங்கையின் ஒரு பகுதி இந்தியாவிடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்தின்போது இந்தியாவுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் ஊடாக இலங்கையின் ஒருபகுதி இந்தியாவுக்கு ஒப்படைக்கப்பட்டுவிட்டது என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணம் குறித்து கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு நேற்று கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இப்போது இந்த அரசால் நாடு விற்கப்படும் விதத்தைப் பாருங்கள். இந்தியாவுடன் ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் திருகோணமலை எண்ணெய் தாங்கிகள் மற்றும் துறைமுகம் போன்றவை இந்தியாவுக்குக் கொடுக்கப்படுகின்றன. இதனூடாக நாட்டின் ஒரு பகுதி இந்தியாவிடம் உத்தியோகபூர்வமாக ஒப்படைக்கப்படுகின்றது.

இந்தத் திட்டத்தை அமைச்சர்கள் பலரும் எதிர்த்துள்ளனர். நாம் நடத்தும் மே தினக் கூட்டத்தில் இதற்கான பாரிய எதிர்ப்பை மக்கள் வெளிப்படுத்துவார்கள்.

ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்த பலரும் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

வரலாற்றில் பதியப்படும் மே தினக் கூட்டமாக இந்தக் கூட்டம் அமையும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ)



# ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை மே 15-ம் திகதியே கிடைக்கும்

## ஹர்ஷ டி சில்வா தகவல்

(கொழும்பு)

இலங்கைக்கு மறுக்கப்பட்டிருந்த ஜி.எஸ்.பி பிளஸ் Generalised Scheme of Preferences (GSP) Plus வரிச் சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் எதிர்வரும் மே மாதம் 15ஆம் திகதி உத்தியோகபூர்வமாக உறுதி செய்யுமென்று எதிர்பார்ப்பதாக வெளிவிவகார பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

மனித உரிமை விடயங்கள் முறையாக கையாளப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் இலங்கைக்கு வழங்கப்பட்டிருந்த ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகையை 2010ஆம்ஆண்டு, ஐரோப்பிய ஒன்றியம் இடைநிறுத்தியதனால் நாட்டிற்கு 150 தொடக்கம் 200 மில்லியன் யூரோ வருமானம் இழக்கப்பட்டது.

ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகையை இலங்கைக்கு மீண்டும் வழங்குவது தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்தின் பாராளு மன்றத்தில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பு குறித்து விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் வெளிவிவகார அமைச்சில் நடத்தப்பட்டது. இதில் பிரதியமைச்சர் உரையாற்றினார்.

இலங்கைக்கு ஜி.எஸ்.பி வரிச்சலுகை வழங்கப்படக் கூடாது எனும் பிரேரணைக்காக ஐரோப்பிய ஒன்றியத்தின் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதில் 751 பாராளுமன்ற உறுப்பினர்களில் பிரேரணையை எதிர்த்து 436 பேரும் பிரேரணைக்கு ஆதரவாக 119 பேரும் வாக்களித்தனர். மேலும் 22 பேர் வாக்களிப்பிலிருந்து விலகியிருந்தனர் என்றும் பிரதியமைச்சர் ஹர்ஷ விளக்கமளித்தார்.



இலங்கை அரசாங்கம் மீது ஐரோப்பிய ஒன்றியம் கொண்டுள்ள நம்பிக்கையின் வெளிப்பாடாகவே இந்த வெற்றி எமக்கு கிடைத்துள்ளது. இலங்கைக்கு எதிராக வாக்களித்த நாடுகள் இலங்கை அரசாங்கம் மீது எவ்வித தனிப்பட்ட ஆதங்கங்களையும் கொண்டிருக்கவில்லை. அவை தமது உள்நாட்டுப் பிணக்குகள் மற்றும் வலுவான கம்யூனிசக் கொள்கை போன்ற காரணங்கள் காரணமாகவே தமது பாரம்பரிய வாக்கெடுப்பு முறைப்படியே எதிர்த்தோ அல்லது வாக்கெடுப்பிலிருந்து விலகியோ இருந்தன என்றும் அவர் தெரிவித்தார்.

உலக வங்கியின் நடைமுறை விதிகளுக்கு அமைவாக மூன்றாம் உலக நாடுகளின் தனிநபர் வருமானம் 4,036 யூரோ அடிப்படையில் குறைவடைந்துள்ளமையைக் காரணம் காட்டியே இலங்கைக்கு ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை கிடைக்கப்பெற்றது.

இழக்கப்பட்ட ஜீ.எஸ்.பி வரிச்சலுகை மீளக் கிடைத்தாலும் ஆகக்கூடியது மூன்று வருடங்களுக்கு மட்டுமே இந்த வரிச்சலுகை இலங்கைக்கு கிடைக்கும். நாட்டின் ஏற்றுமதி அதிகரித்து தனி நபர் வருமானம் கூடியதும் ஐரோப்பிய ஒன்றியம் தொடர்ந்தும் இலங்கைக்கு இச்சலுகையை வழங்காது என்பதனால் இதற்கான வேலைகளை ஆரம்பிக்குமாறு பிரசல்ஸிலுள்ள இலங்கைத் தூதுவருக்கு நான் ஆலோசனைகளை வழங்கியுள்ளேன் என்றும் பிரதியமைச்சர் தெரிவித்தார்.

இச்சூழ்நிலையை சாதகமாகப் பயன்படுத்தி அடுத்த கட்டமாக ஐரோப்பிய ஒன்றியத்துடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கான களத்தை உருவாக்கும் முயற்சியில் இலங்கை அரசாங்கம் கவனம் செலுத்தவுள்ளது என்றும் பிரதியமைச்சர் ஹர்ஷ தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து எதிர்வரும் இரண்டு வருடங்களில் பிரித்தானியா விலகிச் செல்லும். இதனால் பிரித்தானியாவின் ஏற்றுமதி சந்தையை இலக்காகக் கொண்டு, வேறு வர்த்தக ஒப்பந்தங்களை முன்னெடுப்பது தொடர்பில் அரசாங்கம் ஆராயும் என்றும் அவர் தெரிவித்தார்.

பொருளியல் இராஜதந்திரத்தை அடிப்படையாகக் கொண்டு நாடுகளை ஒன்றிணைப்பதற்காக இலங்கை அரசாங்கம் பாரிய திட்டங்களை தீட்டியிருப்பதாகவும் பிரதியமைச்சர் தெரிவித்தார்.

சில பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்கினை வழங்குவதற்கு முன்னதாக ஜி.எஸ்.பி.பிளஸ் மூலம் கிடைக்கும் இலாபத்தின் குறிப்பிட்ட சதவீதத்தை தொழிலாளிகளுக்கு வழங்குவதற்கு உடன்படுமாறு இலங்கையை நிர்ப்பந்தித்தனர். அச்சந்தர்ப்பத்தில் தனிப்பட்ட தீர்மானத்தையோ பொய் வாக்குறுதிகளையோ வழங்க நான் விரும்பாத தால் அவற்றுக்கு உடன்பட மறுத்துவிட்டேன் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## மதில் விழுந்து சிறுமி மரணம்

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏறாவூர் 4ஆம் குறிச்சியிலுள்ள வீட்டு மதில் சரிந்து ஏழு வயதுச் சிறுமி மீது விழுந்ததில், அச்சிறுமி பலியாகியுள்ளாரென, ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர். நேற்று சனிக்கிழமை முற்பகல் நடந்த இச்சம்பவத்தில், படமாளிகை வீதியைச் சேர்ந்த சண்முகராசா ஷாறுக்கா (வயது 7) என்ற சிறுமியே உயிரிழந்தார். சிறுமியும் அவரது சகோதரனும் விளையாடிக் கொண்டிருந்த போது இவ் விபத்து இடம்பெற்றுள்ளது. இந்த மதில் கடந்த 4 நாட்களுக்கு முன்னரே கட்டி முடிக்கப்பட்டது என்று வீட்டுரிமையாளர் தெரிவித்தார்.

படுகாயமடைந்த சிறுமியை, ஏறாவூர் ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போதும் ஏற்கனவே சிறுமி உயிரிழந்துவிட்டாரென, வைத்தியசாலை அத்தியட்சகர் எம்.எச்.எம். தாரிக் தெரிவித்தார். (இ)

## மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்தக் கோரிக்கை

(கொழும்பு)

நிலவுகின்ற வரட்சியான காலநிலை காரணமாக மின்சாரத்திற்கான கேள்வி அதிகரித்திருப்பதை அவதானிக்க முடிவதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதன்காரணமாக மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துமாறு மின்சாரம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சின் அபிவிருத்திப் பணிப்பாளர் சுலக்ஷன ஜயவர்தன பொதுமக்களிடம்வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ)

## வெளிநாட்டு தயாரிப்பு கைக்குண்டுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

கைக்குண்டு ஒன்றை வைத்திருந்த பிரஜை ஒருவர் அம்பலாங்கொடை, பொல்வத்தை பிரதேசத்தில் வைத்து நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பலாங்கொட, பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டுடன் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பலாங்கொடை பிரதேசத்தை சேர்ந்த 30 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பலாங்கொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (இ)

## கொழும்பு, கண்டியில் மட்டும் மேதினத்தை முன்னிட்டு 16 கூட்டங்கள் ஏற்பாடு

(கொழும்பு)

சர்வதேச தொழிலாளர் தினமான மே தினத்தில் கொழும்பு மற்றும் கண்டி பகுதிகளில் 16 மே தின கூட்டங்கள் இடம்பெறவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மே தினத்தின் போது சட்டம் மற்றும் ஒழுங்கு என்பவற்றை செயற்படுத்த 2,600 பொலிஸார் நியமிக்கப்பட்டுள்ளதுடன் 1,500 போக்குவரத்து பொலிஸாரும் நியமிக்கப்பட்டுள்ளனர். (இ)

## 7000 தனியார் பேருந்துகள் மே தினத்திற்காகத் தயார்

இம்முறை மே தினத்துக்காக அரசியல் கட்சிகள் 7 ஆயிரம் பேருந்துகள் பெற்றுக்கொள்ள தயாராகியுள்ளதாக தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. இதில் அதிகளவு பேருந்துகளை ஐக்கிய தேசியக் கட்சி கேட்டுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார். (இ)

## 18 கிலோ கஞ்சாவுடன் 6 பேர் கைது

(கொழும்பு)

தணமல்வில, எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தில் உலர்த்தப்பட்ட கஞ்சா போதைப் பொருள் தொகையை தம் வசம் வைத்திருந்த 6 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் புத்தல முகாம் அதிகாரிகள் மேற்கொண்ட தேடுதலில் இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் வசம் இருந்து 18 கிலோ கிராம் கஞ்சாவை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். சந்தேக நபர்கள் தணமல்வில பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PV 94034

# G.C.E. O/L பரீட்சையில் சித்தியடையவில்லையா? இதோ!! இதற்கான அரிய சந்தர்ப்பம்!!

**சாதாரண தரத்திற்கான நாள் வகுப்பு இல்லை. வாழ்க்கை தேர்ச்சிக்கான பாடசாலை.**

உங்களை தகுந்தமுறையில் 9'A' தர சித்தியடைய வைப்பதே எமது நோக்கம். தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் சிறப்பாக கற்பிக்கப்படும். சகலவிதமான வசதிகளுடன்கூடிய காலை நேர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

## திங்கள் முதல் சனி வரை தங்குமிடவசதியுடனான கற்கை

பாடநெறிக் கட்டணம் Rs.12,000/= +

சிங்கள பாடநெறி இலங்கை மொழிகள் திணைக்களத்தின் விஷேட விரிவுரையாளர் லசித் நலந்த என்பவரால் கற்பிக்கப்படும்.

தமிழினை தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கு நவீன கற்பித்தல் முறைகள் ஊடாக விரைவாகவும் சரியாகவும் சிங்களத்தில் உரையாடுவதற்கு பொருத்தமான முறையில் இலங்கை அரச கரும மொழிகள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வடிவமைக்கப்பட்ட பயிற்சிநெறி.

ஆறு மாதகாலப் பகுதியில் 20 நாட்களுக்கு வெப்தள பொறியியல் கற்கை நெறியும் பெண்மாணவிகளுக்கு அழகுக்கலை கற்கை நெறியும் கற்பிக்கப்படும்.

## Hot Line : 0715 669 641, 0771529731

இப்பயிற்சி நெறியை தொடர விரும்புபவர்கள் உங்களது பெயர், முகவரியை முன்கூட்டியே பதிவுசெய்யவும்.

**SMS: 075 4933349**

திங்கள் முதல் சனி வரை
மு.ப. 7.30 முதல் பி.ப 9.30 வரை
www.bloomingbudsecampus.com

**இன்றே எங்களுடன் இணையுங்கள்**

## BLOOMING BUDS E CAMPUS DAYTIME SCHOOLS

| | | |
|---|---|---|
| No.5, Rathmalyaya, Puttalam. T.P: 0766409641 | No.390/2/1, Baseline Road, Dematagoda. T.P.: 0112677641, 0774690044, 0771529731 | No.40, Kandy Road, Dalugama, Kelaniya. T.P: 0112912641 |

## பயிற்சி மூலம் ஆசிரியர்களை சேர்த்துக்கொள்ளல்

**English Medium ( Gr 1-11) All Subject 12 மாதங்களுக்கு**

**தொடர்புகள் : கௌணிய, புத்தளம், யாழ்ப்பாணம், சுதுமலை**

### தகைமைகள்

1. 18 தொடக்கம் 35 வயது வரை ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
2. க.பொ.த சாதாரண தரம் 6 பாடங்களில் திறமை சித்தி மற்றும் க.பொ.த உயர்தரம் படித்திருக்க வேண்டும்.
3. நேர்முகப்பரீட்சையில் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு தெமட்டக்கொட, புத்தளம், யாழ்ப்பாணம், சுதுமலை ஆகிய இடங்களில் 10 மாதங்கள் பயிற்சி கொடுக்கப்படும்.
4. பயிற்சிக் காலத்தில் 1 தொடக்கம் 11ஆம் வகுப்பு வரை உள்ள தனியார் பாடசாலைகளில் பயிற்சி கொடுக்கப்படும். (English medium)
5. உங்களது விண்ணப்பத்தை பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், தராதரப்பத்திரம்

குறிப்பு : பிரதி எடுத்து அத்துடன் 9x4 வடிவமுள்ள தபாலுறையில் 45 ரூபா முத்திரையும் தபாலுறையின் மேல் மூலையில் 1 தொடக்கம் 11 ஆம் வகுப்பு வரை என்று எழுதி பதிவுத்தபாலில் அனுப்பவும். பாடங் களை பயிற்றுவிக்க ஆசிரியர்களை சேர்த்து பயிற்சி கொடுத்தல் ஒவ் வொரு மாவட்டத்திலிருந்தும் பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கோரப் படுகின்றது.

### தகுதி

- ஒரு நாள் செய்கைப்பயிற்சி வகுப்பு தெமட்டக்கொடை காரியாலயத்தில் நடைபெறும்.
- ஆங்கில பாடத்தில் குறைவானவர்களுக்கு 60 நாட்களில் ஆங்கில பயிற்சிகொடுக்கப்படும் மற்றும் கணனி கற்கைநெறி (இலவசமாக Diploma)
- பயிற்சி கிழமையில் 5 நாட்கள் வீதம் 10 மாதத்திற்குக்கொடுக்கப்படும் பயிற்சியின் பின்னர் தகுதியானவர்களுக்கு அப்பகுதியில் உள்ள பாடசாலைகளில் வேலை பெற்றுக்கொடுக்கப்படும்.
- (போயா தினம் உட்பட அரசாங்க விடுமுறை தவிர ஏனைய நாட்கள் காலை 8.30 தொடக்கம் 5.00 வரை ) வேலை நாட்களாகும்.




சிங்கள கல்வி மற்றும் கணனி கற்கை நெறியும் இணைக்கப்பட்டுள்ளது ஆசிரியர் பயிற்சி டிப்ளோமா சிங்கள டிப்ளோமா (பேசும் ஆங்கிலம் அடங்கியது) ஆங்கில இலக்கிய டிப்ளோமா சுயத்திறன் விருத்தி டிப்ளோமா என்பன இலவசமாக கற்பிக்கப்படும்

பயிற்சியின் பின்னர் மாதாந்தக் கட்டணம் ரூபா 34,500.00 Allowance ஐ கொடுத்து உங் களை எங்கள் நிறுவனத்தின் சிறந்த ஆசிரியர்களாக தேர்ந்தெடுக்க நாங்கள் தயார்

B.B.I E Campus
Teacher Training School
178 Thavadi Road
Sudumale South
Sudumale
Jaffna

தொலைபேசி :- 0715669641/ 0771529731/ 0112912641

பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டிய முகவரி
Officer B.B.I E campus, No.40, Kandy Road,
Dalugama kelaniya

**Hot Line 0715669641 T.P:0112912641**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலி முகத்திடலில் கடல் தெரியாது

## மகிந்த அணி அதீத நம்பிக்கை

காலி முகத்திடலில் இடம் பெறும் தமது மே தினக் கூட்டத்தில் கடல் தெரியாதவாறு மக்கள் கூட்டம் எவ்வாறு திரளப் போகிறது என்பதை பார்த்துக்கொள்ளுமாறு ஒன்றிணைந்த எதிரணி தெரிவித்துள்ளது.

களுத்துறையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். மே தினத்தன்று காலி முகத்திடலை நிரப்ப முடியுமா? என சிலர் கேள்வி எழுப்புகின்றனர். காலி முகத்திடலில், மணல் தெரியாதவாறும், கடல் தெரியாதவாறும் மக்கள் கூட்டம் எவ்வாறு திரளப் போகிறது என்பதை பார்த்துக் கொள்ளுமாறு ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

மேலும், தமது மேதினக் கூட்டத்துக்கு வரும் மக்கள் கூட்டத்தைப் பார்த்து, அச்சமடையாவிட்டால் தேர்தலுக்கு செல்லுமாறும் அவர் அரசாங்கத்துக்கு சவால் விடுத்துள்ளார். (இ)

## கதிரைவேற்பிள்ளையின் 110 ஆவது ஆண்டு நினைவுதினம்

சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளையின் 110 ஆவது ஆண்டு நினைவுதினம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு சதாவதானி அரங்கில் முதர்மலிங்கம் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராகதகைசார் ஓய்வுநிலைப் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம், கௌரவ விருந்தினராக சதாவதானி சிக்கன கூட்டுறவுச் சங்க உபதலைவர் சோ.கங்காதரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.(இ-3-60)

நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை
கலைமாமணி
Dr.S.S.சர்மா குருஜீ
077 784 1558
(8168)


# நொதேர்ண் சென்றல் வைத்தியசாலை

யாழ்ப்பாணத்தில் நவீன தொழில்நுட்பத்துடனான அனைத்து வசதிகளையும் கொண்ட ஒரே ஒரு வைத்தியசாலை

**லப்பராஸ்கோபி (Laparoscopy) என்றால் என்ன?**

வயிற்று உட்பகுதியுறுப்புக்களை வயிற்றில் சிறிய துளைகளிட்டு மெல்லிய குழாயினை உட்செலுத்தி பரிசோதிக்கும் ஒரு தொழில்நுட்பமாகும்.

**வழமையான சத்திரசிகிச்சையிலிருந்து லாப்ரோஸ்கோபி எவ்வாறு வேறுபடுகின்றது?**

- பெரிய வெட்டுக்காயங்கள் வராது
- சத்திர சிகிச்சையின் பின்னர் விரைவில் இயல்பு நிலைக்குச் செல்லமுடியும்
- கிருமித்தொற்றுகள் ஏற்படும் வாய்ப்புகள் மிகக்குறைவு
- நீண்ட நாட்களாக வைத்தியசாலையில் தங்கியிருக்கத் தேவையில்லை


பின்வரும் உடற்பரிசோதனைகளுடன் சத்திர சிகிச்சைகளையும் இத்தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி செய்துகொள்ளலாம்.

- Appendicectomy
- Diagnostic laparoscopy
- Cholecystectomy
- Hernia
- Hydrocele
- Paraumblical hernia
- Inguinal hernia
- Endometriosis
- Laparoscopic Radical Trachelectomy (LRT)
- Ovarian cyst



**வெரிகோஸ் வெயின் (Varicose vein) பிரச்சினையிலிருந்து உடனடித் தீர்வு**

- உங்களுக்கு அவ்வப்போது கால் பகுதியில் வலியும்,வேதனையும், குடைச்சல் போன்ற உணர்வும் ஏற்படுகின்றதா?
- இதனை நீங்கள் அலட்சியப் படுத்துபவரா?
- உங்களுக்கு இவ்வறிகுறிகள் இருப்பின் அது வெரிகோஸ் வெயின் (Varicose vein) என்ற நோய்நிலையாகவும் இருக்கலாம்.




கவலை வேண்டாம்!

வெரிகோஸ் வெயின் பிரச்சனையிலிருந்து உடனடித் தீர்வு

நொதேண் சென்றல் வைத்தியசாலையில் இப்பொழுது அதி நவீன லேசர் தொழில்நுட்பம்!

வெட்டுக்காயங்களின்றி, குறுகிய நேரத்தில் சிகிச்சை பெற்றுக்கொள்வதுடன் வைத்தியசாலையில் தங்கியிருக்கத் தேவையில்லை.

**நொதேண் சென்றல் கண் சிகிச்சை மையம்**

**Northern Central Hospital EYE CARE**

- வடக்கின் முன்னணி கண் சத்திரசிகிச்சை வல்லுனர்களின் ஆலோசனைகள்
- இலவச கண் பரிசோதனைகள் (Vision testing)
- பார்வைச்சக்திக்குரிய சோதனை (Optical biometry)
- காலதாமதமின்றிய சத்திரசிகிச்சை முற்பதிவுகள்
- Cataract சத்திரசிகிச்சைக்கு வேண்டிய உயர்தர லென்ஸ் மற்றும் அனைத்து பொருட்களும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரே இடம்.
- நவீன லேசர் முறையில் மிகக் குறுகிய நேர சத்திரசிகிச்சை
- சத்திரசிகிச்சையின் பின் வைத்தியரின் ஆலோசனை தவிர விடுதியில் தங்கிருக்கத் தேவையில்லை





**Northern Central Hospital**
342, Palaly Road, Thirunelvely, Jaffna.
T.P: 021 221 9988, 021 221 9977, 021 222 2263 Fax: 021 221 6677
E-mail: nchjaffna@gmail.com Website: www.nchjaffna.com

(சி-8410)


# இராசி பலன்

30.04.2017
(சித்திரை 17, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு
சதுர்த்தி முற்பகல் 8.57 மணிவரை
மிருகசீரிடம் பிற்பகல் 1.36 மணிவரை
சுபநேரம் 8.58- 10.28 மணிவரை
இராகுகாலம் 4.28- 5.58 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சுக் புத | சூரி | செவ் | சந் |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் விசாகம்- அனுசம் | | |
| | | | ராகு |
| | சனி | | குரு |

**மேடம்:** சகோதரர்களின் ஒத்துழைப்பால் நல்ல காரியமொன்றை செய்து முடிப்பீர்கள், சவால்களை சமாளிக்கும் நாள், போசன சுகமுண்டு, கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**இடபம்:** சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம், வருமானம் அதிகரிக்கும் நாள், பொதுவாழ்வில் மதிப்பும், மரியாதையும் உயரும் நாள்.

**மிதுனம்:** மகிழ்ச்சி அதிகரித்து மன மாற்றம் காணும் நாள், ஒரு வகையில் சிக்கனமான இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் ஏற்படலாம்.

**கடகம்:** சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள்.

**சிம்மம்:** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தொழிலில் வருமானத்தை அதிகரிக்க புதிய வழியைக் கையாள்வீர்கள், கௌரவமான நாள்.

**கன்னி:** கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், புதிய திட்டங்கள் தீட்டி ஆதாயம் காண முற்படுவீர்கள், ஆரோக்கியமான நாள், நண்பர்களின் ஒத்தாசைகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**துலாம்:** வெளியூர் பயணங்களால் ஆதாயமுண்டு, தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், தேக ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.

**விருச்சிகம்:** வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**தனுசு:** முயற்சிகளில் முன்னேற்றம் பெறுவீர்கள், தனவரவுகள் திருப்திகரமாக அமையும், நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், போசன சுகமுண்டு.

**மகரம்:** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**கும்பம்:** மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், உறவினர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும்.

**மீனம்:** சுப காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வார்த்தைகளில் நிதானம் தேவை, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், பயணங்களால் பலனுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறு அமைப்புக்கள் இணைந்து யாழில் மாபெரும் மேதின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஆசிரியர் சங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம், கிராமிய உழைப்பாளர் சங்கம், அரசாங்க செயற்பாட்டுக் குழு, தமிழ் மக்களின் வாழ்வுரிமைக்கான செயற்பாட்டு மையம், சமூக விஞ்ஞான ஆய்வு மன்றம் ஆகிய ஆறு அமைப்புக்கள் ஒன்றிணைந்து நாளை திங்கட்கிழமை மாபெரும் மேதின நிகழ்வை நடத்தவுள்ளன.

காலை 9.30 மணியளவில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முன்றலில் ஆரம்பமாகும் பேரணி கந்தர்மடம் ஆத்திசூடி வீதி, பலாலி வீதியூடாகப் பல்கலைக்கழக முன்றலை மீளச் சென்றடையும். அதன் பின்னர் பல்கலைக்கழக முன்றலில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் சி.தங்கராஜா தலைமையில் மேதினக் கூட்டம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து தொழிற் சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்களின் தலைவர்களின் உரைகள் இடம்பெறும்.

தேசம், இறைமை, சுயநிர்ணய அடிப்படையில் அரசியல் தீர்வினை முன்வை, வடக்கு-கிழக்குத் தமிழ் மக்களின் பாரம்பரியப் பிரதேசம் என்பதை அங்கீகரித்து அரசியல் கைதிகளை விடுதலை செய், காணாமல் போனோருக்கு நீதி வழங்கு, மக்களிடம் பறித்த அனைத்து நிலங்களையும் உடனடியாகக் கையளி உள்ளிட்ட 15 கோரிக்கைகளை முன்வைத்து இந்த மாபெரும் மேதினப் பேரணி இடம்பெறவுள்ளது.

இதில் உழைக்கும் மக்கள், தமிழ்த் தேசிய சக்திகள், முற்போக்கு ஜனநாயக சக்திகள் என அனைத்துத் தரப்பினரையும் கலந்து கொள்ளுமாறும் அழைப்பு விடுத்துள்ளனர். (இ-4)

## பேருந்து தரிப்பிடத்தில் கற்களால் சிரமம்



வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலகத்துக்கு அருகில் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சால் அமைக்கப்பட்ட பேருந்து தரிப்பிடத்தை பயன்படுத்த முடியாதபடி கற்கள் பறிக்கப்பட்டுள்ளன. குறித்த பேருந்து தரிப்பிடத்திற்குப் பின்னால் அரச திணைக்களம் ஒன்றுக்கு சொந்தமான கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்தக் கட்டட வேலைகளில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## ஒடுக்குமுறைகளை எதிர்த்து புரட்சிகர மேதினப் பேரணி


மகத்தான ஒக்டோபர் சோசலிசப் புரட்சியின் பாதையில் அனைத்து ஒடுக்குமுறைகளையும் எதிர்த்து மக்கள் அதிகாரத்தை வென்றெடுக்க அணிதிரள்வோம் எனும் தொனிப் பொருளில் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி தனது புரட்சிகர மேதினப் பேரணியையும் பொதுக் கூட்டத்தையும் யாழ். நகரில் நடத்துகிறது. பேரணி பி.ப 3.30 மணியளவில் கொக்குவில்சந்திக்கு அருகில் இருந்து ஆரம்பித்து காங்கேசன்துறை வீதிவழியாகச் சென்று ஆஸ்பத்திரி வீதி,முனீஸ்வரன் வீதி வழியாகயாழ். வீரசிங்கம்மண்டபத்தைச் சென்றடையும். அங்கு மேதினக் கூட்டம் பி.ப 5 மணியளவில் கட்சியின் வட பிரதேச செயலாளர் கா.செல்வம் கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் கட்சியின் பொதுச்செயலாளர் சி.கா.செந்திவேல் பிரதான உரையாற்றுவார். மேலும் கட்சியின் அரசியல் குழு உறுப்பினர்கள் க.தணிகாசலம், சோ.தேவராஜா உட்பட த. ஸ்ரீபிரகாஷ், என்.பிரதீபன், கா.பஞ்சலிங்கம், பொ.முருகேசு, இ.தவராஜா, ச. தனுஜன் ஆகியோர் உரையாற்றுவர். இசைப் பாடல்கள் இடம்பெறும். (இ)

## கும்பாபிஷேகம்

வடமராட்சி மாலிசந்தி பிள்ளையார் ஆலய மஹா கும்பாபிஷேகம் இன்று காலை நடைபெறும்.(இ-60)




## பருத்தித்துறையிலுள்ள மரபுரிமைச் சின்னம் அழிவடையும் நிலையை எட்டியுள்ளது



வடமராட்சி பருத்தித்துறையிலுள்ள மரபுரிமைச்சின்னம் அழிவடையும் நிலையினை எட்டியுள்ள போதிலும் அது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தவில்லை என பொதுமக்களினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பருத்தித்துறை தும்பளை வீதியிலுள்ள தெரு மூடி மடமே இவ்வாறு அழிவடையும் நிலையிலுள்ளது. இத்தெரு மூடி மடம் மரபுரிமைச் சின்னமாக பாதுகாக்கப்பட்டு வந்த நிலையில் தற்போது கவனிப்பாரற்றுக் காணப்படுகிறது.

எனவே இம்மரபுரிமைச்சின்னத்தைப் பேணிப் பாதுகாப்பதற்கு பருத்தித்துறைப் பிரதேச செயலகமோ/தொல்பொருள் திணைக்களமோ நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கேட்டுள்ளனர். (இ-3-60)

## வெயிலுக்கு வெள்ளரி நல்லது



கொளுத்தும் வெயிலால் வெள்ளரிப்பழ வியாபாரம் சூடுபிடித்துள்ளது. இந்நிலையில் மாற்றுத்திறனாளி ஒருவர் மூன்று சக்கர மோட்டார் சைக்கிளில் நடமாடும் வெள்ளரிப்பழ வியாபாரத்தில் நம்பிக்கையோடு ஈடுபட்டுள்ளார். (இ-89)

## சித்த ஆயுர்வேத மருத்துவக்கல்லூரி தொடர்பில் முதலமைச்சர் தலைமையில் கருத்து பரிமாற்றம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியின் தற்போதைய நிலைமை பற்றி கருத்து பரிமாற்றக் கூட்டம் முதலமைச்சர் அலுவலக கேட்போர் கூடத்தில் முதலமைச்சர் தலைமையில் நேற்று முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகியது.

தற்போதைய நிர்வாக சபையின் அங்கத்தவர்களும், துறைசார் நிபுணர்களும் சமுகம் அளித்திருந்தனர். அத்துடன் சுதேச வைத்திய பணிப்பாளரும் சமுகம் அளித்திருந்தார்.

அவர்கள் யாவரும் பின்வரும் விடயங்களில் கருத்தொருமைப்பாட்டைக் கொண்டிருந்தார்கள்.

1)கல்லூரி, சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி என தொடர்ந்து விளங்க வேண்டும் என்று ஏற்றுக் கொண்டார்கள்.

2)இதற்கானபாட விதானம் வைத்திய அமைச்சின் அங்கீகாரம் பெறவேண்டும் என்றும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

3)இதனைக் கொண்டு நடத்துவதற்கு ஒரு புதிய இடைக்கால சபையை உருவாக்க முடிவு எடுக்கப்பட்டது.

4)அந்த சபை அங்கத்தவர்களுக்கு என ஒரு கடமை வரையறை இரு வாரத்தினுள் தயாரிக்கப்படவேண்டும் என்றும் முடிவு எடுக்கப்பட்டது.

5)பின்வருவோர் இக்குழுவில் அங்கத்துவம் வகிக்க வேண்டும் என்று ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

1.சு.இரவீந்திரன், செயலாளர், கல்வி அமைச்சு (தலைவர்)

2.பேராசிரியர் பு.மிகுந்தன்

3.Dr.மு.திருலோகமூர்த்தி

4.Dr.து.ஜெயலன்

5.Dr.சு.லக்ஷ்மணஜயர்

6.கலாநிதி திருமதி விவியன் சத்தியசீலன்

7.பேராசிரியர் மு.தேவராசா(செயலாளர்)

6)மேற்படி குழு புதிய பொதுச்சபையை உருவாக்குதல் சம்பந்தமாகவும்,நிர்வாக சபையை உருவாக்குதல் சம்பந்தமாகவும்,அதிபரை நியமிப்பது சம்பந்தமாகவும், 3ஆம் 4ஆம் 5ஆம் ஆண்டுகளில் பயின்று வந்த மாணவ. மாணவியர் தொடர்ந்து படித்து பாடப்பயிற்சித் தொடரை முடிவுறுத்துதல் சம்பந்தமாகவும், பாடத்திட்டங்கள் சம்பந்தமாகவும், சித்தியடைந்தவர்களுக்கு பட்டம் வழங்குதல் சம்பந்தமாகவும் மேலும் பல விடயங்கள் சம்பந்தமாகவும் விசாரித்து 3 மாதங்களுள் அறிக்கை தரப் படவேண்டும் என்று கூடியிருந்தோரால் முடிவெடுக்கப்பட்டது.

மேலும் மேற்படி இடைக்கால குழு, மாணவர்களுடனும் சபை நிர்வாகிகளுடனும் விரிவுரையாளர்களுடனும்,கல்லூரியின் பழைய மாணவர்களுடனும், வட மாகாண சுதேச வைத்திய பணிப்பாளருடனும் மேலும் தொடர்புடைய மற்றவர்களுடனும் பேசி தேவையான ஆலோசனையையும் பெற்று அவர்களின் அபிப்பிராயங்களையும் பெற்று அறிக்கை தரவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

மேற்கூறப்பட்ட விடயங்கள் வருகைதந்த அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டன என முதலமைச்சர் அலுவலகம் அறிவித்துள்ளது. (இ)

## முற்போக்கு தமிழ்த்தேசிய கட்சியின் மே தினக் கூட்டம் சங்கிலியன் பூங்காவில்

வடக்கும் தெற்கும் சங்கமிக்கும் மனிதநேய மேதினம் என்னும் தொனிப் பொருளில் எதிர்வரும் முதலாம் திகதி உலக உழைப்பாளர்கள் தினத்தினை ஜனநாயக தேசிய முன்னணியுடன் இணைந்து சங்கிலியன் பூங்கா (கிட்டு பூங்கா) மைதானத்தில் நடத்துவதற்கு முற்போக்கு தமிழ்த் தேசிய கட்சி தீர்மானித்துள்ளதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் எஸ். விஜயகாந் அறிவித்துள்ளார். ஜனநாயகத் தேசிய முன்னணியின் போசகர் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்னவும் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சத்துருசேனாரட்னவும் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றவுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)





நெல்லியடி பொலிஸ் நிலையத்தின் மாதாந்த அணிவகுப்புமரியாதை அண்மையில் நடைபெற்றது. இதில் பொலிஸாரின் அணிவகுப்பு மரியாதையினையும் காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் டி.கே. பிரியந்த துவிச்சக்கர வண்டிகளைப் பரிசோதிப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-மகாலிங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்ற உத்தரவை கிழித்து அவமதித்ததை வேடிக்கை பார்த்த பொலிஸாருக்கு அழைப்பு



(கொழும்பு)

திருகோணமலை நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட கட்டளையை கிழித்து, காலுக்குக் கீழே போட்டு மிதித்து, தகாத வார்த்தைகளால் பேசிய சம்பவத்தைப் பார்த்துக் கொண்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்களை, மே மாதம் 2ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு, திருகோணமலை நீதிமன்றம், நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது. கடந்த 25ஆம் திகதி, கிழக்கு மாகாண சபைக்கு முன்னால் வேலையில்லாப் பட்டதாரிகள் முன்னெடுத்த ஆர்ப்பாட்டத்தின் போது, திருகோணமலை தலைமையகப் பொலிஸாரினால் ஆர்ப்பாட்டத்துக்குத் தற்காலிகத் தடை உத்தரவு பிறப்பிக்குமாறு, நீதிமன்றத்தைக் கோரி விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டது. அவ்விண்ணப்பத்தை விசாரித்த திருகோணமலை நீதிமன்ற பிரதம நீதவான் எம்.எச்.எம்.ஹம்ஸா, அமைதியான முறையில் பொது மக்களுக்கும் பொதுச் சொத்துக்களுக்கும் பாதிப்புக்கள் ஏற்படாதவாறு நடந்து கொள்ளுமாறு, வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு கட்டளை பிறப்பித்தார். திருகோணமலை நீதிமன்றம் வழங்கிய கட்டளையை, வேலையில்லாப் பட்டதாரிகளின் ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவளித்த பௌத்த பிக்கு உள்ளிட்ட மூவர், தலைமையகப் பொலிஸாருக்கு முன்னால் கிழித்தெறிந்தனர். அவ்வேளையில், அச்செயற்பாட்டைப் பொலிஸார் பார்த்துக் கொண்டிருந்ததைக் கண்டித்து, திருகோணமலை சட்டத்தரணிகள் சங்கத்தால் நீதிமன்றத்துக்கு முன்னால், கவனயீர்ப்பு போராட்டமொன்று நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது. இதே வேளை, திருகோணமலை சட்டத்தரணிகள் சங்கத்தால் தலைமையகப் பொலிஸாரினால் கோவையிடப்பட்ட வழக்கினை நகர்த்தல் பிரேரணை மூலம் நீதிமன்றத்துக்கு அழைத்து விசாரணை செய்த போதே, திருகோணமலை பிரதம நீதவான் எம்.எச்.எம்.ஹம்ஸா, உதவி பொலிஸ் அத்தியட்சகர், தலைமையகப் பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் அவ்விடத்தில் கடமையாற்றிய பொலிஸ்பொறுப்பதிகாரிகளை, எதிர்வரும் 2ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கட்டளையிட்டார். (இ)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 14 செவ் 7இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:பட்டதாரி/ தனியார் தொழில்<br>தொ.இ: B/7268 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 36<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு : வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/6120 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L சொந்த தொழில்<br>தொ.இ: B/7270 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 40<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BA/ சொந்ததொழில்<br>தொ.இ: G/6121 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்:மிருகசீரிடம்<br>கி.பா: செவ் 8இல்<br>உயரம் : 5'5"<br>தகைமை/தொழில்:B.A அரசதொழில்<br>தொ.இ: B/7271 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: ரோகிணி<br>கி.பா: 37 செவ் 2 இல்<br>தகைமை/தொழில்: A/L ஆசிரியர்<br>தொ.இ: G/6122 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 37 சூரி, செவ் 7இல்<br>தகைமை/தொழில்: A/L/ அரசதொழில்<br>தொ.இ: B/7272 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 45 செவ் 12 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/6127 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

எமது கற்கைநெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.

**Excellent Teachers' Panel & Individual Attention**

**Diploma / Advanced Diploma in English**

ஓரளவு ஆங்கில அறிவு உள்ளவர்கள் மேலும் அறிவை விருத்தி செய்ய சிறப்பாக அமைக்கப்பட்ட கற்கைநெறி. ஆங்கில அறிவு, இலக்கணம், இலக்கியம் என விரிவாகக் கற்பிக்கப்படும்.

**Spoken English With Grammar - Quick Learning Course**

குறுகிய காலத்தில் ஆங்கிலத்தில் புலமை பெற விரும்புபவர்களுக்கு இது பொருத்தமானதாகும். பாடசாலை மாணவர்கள், தொழில்புரிவோர், ஆங்கிலம் கற்க விரும்புவோருக்கு உகந்தது.

**IELTS Life Skills A1 Exam - Sponsor / Settlement Visa**

மூலம் UK செல்பவர்களுக்கு British High Commission னால் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை

**IELTS (Academic / General ) Student Migration Visa**

மூலம் செல்பவர்களது Approved Centre for Registering Online (ORS) Candidates

**Spoken Sinhala**

சிங்களத்தில் சரளமாகக் கதைக்க விரும்புபவர்களுக்கு உகந்த முறையில் கற்பிக்கப்படும். மாணவர்கள், தொழில் புரிவோர், சிங்களம் கற்க விரும்புவோர் அனைவருக்கும்

**Diploma in Sinhala**

ஓரளவு சிங்கள அறிவு உள்ளவர்கள் மேலும் சிங்கள அறிவை விருத்தி செய்ய, சிங்களத்தினை மேலும் விரிவாகக் கற்றுக் கொள்ள விரும்புவோர்களின் தெரிவு.

**வகுப்புக்கள் ஆரம்பம்**

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

**Young Learners English (YLE)**

வயதெல்லை 7 - 15 உட்பட்ட மாணவர்களுக்கான சர்வதேசப் பரீட்சை உடன் University of Cambridge இனால் சான்றிதழ் வழங்கப்படும்.

Jaffna Branch :
No.15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna.
Tel.: 021 222 4550 | 076 3166 060

(சி-8418)

Hankanan, Jaffna.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாண அரசு யாருக்குமே அடிபணியாது



## அமைச்சர் மங்கள உறுதி

(கொழும்பு)

தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காணும் விடயத்தில் அரசாங்கம் யாருக்குமே அடிபணியப் போவதில்லை என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், "வெளிநாட்டுத் தலையீட்டைத் தமிழ்த் தலைமைகள் சிலர் கோரி வருகின்ற போதும் அவ்வாறான தேவை இல்லாமல் உள்ளக ரீதியிலேயே தீர்வை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. சர்வதேச நீதிபதிகளை அனுமதிக்கின்றோமா? இல்லையா? என்பது இப்போதைய பிரச்சினை அல்ல. தமிழர்களுக்கு விரைவில் நீதியைப் பெற்றுக் கொடுப்பதுவே இப்போதுள்ள முக்கிய பிரச்சினை.

இப்போது நீதித்துறை அரசியல் தலையீடு இன்றிச் சுதந்திரமாக இயங்கத் தொடங்கி விட்டது. எதிர்காலத்தில் கடந்த கால ஆட்சியைப் போன்ற மோசமான நிலைமை ஏற்படாது. தெற்கோ வடக்கோ எல்லோரும் இந்த நாட்டு மக்கள். அவர்கள் பாதிக்கப்பட்டால் அவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பது அவசியமாகும். அதைத்தான் நாம் செய்ய முற்படுகின்றோம். இந்த அரசு மீது நம்பிக்கை இழந்துள்ள வடக்கு-கிழக்குத் தமிழர்களின் நம்பிக்கையை இதன் மூலம் வென்றெடுப்போம். அனைத்து தமிழருக்கும் நீதி கிடைக்கும்" என அமைச்சர் மங்கள சமரவீர மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# மதுபானசாலையே எமது குறிக்கோள்

## நல்ல நிபுணத்துவ குழு



(கொழும்பு)

மட்டக்களப்பு, கல்குடாவில் தற்போது நிர்மாணிக்கப்பட்டுவரும் மதுபானசாலை தொடர்பாக பல எதிர்ப்புகள் எழுந்துள்ள நிலையில் இந்த மதுபானசாலையை நிர்மாணிக்க வேண்டும் என்று மட்டக்களப்பில் குழு ஒன்று உருவாகியுள்ளது.

இந்தக் குழுவின் மதுபான சாலை தொடர்பாக விளக்கம் அளிக்கும் கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் மட்டக்களப்பு பொதுநூலகத்தில் இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டு குறித்த குழுவின் உறுப்பினர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த நிபுணத்துவக் குழுவின் முக்கிய உறுப்பினர்கள் வெளிநாடுகளில் இருப்பதாகவும் இங்கு இந்த குழுவை சில வைத்தியர்கள், பொறியியலாளர்கள், வளவாளர்கள், புத்திஜீவிகள் என ஒரு சிலர் கடந்த 4 ஆம் மாதம் 12 ஆம் திகதியில் இருந்து இயக்கி வருவதாக தெரிவித்துள்ளனர். இந்த மதுபான சாலையில் வடிப்பது எதனோல் மட்டுமே. அது சாராயம் இல்லை. இதற்கு மக்களும் ஊடகவியலாளர்களும் ஆதரவளிக்க வேண்டும்.

நாங்கள் படித்த நிபுணத்துவக் குழு. எங்களுக்கு இந்த மதுபான தொழிற்சாலை மிக முக்கியமான ஒன்று. இதை தடை செய்வது மிகவும் வருத்தத்திற்குரிய விடயம்.

இந்தக் குழு மதுபானசாலையை அமைக்க வேண்டும் என்பதில் குறிக்கோளாக இருப்பதாகவும் இதன் மூலம் பல நன்மைகளைப்பெற முடியும் என்றும் இதற்காகவே தாங்கள் முன்வந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

பல காலமாக தாங்கள் செயற்படுவதற்கு நினைத்திருந்தும் தற்போது மதுபானசாலையை நிர்மாணிக்க வேண்டும் என்பதே தங்களது முதல் நடவடிக்கையாக எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# GMOA மீண்டும் போராட முஸ்தீபு

(கொழும்பு)

சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரியை பொதுச் சொத்தாக மாற்றுமாறு அரசாங்கத்துக்கு அழுத்தத்தைக் கொடுப்பதற்கு எதிர்வரும் மே 3 ஆம் திகதி அல்லது 5 ஆம் திகதி ஆகிய தினங்களுக்குள் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தமொன்றை நடத்தவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தப் போராட்டத்திற்கு அரசாங்கம் உரிய பதிலையளிக்காது போனால், எதிர்வரும் வெசாக் போயா தினங்களின் பின்னர் பாரிய தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளதாகவும் அச்சங்கம் அறிவித்தல் விடுத்துள்ளது.

இந்த தொழிற்சங்க நடவடிக்கைக்கு சுமார் 200 தொழிற் சங்கங்கள் ஆதரவு வழங்குவதாக தெரிவித்துள்ளதாகவும் அச்சங்கம் விடுத்துள்ள அறிவித்தலில் மேலும் தெரிவித்துள்ளது. (இ)




- 313 - ரோமப் பேரரசின் மன்னன் லிசீனியஸ் அனைத்து கிழக்கு ரோமப் பேரரசையும் ஒன்றாக்கி தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தான்.
- 1006 - மிகவும் ஒளி கூடிய சுப்பர்நோவா எஸ்.என் 1006 லூப்பஸ் என்ற விண்மீன் கூட்டத்தில் அவதானிக்கப் பட்டது.
- 1483 - இந்த நாளில் புளூட்டோ நெப்டியூனின் சுற்றுவட்டத்துள் வந்தது. இது அங்கு ஜூலை 23, 1503 வரை அங்கு இருந்தது.
- 1803 - ஐக்கிய அமெரிக்கா லூசியானா மாநிலத்தை பிரான்சிடம் இருந்து 15 மில்லியன் அமெரிக்க டாலருக்கு வாங்கியது.
- 1838 - நிக்கராகுவா மத்திய அமெரிக்கக் கூட்டமைப்பில் இருந்து விடுதலையை அறிவித்தது.
- 1900 - ஹவாய் ஐக்கிய அமெரிக்காவின் ஒரு பகுதியானது.
- 1945 - அடொல்ஃப் ஹிட்லர் தனது மனைவியுடன் தற்கொலை செய்து கொண்டார். சோவியத் படையினர் பெர்லினில் ஜேர்மனிய நாடாளுமன்றில் செங்கொடியை ஏற்றினர்.
- 1955 - இந்திய நடுவண் வங்கியான பாரத ரிசர்வ் வங்கியால் இந்திய இம்பீரியல் வங்கியின் பெயர் பாரத ஸ்டேட் வங்கி என மாற்றம் செய்யப்பட்டது.
- 1975 - வியட்நாம் போர்: கம்யூனிசப் படைகள் சாய்கோன் நகரைக் கைப்பற்றினர். தென் வியட்நாமியப் படைகள் நிபந்தனையின்றி சரணடைந்ததில் வியட்நாம் போர் முடிவுக்கு வந்தது.
- 1982 - திருச்சியில் பாரதிதாசன் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டது.
- 1991 - யாழ்ப்பாணம் நீராவியடியில் நிகழ்ந்த வெடி விபத்தில் 12 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர்.
- 1993 - ஜெனீவாவில் ஐரோப்பிய அணுக் கருவியல் ஆய்வு அமைப்பில் உலகளாவிய வலையமைப்பு பிறந்தது.
- 1999 - ஆசியான் அமைப்பில் கம்போடியா இணைந்து கொண்டது.
- 2006 - ஆப்கானிஸ்தானில் தலிபான்களால் கடத்தப்பட்ட சூரியநாராயணா என்ற இந்தியப் பொறியியலாளர் கழுத்து வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

பிறப்புகள்ஜதொகுஸ

- 1777 - கார்ல் ஃப்ரெடெரிக் காஸ், கணிதவியலர் (இ. 1855)
- 1870 - தாதாசாஹெப் பால்கே, இந்திய திரைப்படத்துறையின் முன்னோடி (இ. 1944)
- 1959 - சிரீபன் கார்ப்பர், கனடாவின் 22வது பிரதமர்
- 1961 - ஐசேயா தாமஸ், முன்னாள் அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

இறப்புகள்

- 1945 - அடொல்ஃப் ஹிட்லர், ஜெர்மனியை ஆண்ட ஆஸ்திரிய சர்வாதிகாரி (பி. 1889)
- 1961 - லோங் அடிகள், யாழ்ப்பாணத்தில் பணிபுரிந்த அயர்லாந்து அடிகள் (பி. 1896)

சிறப்பு நாள்

- வியட்நாம் - விடுதலை நாள் (1975)
- மெக்சிக்கோ - சிறுவர் நாள்

# வடக்கு காணி விடுவிப்பு குறித்து ஐ.நாவுக்கு இராணுவம் விளக்கம்

(கொழும்பு)

நல்லிணக்கம் மற்றும் வடக்கு காணி விடுவிப்பு குறித்து ஐக்கிய நாடுகள் அமைப்பின் அதிகாரிகளுக்கு இராணுவம் விளக்கம் அளித்துள்ளதாக இராணுவ ஊடகப் பிரிவு தகவல் வெளியிட்டுள்ளது.

கொழும்பை மையமாகக்கொண்ட ஐக்கிய நாடுகள் அமைப்பின் பிரதிநிதிகள் இராணுவத் தலைமையகத்தில் வைத்து கூட்டுப் படைகளின் கட்டளைத் தளபதி மகேஸ் சேனநாயக்கவை நேற்று முன்தினம் சந்தித்தனர்.

மேலும் கூட்டுப் படைகளின் கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டமைக்கு மகேஸ் சேனநாயக்கவுக்கு ஐக்கிய நாடுகள் அதிகாரிகள் வாழ்த்துச் தெரிவித்துள்ளனர். (இ-11)

# GMOA வுக்குத் தேவை அரசை வீழ்த்துவதே

## நெவில் பிரணாந்து விசனம்

(கொழும்பு)

நாட்டில் எழுந்திருந்த சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரி தொடர்பிலான நெருக்கடி நிலைமைக்கு அரசாங்கத்தினால் தீர்வு முன்வைக்கப்பட்டுள்ள போதும், மீண்டும் சைட்டத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முனைவதாயின், அவர்களது உள்நோக்கம் அரசாங்கத்தை வீழ்த்துவதாகும் என சைட்டம் நிறுவனத்தின் தலைவர் டாக்டர் நெவில் பிரணாந்து தெரிவித்துள்ளார்.

இந்த அரச வைத்தியர்கள் சங்கத்துக்கு அரசாங்கத்தை வீழ்த்துவதற்குத் தேவையாயின், அவர்கள் முதலாவதாக செய்ய வேண்டியது அரசியல் இயக்கமொன்றை ஆரம்பிப்பதாகும். சைட்டத்தின் பங்குகளை விற்பனை செய்வதற்குக்கூட அரசாங்கம் விதித்த கோரிக்கைக்கு நாம் இணங்கியுள்ள போதிலும், அரச வைத்திய அதிகாரிகள் கூச்சலிடுவதாயின் அது எம்மீதுள்ள பொறாமையின் காரணமாகவே ஆகும்.

இவர்கள் எவ்வளவுதான் கூச்சலிட்டாலும் அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு இவர்களினால் முடியாது.

இது வெறும் பிரயோசனமற்ற முன்னெடுப்புக்கள் மட்டுமே எனவும் நெவில் பிரணாந்து தெரிவித்தார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்சேகாவுக்குப் பதவி ஜனாதிபதியின் பகிடியாம்

## இராஜாங்க அமைச்சர் சுஜீவ கூறுகிறார்

போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்த முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா அவசியமில்லை எனவும் சாதாரண பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் போதுமெனவும் சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்தார்.

கண்டியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்றதன் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பி கேள்விகளுக்கு பதிலளித்த அவர், பேராட்டங்களை கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் அரசாங்கத்திற்கு இல்லையெனவும் தெரிவித்தார்.

"எந்தவொரு படையணியும் எமக்குத் தேவையில்லை. ஒரு போராட்டம் நடைபெறுமாயின் அது எதற்காக நடைபெறுகின்றது என்ற உண்மையை ஆராய்ந்து பார்க்க ஒரு படையணியை அமைக்க வேண்டும். அது தவறில்லை. அதை விடுத்து போராட்டங்களை கட்டுப்படுத்த சரத் பொன்சேகா அவசியமில்லை.

ஆர்ப்பாட்டம் ஒன்றை கட்டுப்படுத்த பொலிஸாருக்கோ அல்லது இராணுவத்திற்கோ நான் உத்தர விட்டால் கூட அது நடைபெறும்.

யுத்தத்தை வெற்றிகொண்ட இராணுவத் தளபதி இதற்கு அவசியமில்லை. பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவருக்கு அந்த அதிகாரத்தை வழங்கினால் அதனை நிறைவேற்ற முடியும்.

எனினும் அவ்வாறு போராட்டம் ஒன்றை கட்டுப்படுத்தும் அல்லது தடுக்கும் அரசாங்கம் இதுவல்ல. அவ்வாறு செயற்பட வேண்டுமாயின் 9 சுயாதீன ஆணைக் குழுக்களை அமைத்து பொலிஸாரை சுயாதீனமாக செயற்பட இடமளித்துள்ளதோடு, தகவல் அறியும் சட்டத்தையும் கொண்டுவந்திருக்க



வேண்டிய அவசியமில்லை.

ஆகவே இந்த சுதந்திரத்தை கட்டுப்படுத்த எந்தவொரு தேவையும் இல்லை. ஜனாதிபதி இருந்து விட்டு சில வேடிக்கையான பகிடிக் கதைகளை கூறுவார். சரத் பொன்சேகாவுக்கு புதிய பதவி வழங்கியது குறித்து வேறு எந்தவொரு யோசனையும் இது தொடர்பில் முன்வைக்கவில்லை. இது தொடர்பில் பெரிதாக சிந்திக்க வேண்டிய அவசியமில்லை" என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# நியாயமான அடிப்படையிலே சில அமைப்பாளர்கள் நீக்கம்

## அமைச்சர் எஸ்.பி.விளக்கம்

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சில அமைப்பாளர்கள் நியாயமாக கொள்கையின் அடிப்படையிலேயே கட்சித் தலைவர்களால் நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டதாக அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து செயற்படாத பெரும்பாலான அமைப்பாளர்களே அந்தப் பதவிகளில் இருந்து நீக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

கட்சியின் பொறுப்புகளை ஏற்றிருந்த போதும் கடந்த காலங்களில் தமது பொறுப்புக்களில் இருந்து அவர்கள் விலகியிருந்ததாக எஸ்.பி.திஸாநாயக்க சுட்டிக்காட்டினார்.



அதேவேளை, கட்சியின் பொறுப்புக்களில் இருந்து விலகியிருந்த மேலும் மக்கள் பிரதிநிதிகள் சிலர் தொடர்பாக எதிர்காலத்தில் தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்படவுள்ள்தாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ)

# கெட்டம்பே மே தினக் கூட்டத்தில் ஒரு லட்சம் இளைஞர், யுவதிகள்

## சாந்த பண்டார கூறுகிறார்

கண்டி கெட்டம்பே விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் அக்கட்சியின் இளைஞர் அமைப்பின் சார்பில் ஒரு இலட்சம் பேர் கலந்துகொள்ளவுள்ளதாக அக்கட்சியின் இளைஞர் அமைப்பின் தலைவர் சாந்த பண்டார தெரிவித்துள்ளார்.

குறித்த தினம் இரு ஊர்வலங்களில் ஒன்று இளைஞர் அமைப்பினால் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். இரண்டாவது ஊர்வலம் தொழிற்சங்களின் பிரதிநிதிகளினால் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதிகமான இளைஞர், யுவதிகளும் தொழிலாளர்களும் கலந்து கொள்ளும் ஒரு மேதினம் இதுவாகும் எனவும் சாந்த பண்டார மேலும் தெரிவித்தார். (இ)

# பட்டாசு ஆலையில் திடீர் தீ விபத்து

நீர்கொழும்பு, கட்டானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாகொன்ன பிரதேசத்திலுள்ள பட்டாசுத் தயாரிப்பு நிலையமொன்றில் ஏற்பட்ட திடீர் வெடி விபத்தில் ஒருவர் காயமடைந்த நிலையில், நீர்கொழும்பு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கிம்புலாபிட்டிய வீதி, தாகொன்ன பிரதேசத்தில் அமைந்துள்ள "சக்தி அனுமா" என்ற பட்டாசு தொழிற்சாலை யில் நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. (இ)

# மூன்று வெளிநாட்டு பிரஜைகள் மரணம்

வெளிநாட்டவர்கள் மூவர் திடீர் சுகயீனத்துக்கு உள்ளாகி மரணமடைந்துள்ளனர். சவுதி அரேபியாவில் இருந்து இந்தோனேஷியாவுக்கு பயணித்த விமானத்தில் இருந்த இந்த வெளிநாட்டவர் ஒருவர் திடீர் சுகயீனம் காரணமாக கட்டுநாயக்க வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அதன் பின்னர், நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அவர் உயிரிழந்துள்ளார். இந்தோனேஷிய பிரஜையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதேவேளை 73 வயதுடைய இங்கிலாந்து பிரஜை, ஹிக்கடுவை நாகஸ்தெனிய பிரதேசத்தில் உயிரிழந்துள்ளார். அவர் தங்கியிருந்த வீட்டுக்கு முன்னால் விழுந்து கிடந்த நிலையில், கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர். இதனைத் தவிர தொட்டகொடை மஹவெல குறுக்கு வீதியில் விழுந்து நினைவிழந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவர் மரணமடைந்துள்ளார். பாகிஸ்தானைச் சேர்ந்த 40 வயது நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (இ)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 50 | 50 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 110 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 80 | 100 | 160 | 100 |
| தக்காளி | 120 | 100 | 100 | 90 | 160 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 60 | 80 | 80 | 60 |
| கோவா | 130 | 160 | 80 | 100 | 120 | 80 |
| கரட் | 120 | 200 | 80 | 120 | 280 | 100 |
| பூசணி | 50 | 60 | 80 | 40 | 80 | 60 |
| புடோல் | 80 | 100 | 50 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 | 30 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 180 | 200 | 150 | 160 | 200 | 180 |
| பெரிய வெங்காயம் | 90 | 120 | 80 | 100 | 100 | 120 |
| பாகற்காய் | 140 | 200 | 70 | 120 | 120 | 160 |
| வெண்டிக்காய் | 60 | 200 | 50 | 80 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 50 | — | 100 | 80 |
| பயற்றங்காய் | 80 | 100 | — | 60 | 80 | 100 |
| லீக்ஸ் | 80 | 100 | 40 | 80 | 120 | 80 |
| பீற்றூட் | 120 | 100 | 100 | 120 | 160 | 100 |
| கறிமிளகாய் | 100 | 200 | 120 | 100 | 120 | 140 |
| முருங்கைக்காய் | 200 | 150 | 100 | 200 | 300 | 300 |
| போஞ்சி | 140 | 300 | 100 | 100 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | 15 | — | 80 | 50 |
| கீரை-1பிடி | 20 | 20 | 40 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 60 | 20 | 70 | 50 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 80 | 70 | 60 | 50-60 | 70 |
| இராசவள்ளி | 200 | 300 | 160 | 200 | 200 | 180 |
| வெங்காயப்பூ | — | — | — | — | — | — |
| முள்ளங்கி | 60 | 100 | — | 70 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 30 | 60 | 10 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | — | 120 | — | — | — | — |

# இலங்கையின் வளங்கள் விற்பனை செய்யப்படாது

## அமைச்சர் யாப்பா உறுதி




(கொழும்பு)

வெளிநாடுகளுடன் நெருங்கிய உறவைப் பேணுவதற்காக இலங்கையின் வளங்கள் ஒருபோதும் விற்பனை செய்யப்படமாட்டாது.

சீனா, இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகளுடன் நெருங்கிய உறவுகளைப் பேண இலங்கையின் வளங்கள் ஒருபோதும் விற்பனை செய்யப்பட மாட்டாது என்று இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

மாத்தறையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன இதனைத் தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெறும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான மே தினக் கூட்டத்திற்கு தேவையான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் கூறினார்.

மாத்தறை மாவட்டத்திற்கென 167 பேருந்துகள் கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இருப்பிற்காக தலைமைத்துவத்தினால் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களை எவரும் விமர்சிக்க முடியாதென்று அவர் தெரிவித்தார்.

வரலாற்றில் இவ்வாறான முன் [illegible] அவர் சுட்டிக்காட்டினார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவுவிடுதியில் திடீர் மோதல் இளைஞன் வெட்டிக்கொலை!

## கால்கள் துண்டாடப்பட்டன

தலவத்துகொட பகுதியில் அமைந்துள்ள இரவு நேர விடுதியில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட மோதலில் இளைஞன் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துருகிரிய மஹஜன மாவத்தையை சேர்ந்த எல்ல கொட கமகே இசுரு சம்பத் எனப்படும் லொக்கு பர்டி என்ற 25 வயதுடைய இளைஞரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

ஆட்டோச் சாரதியான குறித்த இளைஞன் கடந்த 27 ஆம் திகதி இரவு நண்பர்களுடன் தலவத்துகொட பிரதேசத்தில் உள்ள இரவு நேர விடுதிக்கு சென்றிருந்தான்.

இந்நிலையில், அங்கு ஏற்பட்ட வாய்த்தகராறு முற்றியமையினால் அதிகாலை 3.10 மணியளவில் விடுதியை விட்டு வெளியே வந்த சந்தர்ப்பத்தில் சிலரினால் கூர்மையான ஆயுதத்தால் அவரது ஒரு கால் வெட்டப்பட்டுள்ளது.

ஒன்றைக் காலுடன் உயிரை காப்பாற்றிக் கொள்வதற்கு முயற்சித்த போது அவரை துரத்திச் சென்று மற்றைய காலை வெட்டி எடுத்துள்ளனர்.

காயமடைந்தவர கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பழைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் சில குழுக்களினால் இந்த இளைஞன் இரவுநேர விடுதிக்கு அழைத்து செல்லப்பட்டு இவ்வாறு வெட்டி கொலை செய்யப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்ற நிலையில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

உயிரிழந்த இளைஞனின் சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (இ)

# குப்பைமேட்டுப் பிரச்சினைக்கு எம்.பிக்கள்தான் பொறுப்பாம்

## பிரதியமைச்சர் ரஞ்சன் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

மாதிவெல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான விடுதி குப்பைகளும் மீதொட்ட முல்லவிற்கே செல்கின்றன. எனவே அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்த அனர்த்தத்திற்கு பொறுப்புக் கூறவேண்டும் என பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார்.

இந்த அனர்த்தத்திற்கு ஒரு வகையில் நானும் பொறுப்புகூற வேண்டும். ஆகையால் நான் பாதிக்கப்பட்ட மக்களிடம் மன்னிப்பு கோருகின்றேன் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் மீதொட்டமுல்ல குப்பைமேடு தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

மீதொட்டமுல்ல அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபத்தை தெரிவிக்கின்றேன். குறிப்பாக இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மேயர்கள் அனைவரும் பொறுப்புக் கூற வேண்டும். முன்னைய ஆட்சியும் தற்போதைய ஆட்சியும் இந்த அனர்த்தத்திற்கு பொறுப்புக்கூற வேண்டும். இது இயற்கை அனர்த்தம் அல்ல. இது ஒரு கொலையாகும்.

எனவே இது தொடர்பாக நாட்டின் ஜனாதிபதிகள், பிரதமர்களும்பொறுப்புக்கூறவேண்டும். குறிப்பாக மாதிவெல பாராளுமன்ற உறுப்பினர் விடுதி குப்பைகளும் மீதொட்டமுல்லவிற்கே செல்கின்றன. ஆகவே அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் பொறுப்புக் கூற வேண்டும்.

அத்துடன் இங்கு குப்பை கொட்டுவதற்கு சம்பந்தப்பட்ட அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். இதற்கு ஜனாதிபதி ஆணைக் குழுவினை நியமிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# அஜீத்தை கைதுசெய்ய பொலிஸார் வலைவீச்சு

பாதாள உலகக்குழு உறுப்பினர் எனப்படும் வெலிவேரிய லியனகே கிரிஷாந்த அஜீத் குமார அல்லது மினுவாங்கொடை களு அஜீத் எனும் நபரும் தேடப்படுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நபர் கொலை, கொள்ளை, கப்பம் கோரல் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் என்றும் நாட்டிலுள்ள பல்வேறு பொலிஸ் நிலையங்களினாலும் தேடப்பட்டு வருபவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் அவருக்கு எதிராக பொலநறுவை, மினுவாங்கொடை, அத்தனகல ஆகிய நீதிமன்றங்களினால் பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

கம்பஹா கிரிந்திவிட்ட பிரதேசத்தில் ஜீப் வண்டியில் பயணித்த வியாபாரி சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் இவருக்கு தொடர்புள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ)

# துப்பாக்கிச் சூடு இருவர் கைது

(கொழும்பு)

மாலபே - கடுவலை பிரதான வீதியின் கொத்தலாவல பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு பிரதான சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த இருவரும் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் போமிரிய பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதான ருவன் துஷார என்ற பிடலி துஷார மற்றும் 49 வயதான கொத்தலாவலகே பியவங்ச சோமகுப்த ஆகிய இருவர் கொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ)


## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் சௌக்கியசேவை கூட்டுறவுச் சிக்கன சேமிப்பு கடன் நிவர்த்திச் சங்கத்தின் 56ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் 30.04.2017 யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவ சிகிச்சை பகுதியில் காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

சகல அங்கத்தவர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி

ந.நற்குணராசா
செயலாளர்

(8872)


# எங்கு திரும்பினாலும் ரணில் முகம்

## மகிந்த அணி எதிர்ப்பு



மேதினக் கூட்டத்தை முன்னிட்டு கொழும்பில் பல இடங்களில் ரணிலின் புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கான பணம் எங்கிருந்து வந்தது என உள்ளூராட்சி சங்கங்களின் தலைவர் உதய அத்துகோரள கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் இதை கூறியுள்ளார். கொழும்பின் எல்லாப் பக்கங்களிலும் ரணிலின் புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

சிறிகொத்தாவில் உள்ள ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமை காரியாலயத்திற்கு தண்ணீர் மற்றும் மின் கட்டணம் கூட கட்ட வசதியில்லாத இவர்களுக்கு தற்போது எங்கிருந்து பணம் வந்தது.

இவை அனைத்தும் மத்திய வங்கியில் இடம்பெற்ற ஊழல்களின் மூலம் அவர்கள் பெற்றுக்கொண்ட பணம் என அவர் குற்றம் சுமத்தினார்.

இதன்போது கருத்து தெரிவித்த பிரியந்த புஸ்பகுமார,

ஒரே பேருந்தில் சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் கொடிகளை பறக்க விட்டுக் கொண்டு செல்வதாகவும், இதற்கான ஆதாரங்கள தம்மிடம் இருப்பதாகவும் தெரிவித்தார்.

இதனால் மக்கள் மத்தியில் ஒரு குழப்ப நிலை காணப்படுகின்றது. நடைபெற இருக்கும் மேதினக்கூட்டம் அரசாங்கத்தை கவிழ்க்கும் கூட்டமாக இருக்க வேண்டும்.

தற்போது சரத் பொன்சேகாவிற்கு இராணுவப்பதவி வழங்குவது தொடர்பில் பல கருத்துக்கள் எழுந்துள்ளன. ஆனால் அப்படி ஒன்று நடந்தால் நாடு பாரிய பிரச்சினைக்கு முகம் கொடுக்க நேரிடும் எனவும் தெரிவித்தார். (இ)


# மரண அறிவித்தல்

## திருதி மகேஸ்வரன் றெஜிந்தா



மடத்தடி சண்டிலிப்பாயைப் பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரன் றெஜிந்தா 27.04.2017 வியாழக்கிழமையன்று காலமானார்.

அன்னார் கந்தையா- காலஞ்சென்ற இராஜலக்ஸ்மி தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் மகேஸ்வரி தம்பதியரின் மருமகளும் மகேஸ்வரனின் அன்பு மனைவியும் றெஜிலாவின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 30.04.2017 இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடன் தகனக் கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மடத்தடி, சண்டிலிப்பாய். (8871) தகவல் :- குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேதின நிகழ்வுகள்

## மாங்குளத்தில் நடைபெறவுள்ள மேதின பேரணியில் அணிதிரள்வோம்

### சமூக விழிப்புணர்வுக்கான அமைப்பு அழைப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மாங்குளத்தில் இம்முறை சமூக விழிப்புணர்வுக்கான அமைப்பின் பிரதான மே தின நிகழ்வுகள் வடக்கின் மையநகரம் மாங்குளத்தில் நடைபெறவுள்ளதாக அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் நா.தேவகிருஸ்ணன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடை பெற்ற நிகழ்வு தொடர்பான விளக்கக் கூட்டத்தில் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், இம்முறை மேதின நிகழ்வில் பிரதான கோரிக்கைகளாக, 'ஆளும் தேசிய கூட்டரசே பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு பதில் கூறு" அரசியல் கைதிகளை விடுதலை செய்" "வடக்குமாகாணத்தின் மையநகரமான மாங்குளத்தில் மாகாண சபையின் அதிகார மையத்தை நிறுவு" பெண்களின் வாழ்க்கையை சிதைக்கும் நுண்கடன் கம்பனிகளை வன்னி மண்ணில் இருந்து உடனே இழுத்து மூடு" மலையக மக்களுக்கான காணி உரிமையை வழங்கி அவர்களுக்கு அடிப்படையில் உரிமைகளை ஏற்படுத்தி கொடு" போன்ற பிரதான கோரிக்கைகளை முன்வைத்து வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள், தொழிலாளர்கள் மற்றும் மீனவர்கள் இணைந்து நடத்தும் புரட்சி கர மேதினக் கூட்டம் வடக்கின் மையநகர் மாங்குளத்தில் அமைந்துள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அலுவலகத்திற்கு முன்பாக இருந்து பிற்பகல் 2.30 மணிக்கு பேரணி ஆரம்பமாகி மு/மாங்குளம் மகா வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானம் வரை சென்று பின்னர் மைதானத்தில் பிற்பகல் 03 மணிக்கு பொதுக்கூட்டம் நடை பெறவுள்ளது.

மே தினத்தை புரட்சிகர எழுச்சி நாளாக கருதி உழைக்கும் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளை அணி திரளுமாறு சமூக விழிப்புணர்வுக்கான மக்கள் அமைப்பின் இணைப்பாளர் அழைப்பு விடுத்துள்ளார். (2-5-15)

## மேதின புரட்சிகர எழுச்சிநாளில் அனைவரும் ஒன்றுதிரள்வோம்

### புதிய மாக்சிச லெனின் கட்சி அழைப்பு

மேதினத்தை புரட்சிகர எழுச்சி நாளாக கூறி அனைவரையும் அணி திரளுமாறு மாக்சிச லெனின் கட்சியின் வன்னி மாவட்ட தலைவர் நி.பிரதீபன் அழைப்பு விடுத்துள்ளார்.

மேதின நிகழ்வு தொடர்பாக மக்களுக்கு அறிவிப்பதற்கான ஊடக சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில்,

அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும். நில மீட்பு போராட்டத்திற்காக, தங்களது நிலங்களிற்காக போராடிக் கொண்டிருக்கின்ற மக்களின் நிலங்கள் அவர்களிடம் கையளிக்கப்பட வேண்டும்.

என்பதை வலியுறுத்தி மேதினநாளான முதலாம் திகதி போராட்ட நாளாகவும், சமூக சமத்துவ நீதிக்காகவும் மேதி னத்தை புரட்சிகர எழுச்சி நாளாக கூறி அனைவரையும் அணி திரளுமாறு அழைப்பு விடுக்கின்றோம். இதன் போது வடக்கு, கிழக்கு புகையிரத காப்பாளர் ஒன்றிய தலைவர் எஸ்.ஜே. ரொஹான் ராஜ்குமார், சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் செயலாளர் எஸ் பொன்பொஸ்கோ, வவுனியா மாவட்ட அழகர் சங்க பொருளாளர் எஸ். கண்ணன் கலந்து கொண்டதுடன் தமது ஆதரவினையும் தெரிவித்திருந்தனர்.

மாக்சிச லெனின் கட்சியினரால் நடத்தப்படவுள்ள மேதின ஊர்வலமானது காலை 9 மணியளவில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் ஆரம்பிக்கப்பட்டு பஜார் வீதியினூடாக நகர சபையினை வந்தடையவுள்ளது. (2-5-250)




## கல்விளான் அ.த.க.பாடசாலை கட்டடத் தொகுதி திறந்துவைப்பு



துணுக்காய் கல்விளான் அ.த.க பாடசாலையின் புதிய கட்டடத்தொகுதி நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப் பட்டது இந்நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் பிரதம விருந்தினராகவும் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை பிரதி அவைத் தலைவர் கமலேஸ்வரன், துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன், துணுக்காய் பிரதேச செயலாளர் இ.பிரதாபன், துணுக்காய் கோட்டக்கல்விப்பணிப்பாளர் சி.செல்வரெட்ணம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கட்டடத் தொகுதியை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியக்லாநிதி சி.சிவமோகன் வடக்கு மாகாண பிரதி அவைத்தலைவர் வ.கமலேஸ்வரன் ஆகியோர் திறந்து வைத்தனர்.

இந் நிகழ்வில் பாடசாலைகளின் அதிபர்கள் மக்கள்என பெருமளவானோர் கலந்து கொண்டிருந்தனர் (2-5-281)

## காணி அதிகாரியின் அலுவலகம் பூட்டு விரைவில் பணிகள் முன்னெடுக்கப்படும் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் தெரிவிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தின் காணி அதிகாரியின் அலுவலகம் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளரினால் பூட்டப்பட்டு, அதன் நடவடிக்கைகள் யாவும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால் காணிகள் தொடர்பான தமது தேவைகளை நிறைவு செய்ய முடியாதுள்ளதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளார்கள்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது, கடந்த 26 ஆம் திகதி புதன்கிழமை காலை தொடக்கம் காணி அதிகாரியின் அலுவலகம் பூட்டப்பட்டு அதன் பணிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளருடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் இயங்கி வரும் காணி அதிகாரியின் பொது மக்கள் சேவைகளின் போது சில முறைகேடுகள் மற்றும் ஊழல்கள் நடை பெற்று வருவ தாக பாதிக்கப்பட்ட பொது மக்கள் மற்றும் கிராம மட்ட பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள் ஆகியோர் நேரிலும் மற்றும் எழுத்து மூலம் எனக்கு முறைப்பாட்டினை மேற்கொண்டு வந்துள்ளனர்.

இதனையடுத்து, அதிகாரியின் நடவடிக்கை தொடர்பில் கண்காணிப்பு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வந்த நிலையில், மேலதிக நடவடிக்கைகளுக்காக காணி அலுவலகத்தின் பணிகளை தற்காலிகமாக நிறுத்தி, அலுவலகமும் பூட்டப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த விடயம் தொடர்பாக மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்காக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ரூபவதி - கேதீஸ்வரனுக்கு எழுத்து மூலமாக அறிவித்துள்ளேன்.

எதிர்வரும் 3 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னதாக அவரின் பதில் கிடைத்து விடும் எனவும் வரும் வாரத்தின் கடைசி நாட்களில் காணி அலுவலகத்தின் பணிகள் சிறப்பான முறையில் பொது மக்களிற்கு வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-5-15)

## கூட்டுறவாளர்களின் மேதின பேரணி இம்முறை முல்லையில்

வடக்கு மாகாண கூட்டுறவாளர்களின் மேதினப் பேரணி முல்லை. மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு சிவன் கோவில் முன்றலில் இருந்து அன்றைய தினம் பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இப்பேரணியியை வடக்குமாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் கொடியசைத்து ஆரம்பித்து வைத்துள்ளார். மே தினப் பொதுக்கூட்டம் புதுக்குடியிருப்புமத்தியகல்லூரிமண்டபத்தில் முல்லைத்தீவுமாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவரும் மேதின ஏற்பாட்டுக் குழுத் தலைவருமானவிநாயகமூர்த்தி சர் வானந்தராஜா தலைமையில் பிற்பகல் 4 மணிக்கு நடை பெறவுள்ளது. இப்பேரணியில்கூட்டுறவாளர்களால்முன் வைக்கப்படவுள்ள கோரிக்கைகளாக மக்களின் சொத்துக்கள், காணிகள் மக்களிடமே ஒப்படை க்கப் படல் வேண்டும். தமிழ் அரசியல் கைதிகள் விரைவில் விடுவிக்கப்பட வேண்டும். காணாமல் போனவர்களுக்குசரியானமுடிவு காணப்படல்வேண்டும். (2-5)

## கால்நடைபயிற்சி நிலையம் திறந்துவைப்பு




வடக்குமாகாண விவசாய அமைச்சரால் கால்நடை பயிற்சி நிலையம் நேற்று கிளிநொச்சியில்திறந்து வைக்கப்பட்டது. குறித்த நிகழ்வு நேற்று காலை 9.30 மணியளவில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடக்குமாகாண சபை உறுப்பினர் தவநாதன்,அமைச்சின் செயலாளர், விவசாய திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.(2-15)

## வாழ்வாதார உதவிகள் வழங்கிவைப்பு





(பனிக்கன்குளம்)

சர்வதேச தமிழ் மக்கள் முன்னேற்ற கழகத்தால் பத்து பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் காலை உடையார்கட்டு பகுதியில் வசிக்கும்பத்துகுடும்பங்களுக்கு தலா நூறு கோழிக் குஞ்சுகள் வீதமும் அதற்கான உணவு மருந்து கூடு கள் அனைத்தும் வழங்கி வைக்கப்பட்டன.

இவர்களிடம் முட்டைகளை கொள்வனவு செய்யும் நடவடிக்கையினையும் தாமே மேற்கொள்ளவுள்ளதாகவும் இதன் தொடர்ச்சியாக பத்து நாட்களுக்கு ஒரு தடவையும் பத்து பயனாளிகளுக்கு இவ்வாறு வாழ்வாதார உதவிகளை வழங்கவுள்ளதாகவும் சர்வதேச தமிழ் மக்கள் முன்னேற்றக் கழக பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் கலந்து கொண்டு உதவித் திட்டங்களை வழங்கி வைத்துள்ளார். (2-5-281)

## 'தீர்க்கதரிசி தந்தை செல்வா' நூல் வெளியிடப்பட்டது



தந்தை செல்வாவின் 40 ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு யாழ். மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் தங்க. முகுந்தனால் எழுதிய "தீர்க்கதரிசி தந்தை செல்வா" எனும் நூல் தந்தை செல்வா நினைவிடத்தில் கடந்த 26ஆம் திகதி வெளியிடப்பட்டது. குறித்த நூலை தந்தை செல்வா அறங்காவல் குழுவின் தலைவரும் தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் ஆயருமான வணபிதா கலாநிதி ஜெபநேசன் அடிகளார் வெளியிட்டு வைக்க தந்தை செல்வாவின்மகன் சந்திரகாசன் பெற்றுக்கொண்டார்.(2-5-15)

## வீதிகள் புனரமைக்கப்படாமையால் சிரமங்களை அனுபவிக்கின்றோம்

கிளிநொச்சி ஆனைவிழுந்தான் பகுதிக்கான பிரதான வீதி முதல் ஏனைய குடியிருப்பு வீதிகள் வரை எந்த வீதிகளும் புனரமைக்கப்படாமையினால் சுமார் 399 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 359 பேர் அன்றாடம் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் ஆனைவிழுந்தான் கிராமத்தின் பிரதான வீதியாகக் காணப்படும் அக்கராயன் வன்னேரிக்குளம் வீதி மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் மிக மோசமாக சேதமடைந்து காணப்படுகின்றது.

சாதாரணமாக துவிச்சக்கர வண்டிகளில் கூட பயணிக்க முடியாத நிலையில் காணப்படுகின்றது. குறித்த வீதியை புனரமைத்து தருமாறு பல்வேறு தரப்புக்களாலும் கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் கிளி நொச்சி கரைச்சிப்பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள மிகவும் பின்தங்கிய பகுதியாகக் காணப்படும் ஆனைவிழுந்தான் கிராமத்தில் தற்போது 399 வரையான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இந்நிலையில் இக்கிராமத்தின் பிரதான வீதி முதல் ஏனைய வீதிகள் வரை எந்த வீதிகளும் புனரமைக்கப்படாமல் காணப்படுவதனால் அன்றாடம் பல்வேறு தேவைகளுக்கு இவ் வீதியைப் பயன்படுத்தும் மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். குறித்த கிராமத்தின் முக்கிய வீதிகளையும் பிரதான வீதியான அக்கராயன் வன்னேரிக்குள வீதியினையும் புனரமைத்து தருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-5-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா மாவட்டத்தில்
# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஜனாதிபதிக்கு அனுப்ப மகஜர் கையளிப்பு



காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் ரோஹண புஸ்ப குமாரவைச் சந்தித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்குமாறு பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை நேற்று முன்தினம் மாலை கையளித்தனர்.

வவுனியாவில் சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் காணாமல் போனோர் தொடர்பில் பதில் அளிக்குமாறு கோரி இம் மகஜரை கையளித்தனர். அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு.

எமது உறவுகள் உயிருடன் இருக்கிறார்களா? இல்லையா? உயிருடன் இருந்தால் அவர்கள் எந்த இரகசிய சித்திரவதை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்? உயிருடன் இல்லாவிட்டால் அவர்களுக்கு என்ன நடந்தது? யாரால், எப்படி? கொலை செய்யப்பட்டு எங்கே புதைக்கப்பட்டுள்ளார்கள்? என்பவற்றைநாட்டுமக்களுக்கு பகிரங்கப்படுத்த வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டுள்ள எமது உறவுகள் உயிருடன் இருப்பின் அவர்கள் தத்தமது குடும்பத்தினருடன் இணைந்து வாழ்வதற்கு உடனடியாக வழிவிடுவதோடு, சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும். படையினர் நிலை கொண்டுள்ள அனைத்து தமிழ் மக்களின் காணிகளும் உடன் ஒப்படைக்கப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டுள்ளன.

மகஜரை பெற்றுக் கொண்ட வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் உடனடியாக மகஜரை ஜனாதிபதிக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதி மொழி வழங்கினார். (2-5-250)

# வருடாந்த பொதுக் கூட்டமும் நிர்வாகிகள் தெரிவும்

(பூநகரி)

அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கைநிதியத்தின் வவுனியா பிரதேச செய்லாளர் கிளையின் வருடாந்த பொதுக் கூட்டம், நிர்வாகிகள் தெரிவு என்பன எதிர்வரும் மே மாதம் 23 ஆம் திகதி காலை 9 மணிக்கு வவுனியா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுமென ஓய்வூதிய நம்பிக்கை நிதியச் செயலாளர் வீ.செல்வராஜா அறிவித்துள்ளார்.

வவுனியா ஓய்வூதியச் சங்கத் தலைவர் சோ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்திற்கு வவுனியா பிரதேச செயலாளர் கே.உதயராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

புதிதாக இணைய விரும்பும் உறுப்பினர்களை அன்றைய கூட்டத்தில் கலந்து கொண்டு உறுப்புரிமை பெற முடியுமென செயலாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (2-5-84)

## கனகாம்பிகைக்குளம் அம்மன் ஆலய
# வருடாந்த பெருந்திருவிழா

(மல்லாவி)

கிளிநொச்சி இரணைமடு கனகாம்பிகைக்குளம் அம்மன் ஆலயத்தின் 2017 ஆம் ஆண்டுக்கான வருடாந்த பெருந் திருவிழா நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

மே மாதம் 8 ஆம் திகதி திங்கட்கிழமை வேட்டைத் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் 10 ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (2-5-15)

# இரு ஆயுள்வேத வைத்தியசாலைகளில் கடமையாற்ற வைத்தியர்கள் நியமனம்

பூநகரி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட ஆயுள்வேத வைத்தியசாலைகளில் கடமையாற்றுவதற்காக பொதுச் சேவை ஆணைக் குழுவால் இரு வைத்தியர்கள் கடந்த வாரம் முதல் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

பல்லவராயன் கட்டு ஆயுள்வேத வைத்திய சாலைக்கு டாக்டர் கே.மதுரசா, இரணைதீவு ஆயுள்வேத வைத்தியசாலைக்கு டாக்டர் எஸ்.வருணியா ஆகியோர் நியமிக்கப்பட்டு கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளதாக பிரதேச சபையின் செயலாளர் அறிவித்துள்ளார்.

மேற்படி இரு வைத்திய சாலைகளிலும் வைத்தியர்கள் நியமிக்கப்படாமையால் வாரத்தில் ஒரு நாள் மட்டும் பூநகரி பிரதேச வைத்திய சாலை வைத்தியர் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக கடமையாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது.

புதிய நியமனத்தின் மூலம் இப்பகுதி மக்களின் நீண்ட கால கோரிக்கை நிறைவேற்றப்பட்டதுடன் இப்பகுதி மக்கள் இலகுவாக தமது கிராமங்களில் வைத்திய சேவை வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கிறது என மக்கள் தெரிவிக்கின்றனர். (2-5-84)

## கேப்பாப்பிலவு மக்களுக்கு
# யாழ்ப்பாண வணிகர் கழகத்தினர் ஒரு தொகுதி உலருணவுப் பொதிகளை வழங்கி வைத்தனர்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு மக்கள் தமது பூர்வீக நிலத்தை விடுவிக்கக் கோரி நேற்று 60ஆவது நாளாகவும் தமது கவனயீர்ப்புப் போராட்டத்தை முல்லைத்தீவு மாவட்ட இராணுவப்படைக் கட்டளைதலைமையகம்முன்பாக முன்னெடுத்து வருகின்றனர்.



இவர்களின் போராட்டத்திற்கு யாழ்.வணிகர் கழகத்தினர் நேற்று முன்தினம் பிற்பகல் 5 மணியளவில் குறித்த பகுதிக்கு சென்று தமது பூரண ஆதரவை வழங்கியதுடன் இவர்களுக்கான ஒரு தொகுதி உலருணவுப் பொருட்களையும் கையளித்தனர்.

இப்போராட்டம் தொடர்பில் இதுவரை எந்தவிதமான உறுதியான முடிவுகள் எட்டப்படாத நிலையில் தாம் தமது காணிக்குள் காலடி பதிக்காது போராட்டத்தைகைவிடப்போவதில்லையென அம் மக்கள் உறுதிபடத் தெரிவிக்கின்றனர். (2-5-281)

# பன்னங்கண்டி மக்களின் காணி உரிமைப் போராட்டம் தொடர்கிறது

(பரந்தன்)

கிளிநொச்சி பன்னங்கண்டி சரஸ்வதி கமம், ஜொனிக் குடியிருப்பு பிரதேச மக்கள் தமது குடியிருப்பு காணிக்கான ஆவணம் மற்றும் அடிப்படை வசதிகள், நிரந்தர வீட்டுத்திட்டம் என்பன இதுவரை கிடைக்கவில்லை. எனவே இவ்வளவு காலமும் அடிப்படை உரிமை இல்லாத மக்களாக வாழ்ந்து விட்டோம். இனியும் வாழ முடியாது. தயவு செய்து எமக்கான காணி உரிமத்தை வழங்குங்கள் எனக் கோரி ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் நேற்று 39 ஆவது நாளாகவும் தொடர்கிறது.



அத்துடன் தமக்கான காணி உரிமம் கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர். (2-5-312-15)

# மக்களுக்கான பொலிஸ் நடமாடும் சேவை; 500 நல்லின தென்னங்கன்றுகள் வழங்கல்

ஏ-9 வீதியில் உள்ள மாங்குளம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள பொது மக்களுக்கான பொலிஸ் நடமாடும் சேவை மாங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மாலன்-பெரரோவின் ஏற்பாட்டில் மாங்குளம் பொலிஸ் நிலைய பொது மக்கள், பொலிஸ் நல்லுறவுப் பிரிவு பொறுப்பதிகாரி, உப பொலிஸ் பரிசோதகர் நிலந்த பேருசிங்கா தலைமையில நடைபெற்றுள்ளது.

இந்த நடமாடும் சேவை நேற்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் மு /மாங்குளம் மகா வித்தியாலயத்தின் சண்முகரட்ணம் கலையரங்கில் நடைபெற்றுள்ளது.

இந் நிகழ்வுக்கு மாங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மாலின் பெரரோ, பொலிஸ் பொறுப்பதிகாரிகள், ஒட்டுசுட்டான் நிர்வாக அதிகாரி, மாங்குளம் கிராம அலுவலர் தங்கரத்தினம் தனபாலராஜ் உட்பட அயல் கிராமங்களின் கிராம அலுவலர்கள், பலநூற்றுக்கணக்கான பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

இந்த நடமாடும் சேவை மூலம், பொலிஸ்முறைப்பாடுகள் தொடர்பிலான சேவைகள், காணிப் பிரச்சினை தொடர்பில் பதிவுகள் மற்றும் போக்குவரத்து விழிப்புணர்வுச் சேவைகள், விபத்துக்கள் தொடர்பிலான காணொலிக் காட்சிகள் ஊடான கருத்துரைகள், பெண்கள், குழந்தைகள், சிறுவர்கள் தொடர்பிலான விழிப்புணர்வு கருத்தரங்கு என்பன நடைபெற்றுள்ளன.

இதன்போது, வருகை தந்திருந்த மக்களுக்கு தலா 2 நல்லின தென்னங்கன்றுகள் வீதம் மொத்தம் 500 தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன், காட்டு விலங்குகளான யானை, சிறுத்தைப் புலி போன்றவற்றின் அச்சுறுத்தல்களில் இருந்து பாதிப்புக்களை தவிர்க்கும் வகையில் அவற்றை விரட்டியடிப்பதற்காக யானை வெடிப் பொருட்களை கிழவன்குளம், பனிக்கன்குளம், கரிப்பட்ட முறிப்பு, அம்பகாமம், ஒலுமடு, மாங்குளம், திருமுறிகண்டி, ஆகிய பகுதிகளில் உள்ள மக்களுக்கு இந்த நடமாடும் சேவை மூலம் வழங்கப்பட்டுள்ளது.

இதன்போது, ஒருவருக்கு தலா 2 தொடக்கம் 6 வரையான யானை வெடிகள் என மொத்தம் 500 இற்கு மேற்பட்ட வெடிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (2-5-15)

# பரிதவித்த உறவுகளின் போராட்டம் 69 ஆவது நாளாகவும் தொடர்கின்றது



கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று 69 ஆவது நாளாகவும் தீர்வின்றி தொடர்ந்தது.

கிளிநொச்சி மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடுதலையையும் வெளிப்படுத்தலையும் வலியுறுத்தி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் கடந்த பெப்ரவரி மாதம் காலை கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட தொடர் [illegible] தொடர்கிறது. (2-5-312-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணம் தலைகுனிந்து பணியாற்றும் அல்லது தலைகுப்புறத் தள்ளிவிடும்.
– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வினைத்திறனும் நேர்மைத்திறனும் வடக்கின் இன்றைய தேவை

வடக்கு மாகாண அரசுக்கு நிறையவே பொறுப்புக்கள் உண்டு. யுத்தத்தின் பின்பான தமிழர் அரசு என்பதால் போரில் பாதிக்கப்பட்ட மக்களின் இன்னல்களைக் களைவது தொடக்கம் விவசாய மற்றும் கடற்றொழிலை வளப்படுத்தல், கைத்தொழில் துறைகளைக் கட்டியெழுப்புதல், சேவைத்துறையை விஸ்தரித்தல் இதனூடாக வேலைவாய்ப்பு, பொருளாதார வளர்ச்சி என்பவற்றை எட்டுதல்,

கல்வியில், சுகாதாரத்தில் முன்னேற்றத்தை காட்டுதல் யுத்தத்தில் சீரழிந்துபோன உட்கட்டுமானங்களை மீள்புனரமைப்புச் செய்தல், யுத்த காலத்தில் இழந்த நிலங்களை மீட்டல், உடைந்த வீட்டைக் கட்டிக் கொடுத்தல், யுத்தத்தில் அங்கவீன மக்களின் வாழ்வு மற்றும் குடும்பத் தலைவர்களை இழந்து பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் சீவனோபாயம் பற்றிச் சிந்தித்தல் என ஏகப்பட்ட வேலைகளை அமுலாக்கும் பணிகள் என ஏராளம் உண்டு.

கூடவே யுத்தத்தின் பின்பான சமூகப் பிறழ்வுகள், களவு, கொள்ளை, கொலை, போதைவஸ்து, பெண்கள் மீதான வன்மங்கள் உள்ளிட்ட சமூக சீர்கேடுகளைக் கட்டுப்படுத்துதல், இளம் சமூகத்தை வழிப்படுத்தல், கலாசாரம் பண்பாட்டைப் பேணுதல் என பல விடயங்கள் மீது வடக்கு மாகாண அரசு கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாண சபைகளுக்கு இருக்கக்கூடிய மேலதிக பொறுப்புக்கள் ஏனைய மாகாண சபைகளுக்கு இல்லை என்பதும் இங்கு கவனத்துக்குரியது.

ஆக, ஏனைய மாகாண் சபைகளுக்கு இல்லாத மேலதிக பொறுப்புக்கள் யுத்தம் காரணமாக வடக்கு கிழக்கு மாகாணங்கள் தாங்கிக் கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த மாகாண சபைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் உள்ளிட்ட மத்திய அரசின் பங்களிப்புக்கள் பல மடங்கு உயர்வாக இருக்க வேண்டும். அப்போதுதான் யுத்தம் ஏற்படுத்திய அழிவுகளை நிவர்த்திக்க முடியும்.

அதேநேரம் வடக்கு மாகாண அரசு அதன் உறுப்பினர்கள், அமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் தமது பொறுப்புக்களை உணர்ந்து வடக்கு மாகாண சபையின் ஒவ்வொரு அமர்வுகளையும் தீர்மானங்களையும் அதற்கான நேரங்களையும் மிக உச்சமாக பயன்படுத்த வேண்டும்.

தேவையற்ற விடயங்களைக் கைவிட்டு எங்கள் மக்களின் வாழ்வுக்கான திட்டமிடல்களாக, பணிகளாக தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும்.

கூடவே வடக்கு மாகாண சபைக்குட்பட்ட அனைத்து தீர்மானங்கள் அரச அமைப்புக்களின் உச்சமான செயற்பாட்டு வகிபங்கை உறுதி செய்வதுடன் எங்கும் எதிலும் நேர்மை, நீதி, ஊழலின்மை, பக்கச்சார்பின்மை என்பனவும் நிலைநிறுத்தப்படுவது அவசியமாகும்.

அப்போதுதான் வடக்கு மற்றும் கிழக்கு மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வடையும். இதைச் செய்வது ஒவ்வொருவரதும் கடமை என்றுணர்வதும் தலையாய பொறுப்பாகும்.

# இனவாதிகள் வைத்த புத்தரை உடனடியாக அகற்ற வேண்டும்

## பிரதியமைச்சர் ஹரிஸ் ஜனாதிபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

இறக்காமம் மாணிக்கமடு பிரதேசத்தில் இனவாதிகளால் கட்டப்படவுள்ள கட்டடத்தை தடுத்து நிறுத்துவதுடன் அங்கு வைக்கப்பட்டுள்ள புத்தர் சிலையை உடனடியாக அகற்றுவ்தற்கும் நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் எச்.எம். எம். ஹரஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

"இல்லாத விடயம் ஒன்றை உருவாக்கி சிறுபான்மையின மக்களை இனவாதத் தீயில் சிக்க வைப்பதற்கான சூழ்ச்சிகளின் நிகழ்ச்சி நிரலாகவே மாணிக்கமடு பிரச்சினையை நாம் பார்க்கின்றோம்.

இந்நாட்டு முஸ்லிம்களுக்கு எதிராக பல வழிகளிலும் பிரச்சினைகளை ஏற்படுத்தி வரும் பொதுபலசேனாவும் அதன் செயலாளர் ஞானசார தேரரும் சில தினங்களுக்கு முன் இறக்காமத்திற்கு விஜயம் செய்தமை முஸ்லிம்கள் மத்தியில் பெரும் அச்ச நிலையைத் தோற்றுவித்துள்ளது.

மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரச அதிபருடன் பேச்சு நடத்தி சில தீர்வு களை எட்டுவதற்கும், அதனை நடைமுறைப் படுத் துவதற் கும் இங்கு இணக்கம் காணப்பட்டதாக அறிகின்றோம்.

இங்குள்ள முஸ்லிம், தமிழ மக்களின் காணி களை சுவீகரிப்பதற்கான திட்டமாகவே இதனைப் பார்க்கின்றோம். இவர்களுக்கு இதற்குரிய அதிகாரத்தை வழங்கியது யார் என்ற கேள்வி எழுகின்றது.

நாட்டில் இனவாத பிரச்சினைக்குத் தூபமிட்டுள்ள ஞானசாரவுக்கு மாவட்ட அரச அதிபரை கட்டுப்படுத்தி உத்தரவிடும் பொறுப்புக்கள் நல்லாட்சி அரசு வழங்கியுள்ளதா?என்ற நிலைப்பாட்டில் இளைஞர்கள் ஆத்திரமடைந்துள்ளனர். இளைஞர்களின் நியாயத்தை அரசு புரிந்து கொள்ள வேண்டும்.

நல்லாட்சி அரசில் முஸ்லிம்களுக்கு புறக்கணிப்புக்கள் ஆரம்பித்துள்ளது என்கின்ற விடயம் பேசப்பட்டு வருகின்ற நிலையில் இறக்காமம் மாணிக்கமடு புத்தர் சிலையும் புதிய கட்டடம் கட்டப்படும் விவகாரமும் இதற்கு இன்னும் வலுச்சேர்ப்பதாக அமைந்துள்ளது.

நல்லாட்சி உருவாக்கத்தில் முஸ்லிம் சமூகம் குறிப்பாக அம்பாறை மாவட்ட மக்கள் பெரும் பங்கு வகித்துள்ளனர்.

நல்லாட்சி அரசின் தோற்றத்திற்கு முழுமையான எதிர்ப்பை இனவாதத்தைக் கொண்டு வெளிக்காட்டிய பொதுபலசேனா இன்று முஸ்லிம்களை இனவாதத் தீக்குள் அகப்பட வைப்பதற்காக அம்பாறையில் களமிறங்கியிருப்பது மிகவும் கண்டிக்கப்பட வேண்டிய விடயமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## முதலையின் வயிற்றுக்குள் சிறுமி

(அநுராதபுரம்)

நாளை மறுதினம் 2ஆம் திகதி தனது 14ஆவது பிறந்த தினத்தை கொண்டாடவிருந்த சிறுமி ஒருவர் காணாமல் போனநிலையில் முதலையின் வயிற்றுக்குள் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்த சோகச் சம்பவம் அநுராதபுரம், கல்னேவ பகுதியில் பதிவாகியுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

கல்னேவ, புலன்நட்டுவ குளத்தில் கடந்த 27ஆம் திகதி இரவு, தமது பெற்றோர் மற்றும் நண்பர்களுடன் நீராடிக் கொண்டிருந்த 13 வயதுடைய சிறுமி திடீரென காணாமல் போயுள்ளார்.

இதனையடுத்து கடற்படையினரின் உதவியுடன் சிறுமியை தேடிய போது குளத்தில இருந்த முதலை ஒன்றின் வயிற்றில் சிறுமி இருப்பதை அவதானித்துள்ளனர்.

இதனையடுத்து சிறுமியின் சடலம் முதலையின் வயிற்றிலிருநது மீட்கப்பட்டுள்ளது.(11)

# இயேசு சீடர்களைச் சந்தித்த எம்மாவுஸ் எங்கே உள்ளது?

இன்று எமக்குத் தரப்படும் பைபிள் பகுதியில் இயேசுவின் இரு சீடர்கள் எம்மாவுஸ் அல்லது எம்மாவு செல்வதையும் அப்பாதையில் இயேசு நெருங்கி வந்து அவர்களுடன் செல்வதையும் பின்பு அப்பத்தை பங்கிட்டு அவர்களுக்கு கொடுக்க அவர்கள் கண்கள் திறக்கப்படுவதையும் தெளிவுபடுத்தப்படுகின்றன. இவ்வருடம் நாம் பைபிளில் குறிப்பிடப்பட்டுள்ள இந்த எம்மாவுஸ் ஊர்பற்றி சற்று அறிய முனைவோம்: இந்த எம்மாவுஸ் ஊர் புதிய ஏற்பாட்டில் இயேசுவின் வாழ்க்கையோடு தொடர்புடைய ஒரு பழங்கால நகரமாகும். எம்மாவுஸ் எருசலேம் நகரிலிருந்து கிட்டத்தட்ட 11 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ளது. இதன் பொருள் மிதவெப்ப நீரூற்று என்பதாகும்.

எம்மாவுஸ் ஊர்பற்றி பைபிளில் வேறு புத்தகங்களிலும் குறிப்புக்கள் காணப்படுகின்றன. இந்த நகரம் பழைய ஏற்பாட்டின் சில பகுதிகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது: 1 மக்கபேயர் 3:57 பகுதியிலும், 1 மக்கபேயர் 4:3 காண

### பரமபிதா காட்டிய பாதை

லாம். கி.மு. 166ஆம் காலத்தில் யூதர்கள் கிரேக்க ஆட்சியாளர்களுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்ததாக வரலாறு கூறுகின்றது. அப்போது யூதா மக்கபேயு என்பவரின் தலைமையில் அவர்கள் செலூக்கிய கொடுங்கோலாட்சியை எம்மாவுஸ் நகரில் நிகழ்ந்த சண்டையில் முறியடித்தனர். பின்னர் செலூக்கிய தளபதி. பாக்கீது என்பவர் எம்மாவு நகருக்குக் காப்புச் சுவர்கள் கட்டினார் என 1 மக்கபேயர் 9:50 குறிப்பிடப்பட்டுள்ளது. உரோமையரின் ஆட்சியின்கீழ் எம்மாவுக்குச் சிறிதளவு தன்னாட்சி இருந்தது. ஆனால் ஏரோது மன்னன் கி.மு. 4இல்இறந்ததைத் தொடர்ந்து எம்மாவு தீக்கிரையாக்கப்பட்டது.முதல் யூத கிளர்ச்சியின்போது (கி.பி. 660-70), எருசலேம் நகரை முற்றுகையிட்டு அழிப்பதற்கு முன் உரோமைப் படைகள் எம்மாவு நகரில் பாசறை அமைத்தன.

கி.பி. 221 இல் எலகாபலுஸ மன்னன் காலத்தில் எம்மாவு நகரின் பெயர் "நிக்கோபொலிஸ்" என்று மாற்றப்பட்டது. பின்பு "பெருநகர்"நிலைக்கு உயர்த்தப்பட்டது. கி.பி. 639 இல் ஏற்பட்ட கொள்ளை நோயின்போது எம்மாவு நகரில் சுமார் 25,000 மக்கள் இறந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.


பைபிளில் குறிப்பிடப்பட்டுள்ள எம்மாவு அல்லது எம்மாவுஸ் ஊர் இன்று எங்கே உள்ளது என்று குறிப்பிடுவதில் அறிஞர்களிடையே ஒருமித்த கருத்து காணப்படவில்லை. எட்வர்ட் ராபின்சன் என்னும் அறிஞர் கருத்துப்படி, இந்த எம்மாவுஸ் நகரம் இன்றைய அரபு-பாலஸ்தீன ஊராகிய "இம்வாஸ்" எனக் குறிப்பிடப்படுகிறது. 1967இல் அழிவுறுவதற்கு முன்பு இந்த இம்வாஸ், யூதேயா மலைப்பகுதியின் எல்லையில் எருசலேமிலிருந்து சுமார் 18 மைல் தொலையில் அமைந்திருந்ததாக கருதப்படுகிறது.

எவுசேபியு, ஜெரோம் போன்ற பண்டைய கிறிஸ்தவ அறிஞர்கள் இந்த "எம்மாவுஸ் நகரும் "நிக்கோப்பொலிஸ்" நகரும் ஒன்றே என்று கருத்துத் தெரிவித்தனர். எம்மாவு வழியில் இயேசுவை சந்தித்த கிளயோப்பாவின் வீட்டில் தான் இயேசு தங்கியதாகவும், அவ்விடத்தில் 3ஆம் நூற்றாண்டில் ஒரு கிறிஸ்தவக் கோவில் கட்டப்பட்டதாகவும் ஜெரோம் குறிப்பிட்டுள்ளார். கி.பி. 4ஆம் நூற்றாண்டிலிருந்து நிக்கோப்பொலியும் எம்மாவு நகரும் ஒன்றே என்ற கருத்து பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அப்பகுதியில் நடந்த அகழ்வாய்வுகளிலிருந்து அங்கு கி.பி. 2, 6, 12 நூற்றாண்டுகளில் கிறிஸ்தவக் கோவில்கள் கட்டப்பட்டன என்று தெரியவருகிறது.

இன்றைய "அல்-குபேபே", "அபு-கோ", "மோத்ஸா" என்னும் ஊர்களும் பைபிளில் குறிப்பிடப்படும் எம்மாவுஸ் நகரமாக இருக்கலாம் என்ற வேறுபட்ட கருத்துகளும் இன்று நிலவுகின்றன.

எம்மாவுஸ் சென்ற சீடர்கள் தமக்கு கிடைத்த நற்செய்தியை தங்களுக்குள் மறைத்து வைக்க முடியவில்லை. அத்னை உடனடியாக மற்றவர்களுக்கு அறிவித்தனர். கிறிஸ்தவ வாழ்வு என்பது, இருப்பதை, இறையாசீரை உடனடியாக பகிர்ந்து கொள்வதே ஆகும்.

தொடக்க கால கிறிஸ்தவர்கள் எல்லாமே தங்களுக்குத்தான் என்கிற குறுகிய



வட்டத்திற்குள்ளாக எப்போதும் வாழவில்லை. அவர்களின் சிந்தனை பரந்துபட்ட ஒன்றாக இருந்தது. அவர்கள் இருப்பதை மற்றவர்களோடு பகிர்ந்து வாழ வேண்டும் என்ற எண்ணத்தோடு வாழ்ந்தனர். அது இன்பமாக இருந்தாலும் சரி, துன்பமாக இருந்தாலும் சரி. எது எப்படி என்றாலும், பெற்றுக்கொள்கின்ற அனுபவங்கள் மற்றவர்களோடு பகிரப்பட வேண்டும் என்பதை தங்கள் வாழ்வின் இலக்காகக் கொண்டு வாழ்ந்தனர்.

இன்று எல்லாமே "எனக்கு தான்"என்கிற மனநிலை நம்மில் பலர் வாழ்கின்றோம். மற்றவர்கள் எப்படிப் போனாலும், அதைப்பற்றிய கவலை எனக்கில்லை என்கின்றோம்.

ஆகவே இதிலிருந்து விடுபட்டு எமக்குள்ளதை மற்றவர்களுடன் பகிர்ந்து வாழ தொடங்குவோமா?

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி
## சதாசிவம் இராசலட்சுமி
## (காரைநகர்)

காரைநகர், கோவளம், நட்டுப்பாளியைப் பிறப்பிடமாகவும், வெள்ளவத்தை இல. 15, இராஜசிங்க வீதி மற்றும் இல. 8 மாவடி வீதி, ஐந்து சந்தி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சதாசிவம் இராசலட்சுமி அவர்கள் நேற்று முன்தினம் (28.04.2017) வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 8, மாவடி வீதி,**
**ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.**

**தகவல் :**
**குடும்பத்தினர்**

**0777111025, 0777732893,**
**0783720823**

(8884)

### மாகாணங்களுக்கிடையிலான கிரிக்கெட்
## வடக்கு மாகாண அணி வெற்றி

இலங்கை கிரிக்கெட் சங்கம் நடத்தும் மாகாணங்களுக்கிடையிலான 19 வயதிற்குட்பட்ட கிரிக்கெட் போட்டிகள் தற்போது கொழும்பில் நடைபெற்று வருகின்றன.

யா/சென்ஜோன்ஸ்கல்லூரியின் மாணவன் யதுஷன் தலைமையின் கீழ் பங்குபற்றிக் கொண்டிருக்கும் வட மாகாண அணி 4 போட்டிகளில் பங்குபற்றிக் கொண்டிருக்கின்றது.

இதில் தென் மேற்கு அணியுடன் (Western South) நடந்த முதலாவது போட்டியில் தோல்வியைத் தழுவிக் கொண்டாலும் இரண்டாவதாக இடம்பெற்ற ஊவா மாகாணத்துடன் நடைபெற்ற போட்டியில் அபார வெற்றியைப் பெற்றுக் கொண்டது. இதுவரை இடம்பெற்ற மாகாணமட்ட போட்டிகளில் வடமாகாண அணி பெற்ற முதல் அணி இதுவாகும்.

50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஊவா மாகாண அணி 49 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்து வீச்சில் பற்றிக்ஸ் கல்லூரியின் மாணவன் ரதீசன் 4 விக்கெட்டுக்களையும் சென். ஜோன்ஸ் கல்லூரியின் மாணவன் யதுசன் 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

சிறந்த முறையில் பந்து வீசி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வடமாகாண அணி 24 பந்துப் பரிமாற்றங்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 136 ஓட்டங்களைப் பெற்று வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

தொடர்ந்து இடம்பெறும் ஆட்டங்களில் வடமேல் மாகாணத்தை எதிர்த்து கொழும்பு சி.சி.சி மைதானத்தில் இன்று ஞாயிற்றுக் கிழமையும் தொடர்ந்து மத்திய மாகாணத்தை எதிர்த்து நாளை மறுதினம் 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பு வெலிசறை மைதானத்தில் போட்டிகளை எதிர்கொள்ளும்.

இப் போட்டிகளில் சிறப்பாக விளையாடும் வடமாகாண வீரர்கள் இலங்கையில் 19 வயதிற்குட்பட்ட தேசிய அணியில் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன என வடமாகாண கிரிக்கெட் சங்கச் செயலாளர் ஸ்ரீ.ப. ராஜீவன் தெரிவித்துள்ளார். (க)

## தமிழருக்கான ...

கிளிநொச்சியில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாமனிதர் தராகி சிவராம் நினைவு தினத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் தராகி என அழைக்கப்படும் தர்மரட்ணம் சிவராம் அவர்களின் 12ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகளை வடக்கு கிழக்கினைச் சேர்ந்த ஊடக அமைப்புக்கள் ஒன்றிணைந்து யாழ் ஊடக அமையத்தின் தலைமையில் முன்னெடுக்கின்ற இந் நிகழ்வில் என்னை பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுமாறு அழைத்ததையிட்டு மகிழ்வடைகின்றேன்.

இலங்கைத் தமிழினத்தின் சிறந்த ஒரு ஊடகவியலாளராகத் திகழ்ந்த தராகி டி. சிவராம் கொழும்பில் வெள்ளை வானில் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் தமிழ் மக்களிடத்திலும் ஊடகவியலாளர் மத்தியிலும் மிகப் பெரும் அதிர்ச்சியையும் கோபத்தையும் ஏற்படுத்தியிருந்தது. தராகி என்றும் டி.சிவராம் என்றும் எஸ்.கே என்றும் நன்கு அறியப்பட்ட தர்மரட்ணம் சிவராம் மிகத்துணிச்சலானதொரு ஊடகவியலாளர்.

மனித உரிமைகள் நிறுவனங்களும், தன்னார்வத் தொண்டர்களும், இலங்கையின் அரசியல் மற்றும் இராணுவ நடவடிக்கைகள் தொடர்பான சிவராமின் கருத்துக்களை பெற்றுக் கொள்வதற்காக முன்வந்தனர். இதனால் அவர் ஐரோப்பிய, ஆசிய, வடஅமெரிக்கநாடுகள் பலவற்றிற்கு இராஜதந்திரக் குழுக்களுடன் பேச்சு வார்த்தைகளை நடாத்துவதற்காக பல முறை சென்று வந்தார். அவரின் இறப்பு ஏற்பட்ட தினத்தில் கூட ஜப்பானிய அரசாங்கத்துடன் கலந்துரையாடல் ஒன்றிற்காக செல்ல இருந்தார் என்பது பின்னர் அறியக் கிடைத்தது.இவரின் கொல்லப்பட்ட பூத உடல் தலையில் பலத்த காயங்களுடன் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பாராளுமன்றத்திற்கும் வைத்தியசாலைக்கும் இடையில் புதர்கள் உள்ள ஒரு பகுதியில் கண்டெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

அடக்கு முறை என்பது இன்று நேற்று ஆரம்பிக்கப்பட்ட விடயம் அல்ல தொழிலாளர்கள் மீது தொழில் வழங்குனரின் அடக்கு முறைகள், வர்க்க அடக்குமுறைகள், இன அடக்கு முறைகள், மத அடக்குமுறைகள் என அடக்குமுறைகள் பல வடிவங்களில் நலிவடைந்த மக்கள் மீது வலிமை மிக்கவர்களால் முன்னெடுக்கப்பட்டு வருவது நாம் அறிந்ததே. எனினும் அடக்கு முறைகள் அதிகரிக்க அதிகரிக்க வீறுகொண்டெழுகின்ற மக்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும். அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட மக்கள் காலம் சென்றாவது தமது கோரிக்கைகளில் கொள்கைகளில் வெற்றி பெற்றிருப்பதை சரித்திர வாயிலாக நாம் அறிந்திருக்கின்றோம் என்றார் முதலமைச்சர் விக்னேஸ்வரன். (செ-4)

## புதிய விடியல் உதைபந்தாட்ட இறுதியாட்டம்
## றோயல் - ஞானமுருகன் இன்று பலப்பரீட்சை





யாழ்ப்பாணம், வலிகாமம், பருத்தித்துறை, வடமராட்சி, தீவக லீக்குகளின் அனுமதியுடன் நடைபெறும் புதிய விடியல் உதைபந்தாட்ட தொடரின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை (30.04.2017) அன்று யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் மின்னொளியில் நடைபெறவுள்ளது.

இறுதிப் போட்டியில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதுகின்றது. (க)

## பரபரப்பான ஆட்டத்தில் Jolly Boys ஐ வீழ்த்தி அரை இறுதிக்கு முன்னேறியது King star





யங்கம்பன்ஸ் பிறிமியர் லீக் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் விலகல் முறையிலான ஆட்டத்தில் (27.04.2017) அன்று இடம்பெற்ற போட்டியில் king star அணியை எதிர்த்து jolly boys அணி மோதியது.

முதல் பாதியாட்டத்தில் king star அணி வீரர் மகிந்தன் நீண்ட தூரத்திலிருந்து அற்புதமான கோல் ஒன்றை போட முதல் பாதியாட்டம் 01:00 என்ற அடிப்படையில் நிறைவுற்றது.

இரண்டாவது பாதி யாட்டத்திலும் king star அணி வீரர் விமல் கோல் போட்டு அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்து சென்றார்.

jolly boys அணி வீரர் தர்சனால் முதல் கோல் பதியப்பட்டது.

இறுதியாட்ட நேர முடிவில் 02:01 என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றியீட்டியதுking star அணி.

போட்டியின் ஆட்ட நாயகனாக king star அணி வீரர் விமல் தெரிவு செய்யப்பட்டார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்ச்சையில்...

எந்தவொரு உத்தியோகபூர்வ நடவடிக்கைகளிலும் ஈடுபடமாட்டார் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இந்த வருடம் ஐ.நாவின் சர்வதேச வெசாக் நிகழ்வு எதிர்வரும் 10, 11ஆம் திகதிகளில் இலங்கையில் நடைபெறவுள்ளன.

இந் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கை வருகை தரவுள்ளார்.

நரேந்திர மோடியின் இந்த வருகை தொடர்பாக உள்நாட்டில் சிலரால் ஏற்கெனவே விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இந்த விமர்சனங்களுக்கு பதிலளிக்கும் வகையில் உரையாற்றிய ஜனாதிபதி அரசுகத எதிரான சில நபர்களால் அவரது வருகைக்கு எதிரான பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுவதாக குற்றம் சாட்டினார்.

நாட்டில் சில பகுதிகளை சொந்தமாக்கிக் கொள்வதற்கே மோடி வருகை தருவதாக சில சமூக வலைத் தளங்களிலும் இணையங்களிலும் உண்மைக்கு மாறான பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்திய பிரதமரின் நிகழ்ச்சி நிரல் வெசாக் நிகழ்வை மட்டும் தான் கொண்டுள்ளது. அதனைத் தவிர அவர் வேறு எந்தவொரு ஒப்பந்தத்திலோ அல்லது நிகழ்ச்சித் திட்டங்களிலோ உத்தியோக பூர்வமாக கைச்சாத்திட மாட்டார் என்றும் மைதத்திரிபால சிறிசேன வலியுறுத்திக் குறிப்பிட்டார். (11)

## பிரதேச...

தேச செயலர் பிரிவுகளில் சில பிரதேச செயலர்களுக்கு உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் தெல்லிப்பழை பிரதேச செயலராக கடமையாற்றிய எஸ்.சிறீமோகன் கரவெட்டி பிரதேச செயலராகவும், கரவெட்டி பிரதேச செயலராக கடமையாற்றிய த.சிவசிறி தெல்லிப்பழை பிரதேச செயலராகவும்,

நல்லூர் பிரதேச செயலராக கடமையாற்றிய சிறி பருத்தித்துறை பிரதேச செயலராகவும், ஊர்காவற்துறை பிரதேச செயலராக கடமையாற்றிய திருமதி எழிலரசி நல்லூர் பிரதேச செயலராகவும், சங்கானை பிரதேச செயலராக கடமையாற்றிய எஸ்.சோதிநாதன் வேலணை பிரதேச செயலராகவும், கோப்பாய் மேலதிக பிரதேச செயலராக கடமையாற்றிய பிரேமினி சங்கானை பிரதேச செயலராகவும், பருத்தித்துறை பிரதேச செயலராக கடமையாற்றிய த.ஜெயசீலன் வட மாகாண சபைக்கும் ஊர்காவற்றுறை பிரதேச செயலராக திருமதி மஞ்சுளாதேவியும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இடமாற்றம் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் நேற்றைய தினம் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. (9)

## மோ.சைக்கிளால்...

யளவில் இவர் துவிச்சக்கர வண்டியில் வைத்து மீன் வியாபாரம் செய்துவிட்டு வீடு நோக்கி சென்றுள்ளார்.

அப்போது அந்த வீதியால் இரு இளைஞர்கள் ஒரு மோட்டார் சைக்கிளில் வேகமாக வந்து இந்த முதியவரை பின்னால் மோதித் தள்ளியுள்ளனர்.

சம்பவ இடத்திலேயே மயங்கி விழுந்த முதியவரை மன்னார் வைத்தியசாலைக்கு கொண்டு சென்று மேலதிக சிகிச்சைக்காக நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்றைய தினம் அதிகாலை ஒரு மணியளவில் உயிரிழந்துள்ளார்.

குறித்த மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-9)

## மாமனிதர்...

நகரில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டுள்ளது. நேற்றைய தினம் மாலை 3 மணிக்கு கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள பாரதி ஸ்ரார் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொண்டார். மேலும், நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மற்றும் மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் ஆகியோரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான க.சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் வீ.ஆனந்தசங்கரி ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் யாழ்.ஊடக அமையத்தின் தலைவர் ஆ.சபேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந் நினைவேந்தல் நிகழ்வில் தராகியும் இலங்கையின் பூகோள அரசியலும் என்னும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக ஊடக கற்கை, கலைப்பீட இணைப்பாளர் கலாநிதி எஸ்.ரகுராம் நினைவுரை நிகழ்த்தினார்.

மேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்தில் சிவராம் என்னும் தலைப்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் உரையாற்றினார். இதேபோல் வடகிழக்கு மாகாணங்களில் உள்ள ஊடக அமைப்புக்களை சேர்ந்த ஊடகவியலாளர்கள் மற்றும் தென்னிலங்கை சிங்கள ஊடகவியலாளர்களும் கலந்து கொண்டனர். இதேபோல் யாழ்.ஊடக அமையத்தினால் வழங்கப்பட்ட சிவராம் ஞாபகார்த்த விருது மறைந்த கேலிசித்திர கலைஞன் அஸ்வின் சுதர்சனுக்கு வழங்கப்பட்டது.

இந்த விருது யாழ்.ஊடக அமையம் முதல தடவையாக வழங்கியுள்ளது. அதேபோல் இக்கட்டான காலப்பகுதியில் ஊடக பணியாற்றியமைக்காக சர்வதேச தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தினால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் 7 பேர் ஊடக அமையத்தினாலும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இவர்களுக்கான விருதுகளை வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வழங்கி கௌரவித்தார். (4)

## மின்...

வில் மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில்,

வவுனியா கப்பாச்சி செட்டிக்குளத்தில் வசித்து வரும் சின்னச்சாமி விஜயகாந்தன் (வயது 29) என்ற நபர் கிணறு வெட்டும் பணியில் ஈடுபட்டு வருகின்றார். இவர் வழமை போன்று நேற்று வவுனியா சாம்பல் தோட்டம சென்று கிணறு வெட்டும் போது, கிணறு வெட்டும் இயந்திரத்தில் (கொம்பிறசர்) மின்சார கசிவு ஏற்பட்டதில் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார். (11)

## பொலிஸ்...

வுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

காவல்துறை காவலர், பெண் காவலர், சாரதி, உள்ளிட்ட பதவிகளுக்கு 1500 பேரை ஆட்சேர்ப்பு செய்வதற்கான அறிவிப்பை பொலிஸ் தலைமையகம் வெளியிட்டுள்ளது.

வரும் ஜூன் 2ஆம் நாள் வரை இந்த ஆட சேர்ப்புக்கான விண்ணப்பங்களை அனுப்ப முடியும்.

ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ளவர்கள், வடக்கு, கிழக்கு உள்ளிட்ட பொலிஸ் நிலையங்களில் நியமிக்கப்படவுள்ளனர். (11)

## மனைவி...

தேக நபரின் மனைவியை நெல்லியடிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அப்பகுதியில் கோஷ்டி மோதல் ஏற்பட்டமையை அடுத்து வாள்வெட்டிற்கு இலக்கான நில்லையிலும், அடி காயங்களிற்கு இலக்கான நிலையிலும் ஆறு பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். நீதிவானின் கடும் உத்தரவிற்கமைய சிலர் ஏற்கெனவே கைது செய்யப்பட்ட போதிலும் பிரதான சந்தேக நபர் கைது செய்யப்படவில்லை.

இந்நிலையில் நேற்று மாலை காங்கேசன் துறை பிராந்தியத்தில் உள்ள வேறு பொலிஸ் நிலையங்களில் இருந்து மேலதிக பொலிஸார் வரவழைக்கப்பட்டு துன்னாலைப் பகுதியில் பெரும்தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது பிரதான சந்தேக நபர் தப்பிய போதிலும் அவரின் மனைவியை பொலிஸார் கைது செய்துள்ளனர். (60)

## வாக்குமூலத்தை...

வழக்கின் சாட்சி ஒருவரை கொலை செய்வோம் என சுன்னாகம் பொலிஸார் அச்சுறுத்தியுள்ளனர். இந்த விடயம் மல்லாகம் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டு நீதிமன்றின் அறிவுறுத்தலுடன் யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலத்தில் குறித்த பொலிஸ் அதிகாரிக்கு எதிராக முறைப்பாடு ஒன்றும் கடந்த சில தினங்களுக்கு முன்னர் பதிவு செய்யப்பட்டிருந்தது. கடந்த 2011ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 27ஆம் திகதியன்று சுன்னாகத்தில் கைது செய்யப்பட்டு பொலிஸ் பாதுகாப்பில் இருந்த சிறிஸ்கந்தராசா சுமணன் என்ற இளைஞனை சித்திரவதை செய்து கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட வழக்கில்,

கொடிகாமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிந்தக்க பண்டார முதல் எதிரியாகக் குறிப்பிடப்பட்டிருந்தார்.

அத்துடன் எட்டு பொலிஸார் இந்த வழக்கில் எதிரிகளாகக் குறிப்பிடப்பட்டு சித்திரவதைக் குற்றம் சுமத்தப்பட்டிருக்கின்றது.

இதில் ஒருவர் வெளிநாடு சென்றுள்ளமையால் ஏனைய 7 பேரும் மல்லாகம் நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், பத்திநாதன் தேவதயாளன் என்பவர் பிணையில் செல்வதற்கு யாழ். மேல் நீதிமன்றம் அனுமதியளித்திருந்தது. இந்த வழக்கு மல்லாகம் நீதவான் நீதிமன்றத்திலும், யாழ்.மேல் நீதிமன்றத்திலும் நடைபெற்று வந்த நிலையில், இரண்டு வழக்குகளிலும் ஒன்றிலிருந்து 7 வரையிலான சாட்சிகள் சிவிலியன் சாட்சிகளாக உள்ளனர்.

இதில் ஒரு சாட்சியான துரைராசா லோகேஸ்வரன் (வயது 40) என்பவரே இவ்வாறு பொலிஸாரால் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தார். தனது சட்டத்தரணியான விஸ்வலிங்கம் மணிவண்ணனை பார்ப்பதற்காக சுன்னாகத்தில் சென்று கொண்டிருக்கும் போது, சுன்னாகத்தில் மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்த சீருடை அணிந்த இரு பொலிஸ உத்தியோகஸ்தர்களில் பிரசாத் என்பவர் நீதிமன்றத்தில் என்னுடைய பெயரை சொன்னால் நீ இல்லாமல் போய்விடுவாய் என மிரட்டப்பட்டார்.

இது தொடர்பில் மல்லாகம் நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்ட பின்னர அச்சுறுத்தல் சம்பவம் தொடர்பில் யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் முறைப்பாடு செய்யுமாறும் அறிவுறுத்தியிருந்தார். இந்த நிலையில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரெலசின்லாசிடம் முறைப்பாடும் செய்யப்பட்டது. இந்த முறைப்பாட்டை அடுத்து அச்சுறுத்தல் விடுத்த பொலிஸ் உத்தியோகஸ்தர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும்,

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணை மேற்கொள்வதற்கும் நேற்று முன்தினம் அச்சுறுத்தலுக்கு உள்ளான குறித்த சாட்சி யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியகட்சர் காரியாலயத்திற்கு அழைத்து வரப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இதன்போது வாக்குமூலத்தை பெற்ற பொலிஸ் அதிகாரி குறித்த வாக்குமூலத்தை சிங்களத்தில் பதிவு செய்துள்ளார். இதனால் அதில் என்ன எழுதப்படுகின்றது என தன்னால் புரிந்து கொள்ள முடியாமல் உள்ளது எனவும், தமிழில் பதிவு செய்தால் தான் அதில் கையொப்பம் இடுவதாகவும் கூறி தொடர்ந்து வாக்குமூலம் வழங்குவதற்கு மறுப்பு தெரிவித்துள்ளார். எனினும் பொலிஸ் அதிகாரிகளும் தமிழில் வாக்குமூலத்தை பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் குறித்த சாட்சியை திருப்பி அனுப்பியுள்ளனர். (4)

# கெற்பேலியில் மணல் அகழ்வு; பொதுமக்கள் எதிர்த்து ஆர்ப்பாட்டம்

### கடல்நீர் புகும் அபாயம் எனச் சுட்டிக்காட்டு

(கச்சாய்)

சாவகச்சேரி பிரதேச செயலக எல்லைக்கு உட்பட்ட கெற்பேலி மணற்காடு இந்து மயானம் அமைந்துள்ள கடற்கரைப்பகுதிகளில் மணல் அகழ்வு இடம்பெறுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்றையதினம் பொதுமக்கள் எதிர்ப்புப் போராட்டம் நடத்தினர்.

கெற்பேலி மணற்காடு மயானம் பகுதியில் மணல் அகழ்வு செய்யப்படுவதனால் கடல் நீர் உட்புகும் அபாயம் உள்ளதாக தெரிவித்து பொது மக்களும் பொது அமைப்புகளுமாக சாவகச்சேரி பிரதேச செயலரிடம் மகஜர் கையளித்திருந்தனர்.

இந்நிலையில் குறித்த இடத்தில் மணல் அகழ்வு மேற்கொள்வதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

எனினும் நேற்றையதினம் குறித்த இடத்தில் மணல் அகழ்வு இடம்பெற்றதன் காரணமாக பொதுமக்கள், மணல் விநியோகத்தில் ஈடுபட்ட வாகனங்களை வழிமறிப்புச் செய்து போராட்டம் நடத்தினர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த கொடிகாமம் பொலிஸார் அனுமதியுடன் மணல் அகழ்வு இடம்பெறுவதை காரணம் காட்டி ஆர்ப்பாட்டத்தை தடுத்து நிறுத்தினர்.

இதேவேளை மணல் அகழ்வால் கடல் நீர் ஊருக்குள் வரும் அபாயம் இருப்பதை சுடடிக்காட்டி வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், சிறுவர் விவகார அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் மற்றும் சாவகச்சேரி பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு ஆகியோருக்கு பொது அமைப்புகள் அவசர மகஜர் அனுப்பி வைத்துள்ளன. (ந)

## காணி இல்லா...

ங்கப்பட வேண்டியது அவசியம். அவ்வாறு காணிகளை மீள வழங்க முடியாவிடின் காணி உரிமையாளர்களுக்கு நட்டஈடு வழங்கப்பட வேண்டும். இதுவே ஐக்கிய நாடுகள் சபையின் நிலைப்பாடாகும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி உனாமெக்குலே தெரிவித்தார். (11)

## நனவாகும்...

நிறைவேற்றப்பட்டு வருவதாக வட மாகாண அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார். வடமாகாண விவசாய அமைச்சினால் கிளிநொச்சியில் கால்நடை பயிற்சி நிலையம் நேற்று திறந்து வைக்கப்பட்டது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், கால்நடை பயிற்சி மையம் அமைந்துள்ள இடத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் பல் வைத்தியசாலை ஒன்றை அமைக்க திட்டமிட்டிருந்த இடமாகும்.

மேலும், இந்த இடத்திற்கு விடுதலைப் புலிகள் அறிவியல் நகரம் என்றே பெயர் சூட்டியிருந்தனர். அந்த வகையில் விடுதலைப் புலிகளின் கனவுகள் நனவாகிக் கொண்டிருக்கின்றன. இந்த பகுதிக்கான அபிவிருத்திகளை மிக வேகமாக முன்னெடுத்து செல்ல வேண்டும். எம்மிடம் இருக்கின்ற வளங்களை கொண்டு அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (11)

## ஈழத் தமிழர்கள்...

குரல் கொடுக்க வேண்டிய தார்மீகக் கடமை இந்திய அரசிற்கு இருக்கின்ற போதும் அது மௌனமாக இருப்பதாக டி.ராஜா தெரிவித்துள்ளார்.

சென்னையில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு கூறியுள்ளார். 2009-ம் ஆண்டு நடந்த போரில் பல லட்சம் தமிழர்கள் கொல்லப்பட்டதை சுட்டிக் காட்டிய அவர், இலங்கை அரசு செய்த போர்க் குற்றம், மனித உரிமை மீறல் ஆகியவை குறித்து சர்வதேச விசாரணை நடத்த அண்மையில் ஜெனிவாவில் நடந்த மனித உரிமைகள் குழு கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்வது தொடர்பில் விவாதிக்கப்பட்ட நிலையில், விசாரணை நடத்த 2 ஆண்டுகள் அவகாசமும், வெளிநாட்டு நீதிபதிகள் மூலம் விசாரணை நடத்தக் கூடாது என்றும் இலங்கை கேட்டுக் கொண்ட நிலையில் அதற்கான காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். இதைத் தொடர்ந்து இந்திய அரசு, இலங்கை போர்க் குற்ற விசாரணை தொடர்பான தனது நிலைபாட்டை விளக்கவில்லை என்றும் இந்திய அரசு ஈழத்தமிழர்களுக்காக தார்மிக முறையில் குரல் கொடுக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். இலங்கை இராணுவத்தினால் தொடர்ச் சியாக இந்திய மீனவர்கள் தாக்கப்பட்டும் வருவதால், கச்சத்தீவு உடன்படிக்கையை இந்திய அரசு மறுபரிசீலனை செய்ய வேண் டும் எனவும் டி.ராஜா கோரிக்கை விடுத்துள்ளார். (11)

## கூட்டமைப்பின்...

தீர்மானங்களை நிறைவேற்றி, மக்களின் உரிமைகளை வென்றெடுப்போம் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் தொழிலாளர் உரிமை, மீள்குடியேற்றம், காணி விடுவிப்பு, ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்கள் மிக விரைவில் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதுடன் இனப்பிரச்சினைக்கு தீர்வு விரைவில் காண வேண்டும் உள்ளிட்ட விடயங்களை வலியுறுத்தி மே தினக் கூட்டம் நடைபெறுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (11)

## ஹன்ரரை...

ரர் வாகனத்தை பொலிஸார் துரத்தியதனால் அச்சத்தில் வீதியை விட்டு பொதுமக்கள் விலகி நின்ற சம்பவம் நேற்றிரவு பருத்தித்துறை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டு வந்த மேற்படி ஹன்ரர் வாகனத்தை பொலிஸார் மறித்த போது நிற்காமல் தப்பியோடியது. இதனையடுத்து பொலிஸார் அவ் வாகனத்தை துரத்திச் சென்றனர்.

ஹன்ரர் வாகனத்தின் விளக்குகள் அனைத்தும் அணைக்கப்பட்டு அசுரவேகத்தில் சென்றது. பொலிஸார் தொடர்ந்து துரத்திய போது பருத்தித்துறை மந்திகை வழியாக துன்னாலைப் பகுதிக்கு சென்றதாக தெரிவிக்கப்பட்டது. (60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கி நின்று வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை.

**இடம் : மானிப்பாய்**

**தொ.பே : 0763121476**

(8873)



## CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



CNR World Wide Express
இல.401, மனிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062
follow us : cnrworldwideexpress

(அ-8408)



## வேலையாட்கள் தேவை

அல்பா மிக்சர் நிறுவனத்துக்கு பெண் ஊழியர்கள் உடன் தேவை. மானிப்பாய் பிரதேசத்திற்கு அண்மையில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை.

02.05.2017 திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு நேர்முகத்தேர்வு நடைபெறும்.

தொடர்புகளுக்கு: 0777725582

அல்பா மிக்சர், பக்கஸ் லேன், உடுவில் வீதி, மானிப்பாய்.

(8866)


## கொத்திய பெண்...

பெண்ணை நேற்று காலை கொடிகாமம் பொலிஸ்நிலைய இரகசிய புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை காணிப் பிணக்கு காரணமாக குடும்பப் பெண்ணொருவர் தாக்கப்பட்டு படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

இந்நிலையிலேயே குறித்த பெண்ணை தாக்கிய குற்றச்சாட்டில் பாலாவி பகுதியில் மறைந்திருந்த 35 வயதான குடும்பப் பெண்ணை கொடிகாமம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர் மீது வழக்கு பதிவுசெய்து இன்றைய தினம் சாவகச்சேரி நீதிவானின் வாசஸ்தலத்தில் முற்படுத்தவுள்ளதாக கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர். (89)


## வேலையாட்கள் தேவை

பிரபல உணவகம் ஒன்றுக்கு கீழ்வரும் வேலையாட்கள் தேவை.

1) சப்பிளையர் (ஆண் / பெண்)
2) காசாளர்
3) சாரதி
4) பில்கிளாக்
5) குசினி வேலையாட்கள்
6) மரக்கறி வெட்டுபவர்கள் (ஆண் / பெண்)
7) சுத்திகரிப்பாளர்கள் (ஆண் / பெண்)

மேலும் இதர வேலைகளுக்கு உடனடி தொடர்புக்கு

**0777917753**

**யாழ்ப்பாணம்** (8883)



## வீடு வாடகைக்கு

நிறுவனத்துக்கும், களஞ்சியத்துக்கும் உகந்த வீடு வாடகைக்கு உண்டு.

**153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

**தொடர்பு : 0777558340**

(8882)


## முள்ளிக்குளம்...

காணிகள் தவிர ஏனைய காணிகளில் மக்கள் குடியேற அனுமதிக்கப்பட்டுள்ளனர் இருபத்தேழு குடும்பங்களின் காணிகள் ஆறுமாத காலத்துக்குள் விடுவிப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் காணிகளை பார்வையிட்ட மக்கள் இன்றைய தினம் தமது ஆலயத்தில் பூசை வழிபாடுகளை முடித்துக்கொண்டு குடியேறவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்

முள்ளிக்குள மக்கள் பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்களான சார்ள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அன்ரனி விக்டர் சோசை, கடற்படைத் தளபதிகள் ஆகியோர் இந்த அடையாளப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

முள்ளிக்குளத்தில் கடற்படையினர் வசமுள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி முள்ளிக்குள மக்கள் நேற்று 38 ஆவது நாளாக போராட்டத்தை முன்னெடுத்த நிலையிலேயே காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன

மூன்று நாட்களுக்குள் மீண்டும் அனுமதிப்பதாக தெரிவித்து 2007 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 8 ஆம் திகதி இராணுவம் தம்மை வெளியேற்றியதாக முள்ளிக்குளம் மக்கள் குறிப்பிடுகின்றனர்.

தம்மை வெளியேற்றிய பின்னர் தமது முழுமையான கிராமத்தையும் ஆக்கிரமித்து கடற்படையின் வடமேற்கு பிராந்திய கட்டளைத் தலைமையகம் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகவும் அம்மக்கள் தெரிவித்துள்ளனர். (15-281)


## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
● மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.
● விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு.
● எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS

**V2 TRAVELS-0768226240**

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

(அ-8229)



## வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

**070 330 5500**

அண்ணா அன் கோ
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் annalk.com

லண்டனுக்கு (UK) 5kg க்கு மேல் மிகக் குறைந்த கட்டணம்

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.

யாழ்ப்பாணம் | நவாலி | சாவகச்சேரி | மீசாலை | மல்லாவி | முல்லைத்தீவு | கிளிநொச்சி | திருகோணமலை | வவுனியா

(அ-8273)



## ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



➢ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் , FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
➢ அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
➢ யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

தொலைபேசியில் இன்றே பதிவுகளை மேற்கொள்ளுங்கள்

**021 222 8093** 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

(8885)




# AIR COOLER& AIR CONDITIONERS, TV'S

SPECIAL OFFER

## எங்குமே இல்லாத விலைக்கழிவில் எம்மிடம்



Telesonic Air Cooler
1 YEAR WARRANTY
16,480/=



PORTABLE AC 12000 BTU
RS: 59,500/=
நீங்கள் விரும்பிய இடங்களிற்கு கொண்டு சென்று பாவிக்க கூடியது.
விசேட விலைக்கழிவுடன் Kings Electronics (Pvt) Ltd நிறுவனத்திடம் இருந்து இன்றே வாங்கிச் செல்லுங்கள்

Sony 5.1 Home Theater
RS 22,500/=
1 YEAR WARRANTY

LED TELEVISIONS
Samsung 32" -29900/=
Hisence 32" -24500/=
Hisence 24" -17900/=
Tcl 32" -21900/=
Panasonic 32" -28500/=
Sony 32" -33600/=
3 YEARS

Wall Split Mounted AC
With Installation

| Btu | Media | Panasonic |
|---|---|---|
| 9000 BTU | 58,500/= | 79,500/= |
| 12000 BTU | 62,500/= | 86,500/= |
| 18000 BTU | 78,500/= | 109,500/= |

STAND FAN
RS.2900.00
ONEYEAR WARRANTY

SONY
43" SMART FULL HD RS.82, 900 ONLY
48" SMART FULL HD RS.119,900 ONLY
HDMI 3Years WiFi YouTube X-Reality

KINGS ELECTRONICS(PVT) LTD
12A, Point Petro Road, Jaffna (வேம்படிச் சந்திக்கு அருகாமையில்)
021-4546699 mykings.lk kingsjaffna

(அ-8417)



நாகதம்பிரான் நல்லருள் நாடெங்கும் பாலிக்கும்

வரலாற்று சிறப்புமிக்க

**கிளி/கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயம்**





## இராஜகோபுர (சூலலிங்கம்) அடிக்கல் நாட்டு விழா மங்கல அழைப்பு

*நாகதம்பிரான் மெய்யடியார்களே!*

நிகழும் மங்கலகரமான ஏவிளம்பி வருடம் சித்திரை திங்கள் 18ஆம் நாள் (01.05.2017) திங்கட்கிழமை பகல் 11.00 மணிமுதல் 1.00 மணி வரையுள்ள புநர்பூச நட்சத்திரமும் சித்தாமிர்த யோகமும் கூடிய சுபமுகூர்த்தத்தில் நாகதம்பிரானுக்குரிய பஞ்சதள இராஜகோபுரம் அமைய திருவருள் கைகூடியுள்ளதால் கோபுர தரிசனம் கோடிபுண்ணியம் என்பதற்கிணங்க அடியார்களாகிய நீங்கள் உங்களுடைய திருக்கரங்களினால் அத்திபாரமிட்டு சிறப்பித்து நாகதம்பிரான் திருவருளை பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

தொடர்ந்து நடைபெறும் அன்னதான நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.

இவ்வண்ணம்:
நாகதம்பிரான் பணியில்
தர்மகர்த்தாக்களும் பரிபாலன சபையினரும்

(அ-8426)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை ... யாழ்ப்பாணம் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.04.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a Newspaper in Srilanka
Viber 076 636 3378
வாரமலர்
# வலம்புரி
சங்குநாதம்
நாதம் 115
வள்ளுவர் ஆண்டு 2048 30.04.2017 தொலைபேசி : 021 222 3378






# முடங்கியது தமிழர் தாயகம்




உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறைவணக்கத்துடன் மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் அறிவிக்க, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

**வாத்தியார்:** காணாமல் போன உறவுகள்; நில மீட்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் நடத்துகின்ற தொடர் போராட்டங்களுக்கு தமிழ்மக்கள் தங்கள் ஒட்டுமொத்த ஆதரவை தெரிவித்து கடந்த 27 ஆம் திகதி வடக்கு- கிழக்கு தழுவிய ரீதியில் பூரண ஹர்த்தால் அனுஷ்டித்திருக்கினம்.

தமிழ் மக்களின் அகிம்சை வழியிலான இந்தப் போராட்டத்திற்கு நல்லாட்சி உரிய நடவடிக்கை எடுக்க வேணும்.

ஹர்த்தால் நடந்தால், அது பற்றி எங்களுக்கு எந்தக் கவலையும் இல்லை என்று இலங்கை அரசு நினைத்தால், அது இலங்கையின் எதிர்கால அமைதிக்கும் சமாதானத்திற்கும் குந்தகமாகவே அமையும்.

**பண்டிதர்:** வாத்தியார் சொல்லுறது நூறு வீதம் உண்மை. அந்த நேரத்தில தந்தை செல்வநாயகம் முன்னெடுத்த அகிம்சைப் போராட்டத்திற்கு இலங்கை ஆட்சியாளர்கள் உரிய மதிப்பைக் கொடுத்திருந்தால், இன்றைக்கு இலங்கையின் முன்னேற்றம் நினைத்துப்பார்க்க முடியாத அளவில் உச்சம் பெற்றிருக்கும்.

ஆனால் தமிழ் மக்களின்ர அகிம்சைப் போராட்டத்தை ஆயுதமுனையில் அடக்க நினைத்ததால் இலங்கையில் முப்பது ஆண்டு காலப்போர் நடந்தது. போரின் முடிவு அழிவுகளும் இழப்புக்களுமாகவே இருந்தன.

**சாத்திரியார்:** பண்டிதர் ஐயா நீங்கள் சொன்னது முற்றிலும் உண்மை. எங்கட தந்தை செல்வநாயகம் அவர்கள் இலங்கைப் பாராளுமன்றத்தில வைத்துச் சொன்னவரல்லோ; எங்கட அகிம்சைப் போராட்டத்தை நீங்கள் மதிக்கத் தவறினால்- தமிழ் மக்களின் உரிமையைக் கொடுக்க மறுத்தால், எதிர்காலத்தில் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்துவர் என்று.

தந்தை செல்வநாயகம் கூறியது யதார்த்தமானது தானே.



## தமிழ் மக்கள் ஒன்றுகூடி தங்கள் எதிர்ப்பைக் காட்டினர்

**மூப்பர்:** இப்பவும் அடித்துச் சொல்ல முடியும். இலங்கை ஆட்சியாளர்கள் தமிழ் மக்களின் பிரச்சினையை ஏனோ தானோ என்று பாராமுகமாக்கினால் எதிர்காலத்திலும் இலங்கையின் முன்னேற்றம் என்பது கேள்விக்குரியதாகத்தான் இருக்கும்.

**விதானையார்:** அது சரி வாத்தியார் திருகோணமலையில தமிழ் மக்கள் பேரவை கூடி சில முடிவுகளை எடுத்தவர்களல்லோ. தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவர், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களும் பேரவை உறுப்பினர்களும் திருகோணமலையில உள்ள உவர் மலையில 50 ஆவது நாளாக தொடர் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் காணாமல்போன உறவுகளைச் சந்தித்து ஆறுதல் கூறினவியள்.

அந்த நேரத்தில இருந்தவர்கள் வடக்கு முதலமைச்சரையும் பேரவை உறுப்பினர்களையும் பார்த்து எங்கள வந்து பார்த்தது ஆறுதலைத் தருகிறது.

அண்டைக்கும் சம்பந்தர் ஐயா திருகோணமலைக்கு வந்து போனவர். எங்களைத் திரும்பியும் பார்க்கல்ல. நாங்கள் வாக்களித்து அவர்களைப் பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைச்சம்.

ஆனால் ஏன் சுவாணம் எண்டும் சம்பந்தர் ஐயா எங்களைக் கேட்கவே இல்லை. இப்படி அவர்கள் சொன்னவர்களாம்.

**கங்காணி:** விதானையார் இப்ப இதுதான் நிலைமை. மக்களின்ர ஆதரவோட ஆசனத்தைப் பிடித்துவிட்டால் அதுபோதும். அதற்குப் பிறகு மக்களைப் பற்றியெல்லாம் சிந்திக்கவேண்டிய தேவையிராது.

**மூப்பர்:** தேர்தல் எண்டால் பிறகும் மக்களிடத் தானே [illegible]

**கங்காணி:** அந்த நேரம் மக்களை எப்படி வளைத்துப் போடுவது எண்டு அவர்களுக்கு நன்கு தெரியும். அதற்கேற்றாற் போல் அவர்கள் நாடகம் நடிப்பினம். இப்பவே காணி விடுதலை தொடர்பில தமிழ் அரசியல் தலைமை இராணுவ அதிகாரிகளைச் சந்தித்தது எண்டால் பாருங்களன்.

**சாத்திரியார்:** உந்த நாசமறுந்த அரசியல விட்டிட்டு எங்கட சமூக விவகாரங்களைப் பற்றிக் கதையுங்கள். அது சனத்திற்காவது உதவியாக இருக்கும்.

**பண்டிதர்:** அதுசரி வவுனியாவில் இருக்கிற அம்மாச்சி எண்ட சாப்பாட்டுக்கடை மிகச் சிறப்பாக இயங்குது.

**விதானையார்:** அப்ப யாழ்ப்பாணத்திலும் ஒரு அம்மாச்சிக்கடை திறந்தால் என்ன?

**மூப்பர்:** திருநெல்வேலியில இருக்கிற விவசாயப் பாடசாலை வளவில அம்மாச்சி சாப்பாட்டுக் கடை கட்டப்படுகுதாம்.

**சாத்திரியார்:** அப்ப இனி அறுகம்புல் யூஸ், நன்னாரித் தேநீர், குரக்கன் பிட்டு எல்லாம் சாப்பிடலாம்.

(சாத்திரியார் இப்படிக் கூறியதும் ஆலடியில் சிறிது நேரம் மௌனம் நிலவியது. அந்த மௌனத்தைக் கலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத் தார்)

**விதானையார்:** நான் நினைக்கவில்லை. வவுனியாவில இருக்கிற அம்மாச்சி சாப்பாட்டுக் கடை போல யாழ்ப்பாணத்தில இயங்குமெண்டு.

**மூப்பர்:** ஏன் விதானையார் அப்படிச் சொல்லுறியள்.

**விதானையார்:** எங்கட யாழ்ப்பாணத்தில எதைச் செய்வதாக இருந்தாலும் அதில ஒரு அடிப்படைக் கஷ்டம் இருக்கத்தான் செய்யும்.

**கங்காணி:** உண்மை தான். திருநெல்வேலி பாம் ஸ்கூலில ஒரு மரக்கறி விற்பனை நிலையம் திறந்திருக்கினமல்லோ. அங்க எத்தனையோ நாள் போய்ப் பார்த்திருக்கிறன். ஒரு மரக்கறியும் கிடையாது. அண்டைக்கும் போனனான். ஒரு சிறிய நீற்றுப்பூசணிக்காய் மட்டும் இருந்தது. நீற்றுப் பூசணிக்காய் என்ன விலை எண்டுகேட்டன். அது விலைப்பட்டு விட்டது என்று பதில் சொல்லிச்சினம். ஆருக்கு விற்றது என்று பதில் கேட்டன். அங்க வேலை செய்யிறவியள் எடுத்ததாகச் சொல்லிச்சினம்.

**வாத்தியார்:** அட சங்கதி அப்படியோ. அப்ப ஏனாம் விற்பனை நிலையத்தை ஆரம்பிச்சவியள்.

**பண்டிதர்:** விற்பனை நிலையம் மாதிரித்தான் அம்மாச்சி சாப்பாட்டுக் கடையும் இருக்குமோ என்பதுதான் என்ர பயம்.

**கங்காணி:** எங்கட திருநெல்வேலி பாம் ஸ்கூல் பல ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டது. அறுகு, குரக்கன், நன்னாரி, வல்லாரை, சிறுகுறிஞ்சா, பப்பாசி இப்படியான உற்பத்திகளை செய்தால் அம்மாச்சி கடை ஓகோ எண்டு ஓடும்.

ஏதோ திட்டமிட்டுச் செய்தால் நல்லது. இப்படி கங்காணியார் சொல்ல அதை அங்கீகரிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் மணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தக் கண்ணீர்ப் போராட்டம் எப்போது காணாமற்போகுமோ?

வடக்கு - கிழக்கில் கடந்த 27 ஆம் திகதி பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

காணாமற் போனவர்களின் உறவினர்களின் கோரிக்கைக்கு அமைவாக இந்தக் ஹர்த்தால் - கடையடைப்பு இடம் பெற்றது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாக முடங்கியது.



27 ஆம் திகதி ஏ-9 வீதியில் போராட்டம்...

வடக்கு- கிழக்கு முழுவதிலும் ஹர்த்தாலுக்கு ஆதரவாக கடையடைப்பு இடம் பெற்றாலும் மட்டக்களப்பில் சில முஸ்லிம் வர்த்தகர்கள் ஆதரவளிக்க வில்லை. மிகவும் சொற்பமானவர்களே இந்தக் ஹர்த்தாலுக்கு ஆதரவளிக்க வில்லை.

எழுக தமிழுக்கு ஆதரவளித்தால் நல்லாட்சி என்று தாங்கள் ஆதரவளிக்கும் தரப்பினர் கோபித்துக் கொள்வார்கள். தங்களுக்கான சலுகைகளை நிறுத்தி விடுவார்கள் என்ற அச்சத்தில் மக்கள் போராட்டத்தை அரசியல் போராட்டமாகச் சித்திரித்து சிதைக்க நினைத்து தோற்றுப்போன தமிழ்த் தலைமைகள் போன்றுதான் ஹர்த்தாலை எதிர்த்த குறித்த முஸ்லிம் தரப்பையும் நாம் நோக்க வேண்டும்.



வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் உள்ளிட்ட தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் திருகோணமலையிலுள்ள கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுடன் கடந்த 23 ஆம் திகதி சந்தித்துக் கலந்துரையாடிய போது...

எழுக தமிழ் எதைச் சாதித்தது என்று கேட்டவர்கள் ஹர்த்தால் எதைச் சாதித்ததோ அதைத்தான் எழுக தமிழும் சாதித்தது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

மக்களின் கோரிக்கைகளை முன்னிறுத்தி முன்னெடுக்கப்படும் போராட்டங்களை கொச்சைப்படுத்தாது ஒன்றிணைந்து போராட வேண்டும். எல்லாவற்றிலும் அரசியல் இலாபம் தேட முற்படக்கூடாது. அதே வேளை மக்கள் போராட்டங்களை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது என்பதை இனியாவது புரிந்துகொள்ள வேண்டும்.

காணாமற் போனவர்களின் உறவினர்கள் நீண்ட காலமாக தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கில் தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் கடந்த 8 ஆண்டுகளாக அவர்களின் போராட்டங்கள் முடிவின்றித் தொடர்கின்றன.

காணாமற்போனோர்களின் உறவினர்களின் கண்ணீரைப் போக்கும் நடவடிக்கையை அரசு எடுக்கும் என்று எதிா பார்க்கும் சந்தர்ப்பங்களில் எல்லாம் கண்ணீரைப் பெருக்கும் வேலைகள் தான் அரங்கேற்றப்படுகின்றன.

மைத்திரி அரசு தீர்வைத் தரும் என்ற நோக்கோடு மகிந்த அரசிற்கு முற்றுப்புள்ளி வைக்க முடிவெடுத்த தமிழ் மக்கள் அதில் வெற்றியும் கண்டனர். ஆனால், சிங்களவர்கள் அனைவரும் தமிழருக்குத் துரோகம் இழைப்பவர்களாகவும் கண்ணீரைப் பெருக்குபவர்களாகவுமே உள்ளனர்.

என்ன செய்வது நம்பிக்கெடுவது தமிழரின் தலைவிதியாகிவிட்டது. போர்க்குற்றங்களில் ஈடுபட்ட படையினரைப் பாதுகாக்கும் முயற்சியில் அதிக ஈடுபாடு காட்டும் மைத்திரி - ரணில் கூட்டரசும் தமிழர் நலனில் அக்கறை காட்டவில்லை.




27 ஆம் திகதி நடந்த ஹர்த்தாலின்போது...

வடக்கில் யுத்த காலத்தில் காணா மல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு விட்டது என்று அரசு அறிவித்ததன் பின்னர் பல கட்டப் போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.

அதன் தொடர்ச்சியாகவே கடந்த 27 ஆம் திகதி வடக்கு- கிழக்கு தழுவிய ரீதியில் பூரண ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்தனர். அதே வேளை ஏ-9 வீதியை மறித்தும் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

வீதியில் விழுந்து கண்ணீர்விட்டு கதறியழுத தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளை ஒருமுறையாவது பார்க்க வேண்டும் என்ற ஏக்கத்தை வெளிப்படுத்தியிருந்தனர்.

இதற்கு முன்னரும் பல சந்தர்ப்பங்களில் வீதியில் கண்ணீர் சிந்திய காணாமற் போனவர்களின் உறவினர்கள், தங்களின் உறவுகளின் படங்களைக் கையில் ஏந்தியபடி ஏக்கத்துடன் காத்திருக்கின்றனர்.

காணாமற்போனவர்களின் உறவினர்களின் ஏக்கத்தைப் போக்க வேண்டும் என்பது ஒட்டுமொத்த தமிழ் பேசும் மக்களின் கோரிக்கையாக மாறியுள்ளது.

தமிழ் மக்கள் இரண்டாம் தரப் பிரஜைகள் இல்லை; அவர்களும் சமவுரிமையுடன் வாழ வேண்டும் என்று கூறும் சிங்களத் தலை வர்கள் அதை நடைமுறைப்படுத்த முயற்சிக்க வேண்டும்.

வடக்கு -கிழக்கை முற்றாக முடக்கிய ஹர்த் தாலைக் கண்டாவது அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அப்படி அரசு செய்யத் தவறின் தமிழர் தரப்பு இனியாவது காத்திரமான நடவடிக்கையில் இறங்க வேண்டும்.

நல்லாட்சி என்று தங்களுக்குத் தாங்களே பெயர் சூட்டிக்கொண்டு நீண்டகாலம் இந்த அரசுடன் பயணிக்க முடியாது. தமிழ் மக் களை இந்த அரசும் ஏமாற்றிவிட்டது என்று வெளிப்படையாக அறிவித்துவிட்டு ஆதரவை வாபஸ் பெற வேண்டும்.

அதேவேளை இந்த அரசு எங் களால் தான் உருவானது என்று மார்தட்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. தமிழ் மக்களை மைத்திரிக்கு வாக்களிக்குமாறு கோரியது தவறு என்று பகிரங்கமாக மன்னிப்பும் கேட்க வேண்டும்.

தமிழ் மக்களை இனியும் ஏமாற்ற முடியாது. தமிழ் மக்கள் சிங்களவர்களாலும் ஏமாற்றப்படுகின்றனர். சிங்களவர்களைத் தெரிவு செய்யுமாறு கோரிய தமிழ்த் தலைமைகளாலும் ஏமாற்றப்படு கின்றனர்.

ஐ.நாவில் இரண்டு வருட கால அவகாசத்தை அரசிற்கு பெற்றுக் கொடுக்க அக்கறை காட்டிய தமிழ்த் தலைமை. தமிழ் மக்களின் கண் ணீரைப் போக்க அரசிற்கு காலக் கெடு விதிக்க வேண்டும்.

போர் முடிவிற்கு கொண்டு வரப்பட்ட பின்னரும் கூட கடந்த எட்டு ஆண்டு களாக ஏக்கத்துடன் தான் தமிழ் மக்கள் வாழ்கின்றனர். அதேவேளை தங்களின் கண்ணீரைப் போக்க வழி ஏற்படுத்துவார்கள் என்ற நம்பிக்கையில்தான் தங்களைத் தெரிவு செய்தனர் என்பதை தமிழ்த் தலைமைகள் புரிந்து செயற்பட வேண்டும்.

எனவே, காணாமற் போனவர்களின் கண்ணீர்ப் போராட்டத்தை தமிழர் தாயகத்தில் இனியும் நீடிக்க விடாதீர்கள். அதற்கு முற்றுப்புள்ளி வையுங்கள்.


தமிழ் மக்கள் சிந்திய கண்ணீர் போதும். அவர்களின் எதிர்காலத்தையாவது இயல்பு நிலைக்கு கொண்டுவர முயற்சியுங்கள்.

வீதிகளில் கண்ணீருடன் இருப்பது உங்கள் உறவுகள் என்பதை மறந்து விடாதீர்கள்.

எஸ்.ஆர்.கரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் தமிழின் விருது நீங்கள்



மதிப்புயர் கம்பவாரிதி இலங்கை இ.ஜெயராஜ் அவர்களுக்கு சிரம் தாழ்த்திய என் வணக்கம். இந்தியாவின் தமிழக அரசின் கம்பர் விருது தங்களுக்கு வழங்கப்படுவதாக ஊடகங்களில் அறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைந்தேன்.

அந்த அளவற்ற மகிழ்வு தூய்மையானது என்பதாலோ என்னவோ தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தங்களுக்கு கம்பர் விருது வழங்கி பொன்னாடை போர்த்திக் கௌரவித்ததை தந்தித் தொலைக்காட்சியில் பார்த்தேன். அதை ஒரு பேறாகக் கருதுகிறேன்.

எங்கள் ஈழத்தமிழின் ஒரு அடையாளம் தமிழக அரசின் கௌரவத்தைப் பெறுவது உங்களை எதிர்ப்பவர்களுக்கும் பெருமை தரக் கூடியது.

ஆம், எட்டுக்கோடி தமிழக மக்கள் எங்கள் ஈழத்தமிழனுக்கு வழங்கிய விருது அது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலருக்கு திருவாவடுதுறை ஆதீனம் நாவலர் பட்டம் வழங்கிக் கௌரவித்த பெருமையை இன்றுவரை கூறி இறும்பூதெய்தும் எமக்கு தமிழக அரசு எங்கள் ஜெயராஜூக்கு கம்பர்விருது வழங்கிக் கௌரவித்த பெருமையை இந்த யுகம் கடந்தும் ஈழத்தமிழினம் பெருமையோடு பேசிக்கொள்ளும்.

கம்பர்விருதை கம்பவாரிதி ஜெயராஜூக்கு தமிழக அரசு வழங்குதல் என்பதற்கு அப்பால், எத்தனையோ அறிஞர்கள் இதற்கு சிபாரிசிட்டிருக்க வேண்டும். அதுவும் தமிழக அரசு என்ற எல்லை கடந்து, நாடு கடந்து அந்த விருதை வழங்குவதென்பது தமிழக அரசுக்குத் தவிர்க்க முடியாததாகின்றதெனில், உங்களின் பேச்செனும் பேராற்றல் தமிழகத்தை எத்துணை தூரம் ஈர்த்துள்ளதென்பதைப் புரிதல் கடினமன்று.

கம்பவாரிதி பேச்சாற்றல் மிக்கவர் என்பவர் ஒருசாரார்; கம்பராமாயணத்தைக் கரைத்துக்குடித்தவர் என்பது இன்னொரு சாராரின் எடுத்துரைப்பு. இப்படியே பலரும் பலவாறு உங்கள் பெருமைக்கு காரணம் கூறுவர்.

ஆனால் கம்பன் இடையிடையே பிறப்பெடுக்கிறான் என்று சொல்வதையே உண்மை என்று நான் கருதுகிறேன். எதைச்சொன்னாலும் தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமிக்கு இரண்டு அதிர்ஷ்டங்கள். ஒன்று தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் மறைவுக்குப் பின்னர் தமிழக முதலமைச்சரானது. இரண்டாவது கம்பவாரிதி ஜெயராஜூக்கு கம்பர் விருதை தன்கையால் வழங்கியது.

தமிழகத்தில் ஆதீனங்கள் பல இருந்தாலும் இன்றுவரை திருவாவடுதுறை ஆதீனத்தையே நாம் உச்சரிக்கின்றோம். நாவலருக்கு விருதி வழங்கியதுதான் அதற்குக் காரணம். இதேபோன்றுதான் கம்பவாரிதி இ.ஜெயராஜூக்கு தமிழக அரசு கம்பர்விருது வழங்கிக் கௌரவித்ததென எங்களின் மாணவர்கள் பாடம்படிப்பர். அப்போது அந்த விருதை தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த எடப்பாடி பழனிச்சாமி வழங்கி வைத்தார் என்று மாணவர்கள் கற்றறிந்து கொள்வர்.

இது ஈழத்தமிழர்கள் மத்தியில் எடப்பாடி பழனிச்சாமியை என்றும் வாழவைக்கும். ஆதலால்தான் தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமிக்கு இரண்டு அதிர்ஷ்டம் என்றேன்.

எது எப்படியாயினும் முன்பும் இல்லை, இனியும் இருக்குமா என்றுரைக்க முடியாதவனாய் கம்பவாரிதி இ.ஜெயராஜ் பெற்ற தமிழக அரசின் கம்பர்விருது தமிழர்கள் என்றும் பெருமையோடு கூறிக் கொள்வதற்குரியது.

இலங்கை ஜெயராஜ் எனத் தமிழகத்தில் கட்டவுட் நாட்டி உங்களை தமிழக மக்கள் வரவேற்கின்ற செய்திகள் கண்டு நாங்கள் ஆனந்தமுற்ற சந்தர்ப்பங்கள் பல.

உங்களின் சொற்பொழிவுகள் தமிழக மக்களை ஈர்த்தாண்டு கொண்ட தகவல்கள் ஈழத்தமிழர்களுக்குப் பெருமை தரவல்லன.

தமிழகத்து அறிஞர்களுக்காக காத்திருந்த வரலாறே நமக்குண்டாயினும் இன்று இலங்கை ஜெயராஜூக்காக தமிழகம் ஆவலோடு காத்திருக்கிறது என்றால் அது ஒட்டுமொத்த ஈழத்தமிழர்களுக்கும் பெருமையல்லவா.

தமிழகத்து அறிஞர்கள் வியந்து போற்றுமளவில் இலங்கை ஜெயராஜின் பேச்சாற்றல் பேராற்றலாகி இன்று தமிழக அரசின் அதியுயர் விருதையும் பெற்றுக் கொண்டமை ஈழத்தில் தமிழ் வாழும் என்ற நம்பிக்கையை நமக்குத் தந்துள்ளது.

எல்லாவற்றுக்கும் மேலாக மரியாதைக்குரிய கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்களே! தமிழக அரசு உங்களுக்கு கம்பர்விருதை தந்திருக்கலாம். ஆனால் எங்கள் தமிழருக்கு நீங்கள்தான் விருது. ஆகையால் உங்கள் பேச்சாற்றல் எங்கள் இளம் சமூகத்தை வழிப்படுத்தட்டும். வாழ வைக்கட்டும். அதற்காக உங்கள் பேச்சாற்றல் எனும் பேராற்றல் தமிழர் தாயகம் எங்கும் பரவட்டும்.




-புருசோத்தமன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள் ...

பாடல்:- நிலவே என்னிடம் நெருங்காதே
படம்:- இராமு
பாடியவர்:- பி.வி.ஸ்ரீனிவாசன்



நிலவே என்னிடம் நெருங்காதே
நீ நினைக்கும் இடத்தில் நான் இல்லை..
நிலவே என்னிடம் நெருங்காதே
நீ நினைக்கும் இடத்தில் நான் இல்லை
மலரே என்னிடம் மயங்காதே
நீ மயங்கும் வகையில் நான் இல்லை
நிலவே என்னிடம் நெருங்காதே
நீ நினைக்கும் இடத்தில் நான் இல்லை..

கோடையில் ஒரு நாள் மழை வரலாம்
என் கோலத்தில் இனிமேல் எழில் வருமோ
கோடையில் ஒரு நாள் மழை வரலாம்
என் கோலத்தில் இனிமேல் எழில் வருமோ
பாலையில் ஒரு நாள் கொடி வரலாம்
என் பார்வையில் இனிமேல் சுகம் வருமோ
நிலவே என்னிடம் நெருங்காதே
நீ நினைக்கும் இடத்தில் நான் இல்லை

அமைதியில்லாத நேரத்திலே
அமைதியில்லாத நேரத்திலே
அந்த ஆண்டவன் என்னையே படைத்து விட்டான்
நிம்மதி இழந்து நான் அலைந்தேன்
இந்த நிலையில் உன்னை ஏன் தூது விட்டான்
நிலவே என்னிடம் நெருங்காதே
நீ நினைக்கும் இடத்தில் நான் இல்லை
மலரே என்னிடம் மயங்காதே
நீ மயங்கும் வகையில் நான் இல்லை
நிலவே என்னிடம் நெருங்காதே
நீ நினைக்கும் இடத்தில் நான்.... இல்லை...

# கனவுகளும் பலன்களும்



வீடியோ விளையாட்டு சாதனத்தைக் கனவில் கண்டால் நரம்புத் தளர்ச்சி நோய் வரலாம். அந்த சாதனத்தில் விளையாடுவது போலக் கனவு கண்டால் மூளை பாதிப்பு ஏற்படலாம்.

தொலைக்காட்சிப் பெட்டியைக் கனவில் கண்டால் எதிர்கால வாழ்க்கை சிறப்பாக அமையும். ரி.வி.பெட்டியை இயக்குவது போலக் கனவு கண்டால் திட்டங்கள் உருவாகும். ரி.வி. பெட்டி உடைந்து விட்டது போலக் கனவு கண்டால் தொழிலில் நஷ்டம் ஏற்படும்.

**நீதிமன்றம்-நீதிபதி-சட்டத்தரணியை கண்டால்**

நீதிமன்றத்தை கனவில் கண்டால் நீதிக்காக எத்தனை வருடம் போராடினீர்களோ அதற்கு கைமேல் பலன் கிடைக்கும். அது உங்களுக்கு சாதகமாகவும் மனத்திருப்தியாகவும் அமையும். நீதிமன்ற வழக்கு இல்லாதவர்களுக்கு ஏதாவது வழியில் நீதிமன்றம் ஏறும் நிலை வரும். ஆகவே எச்சரிக்கை உணர்வுடன் நடந்து கொள்வது நல்லது.

நீதிபதியை கனவில் கண்டால் உங்களுக்கு எதிராக வழக்கு கொடுத்தவரே உங்களிடம் சமாதானத்திற்கு வருவார்கள். வழக்குக்கு சம்பந்தம் இல்லாதவர்களிடத்தில் வழக்குக்கான ஆலோசனையை கேட்காமல் இருப்பது நல்லது.

சட்டத்தரணியிடம் உரையாடுவது போலக் கனவு கண்டால் பேச்சினால் எக்காரியத்தையும் சர்வ சாதாரணமாக சாதிப்பீர்கள். வில்லங்கமான காரியத்தில் தலையிட நேரலாம். உங்களிடம் வீண் சண்டை போடவோ சிலர் வருவர். நீண்ட காலமாக ஏதாவது காரியத்திற்காக போராடிக் கொண்டு இருந்தால் அந்தக் காரியத்திற்கான தடைகள் விலகி வேலை கைகூடும்.

சட்டத்தரணியிடம் சண்டை போடுவது போலக் கனவு கண்டால், பெரிய ஆபத்தில் சிக்கிக் கொண்டு திணறுவீர்கள். வசதிகள் இருந்தாலும் அனுபவிக்க முடியாத சூழ்நிலை உண்டாகும். உறவினர்களிடத்தில் சண்டை போடும் நிலை வரும். அவர்களால் தொல்லையும் இருக்கும்.

பொதுவாகவே இரவு ஒரு மணிக்கு கனவு கண்டால் ஒரு வருடத்திற்குள் பலன் கிடைக்கும். இரண்டு மணிக்கு கனவு கண்டால் மூன்று மாதத்திற்குள் பலன் கிடைக்கும். மூன்று மணிக்கு கனவு கண்டால் ஒரு மாதத்திற்குள் பலன் கிடைக்கும். விடியற்காலையில் கனவு கண்டால் உடனே பலிக்கும். ஆனால் பகல் கனவு பலிக்காது என்கிறது கனவு சாஸ்திரம்.

சிலருக்கு கனவு கண்ட சில நாட்களிலேயே பலிக்கும். தீய கனவு கண்டால் நினைத்து நினைத்தே வேதனைப்படுபவர்களும் இருப்பார்கள். அப்படி தீய கனவைக் கண்டவர்கள் இறைவனை நம்பிக்கையுடன் வணங்கினால் தீய கனவுகளும் வெறும் கனவாகவே ஆகிவிடும். மொத்தத்தில் இறைவன் ஒருவனே மிகப் பெரியவன். அவனையே முழுமனதுடன் நம்பினால் சங்கடங்கள் விலகி வாழ்நாள் முழுவதும் எதிலும் சாதிக்கலாம்-புகழ் பெறலாம்.

**திருவிழா-இறைவனைக் கண்டால்**

ஆலயத்திற்குள் செல்வது போல கனவு கண்டால், நண்பர்களின் வட்டாரத்தில் அன்பும் ஆதரவும் ஏற்படும்.

(தொடரும்)

# நிறைகுடம்

(உருவகம்)

அன்பானவர்களே இனிய ஞாயிறு வணக்கம். நான்தான் ஜிம்மிக்குட்டி. பள்ளிக்குப் போற பிள்ளைகளுக்கு ஒரு செய்தியாம். குடை அல்லது தொப்பி போட்டுக் கொண்டு போகட்டாம், நிறையத் தண்ணீர் குடிக்கட்டாம், கடும் வெய்யில்லை நிற்க வேண்டாமாம், கவனமாம்.

ம்... இப்ப வெயில் தணிந்து கிடக்கு. லதாக்குட்டியின்ர அப்பா வாறார். களைச்சுப் போனார்போல. நேரே குளிச்சு உடுப்பு மாத்திப் போட்டு அவரின்ர படிக்கிற மேசையில எதையோ தேடுறார். ஏதோ லீவிலை நிண்டு படிக்கிற படிப்பாம். ஆள் நல்ல கெட்டிக்காரர். பெரியவர் வாறார். சாய்மனைக் கதிரையிலை இருக்கிறார். தொடங்கிட்டினம்... ம்...இனி...தொடர் கதைதான்.

"தம்பி! என்னமாதிரி நீ ஒழுங்கு படுத்தின பெடியன் எப்பிடி ஒழுங்காப் போறானாமோ...பிள்ளையளோடை கவனமாப் படிப்பிக்கச் சொன்னியோ'' உண்மையான கரிசனையாக் கேக்கிறார்.

"ஓமப்பா அவன் நல்ல மரியாதையானவன்- பட்டதாரியும் தானே. நான் ஐயாயிரம் குடுக்கிறனப்பா. வேண்டாமெண்டவன். நான் அதிபருக்கு முன்னாலைதான் குடுத்தனான். அதிபரும் திருப்தியாச் சொன்னவர். இடையிலை போய் பார்த்தாப் போதுமப்பா''

பணிவான பதில் தான். நல்ல பழக்கம்.

"படிக்கிறது உன்னுடைய வாண்மை விருத்திக்கு- ஆனால் பிள்ளையளின் படிப்பு தடங்கல் படக்கூடாது. இது ஒண்டும் சட்டமோ கட்டாயமோ இல்லை மகன். இது தார்மீகம். பதில் ஒழுங்கு செய்யாத ஆசிரியர்மாருக்கு அதிபரவை கொஞ்சம் கண்டிப்பா இருந்தால் நல்லது. ம்...''

பிள்ளையின்ர படிப்பையும் கவனிக்கத்தானே வேணும். மகன் ஏதோ சொல்லுறார்.

"அப்பா... என்னோடை நல்ல மாதிரி எண்டு சொன்னன் ஒரு மாஸ்ரர். அவரின்ர கடைசிப் பிள்ளையும் லதாக்குட்டியும் ஒண்டாத்தான் படிக்கினம்...அவர்... இப்ப கொஞ்ச நாளா தனிமையா ஒதுங்கி இருக்கிறார்... பாவம் ஏதோ மனசு கஷ்டம்போலை-உங்களோடை கதைக்கக் கேட்டவர்...இப்ப உங்களுக்கு நேரம் இருக்கோப்பா...''

பாத்தியளே கதைக்கிற வடிவை ... வளர்த்த வளர்ப்பு அப்பிடி.

பெரியவர் அந்தரப்படுகிறார்.

"இதென்னய்யா...இவ்வளவு நிதானமாகக் கேட்கிறாய்...

ஒரு போனைப் போட்டு வரச் சொல்லய்யா... பாவம்...

நல்லபிள்ளை...என்ன துன்பமோ...'' பெருமூச்சு... ம்.... கேட்டியளே...மற்றவைக்கு ஒரு துன்பமெண்டால் துடிக்கிற துடிப்பு... பெரியவை எண்டைக்கும் பெரியவை தான். ம்...கேற் திறந்து சத்தம் கேக்குது. நான் குலைக்கேல்லை. எட்டிப்பாக்கிறன்...அவர்தான் வாறார் போல...ஒரு பதற்றம், ஒரு பரபரப்பு, வந்திட்டார். பெரியவர் கதிரையைக் காட்டுறார், வணக்கம் சொல்லிப் போட்டு இருக்கிறார்..

"தம்பி...எப்படி இருக்கிறியள்... கண்டும் கனநாள்....'' அன்பான விசாரிப்பு."சேர்...நான் உங்களிட்டைத் தானே படிச்சனான். வலு நிதானமா உறுதியாத்தான் சேர் நான் என்ரை பொறுப்பை ஏற்று நல்ல றிசல்ட்டும் எடுத்துக் கொண்டுதான் வந்திருக் கிறன்....இப்ப..''-பாவம்... சொல் லக் கஷ்டப்படுறார் போல... பெரியவர் அக்கறையாக் கேக்கிறார்...

"ம்...சொல்லுங்கோ மகன்... இப்ப...'' -ஊக்கம் கொடுக்கிறார்.

"எனக்கு சேர்...சலிப்பு மாதிரி, காளைச்ச மாதிரி, ஒரு இயலாமை மாதிரி... என்னத்தைச் செய்து என்ன பிரயோசனம் எண்டு ஒரே விரகத்தியா இருக்கு சேர்...''-பாவம் வேர்க்குது..."விளங்குது தம்பி...நீ எவ்வ ளவோ செய்யிறாய் ஐயா.... ஆனா.. அதுக்கு...'' பெரியவர் மௌனமாய் பார்க்கிறார்.

"ஓம் சேர்...அதுக்கு ஒரு விலை இல்லாத மாதிரி எல்லாருக்கும் முன்னாலை அதுவும் நிக்க விட்டிட்டு என்னை என்ரை கற்பித்தலைக் கோவலப்படுத்திறமாதிரி உரத்த சத்தம் போட்டுக் குற்றம் சாட்டினால்... என்னாலை தாங்கவே முடியேல்லை சேர்... ஐயோ... நான் நல்லாத்தான் படிப்பிச்சனான்''

பெரியவர் தண்ணிக் கிளாசை முன்னுக்குத் தள்ளி வைக்கிறார். அவரும் மடக்குமடக்கெண்டு குடிக்கிறார்... இதென்ன இப்பிடி வேகமாக் குடிக்கிறார். பெரியவர். பெருமூச்சொன்றைவிட்டுக்கொண்டுதலையை மேலும் கீழும் ஆட்டுறார்...

"தம்பி... கல்வித் தகைமை சிறப்புப்பட்டச் சான்றிதழ் தொழில் தகைமை எல்லாம் முதல் தரமான தகுதிகள்... முன்னாயத்தம் சிறந்த கற்பித்தல் முறை, வினாத்தாள் பயிற்சி, மீட்டல்கள், சின்னச்சின்னப் பரீட்சை, தவணைப் பரீட்சைகள், மதிப்பீடு எல்லாமே முறையா நீ செய்திருக்கிறாய். அதோடை பிள்ளையளோடை நல்ல உறவும் அக்கறையும் கொண்டு ஒரு குறையும் இல்லாமல் படிப்பிச்சிருக்கிறாய். பொற்றாரோடும் மதிப்பும் மரியாதையும் புரிந்துணர்வும் நிறைய இருக்கு. இவ்வளவும் உண்மை தானே ஐயா...?''மகிழ்ச்சியோடை அவர் தலையாட்டுறார்.

மூச்சு வாங்குது... பாவம் சரியாப் பாதிக்கப்பட்டிட்டார் போல... விரும்பிப் படிப்பிக்கிற மனிசரை ஏன் இப்பிடி துன்புறுத்தினமோ... பெரியவர் நிமிர்ந்து இருக்கிறார்.

"சரி...மற்றவர்களுக்குத் தெரிதலைவிட உங்கடை மனச்சாட்சிக்கு நீங்கள் நிறைவான ஆசானாகத் தான் செயற்பட்டிருக்கிறியள். அப்பிடியிருக்க எவராவது எதையாவது சொன்னால் அதை எதற்கு உங்களுக்குள் போட்டுக் கொண்டு துன்பப்பட வேணும்.

பிள்ளைகளுக்கு முன்னால் குறை கூறினால்... அது கூறுபவரின் அறியாமை. பிள்ளைகளோ சாதாரண அறிவு மட்டத்தில் உள்ளவர்கள். இதற்கெல்லாம் செவி சாய்க்க ஆரம்பித்தால் உங்கள் செயற்றிறன் வீழ்ச்சியடைந்து விடும். குறை கூறியோ குற்றம் கண்டு பிடித்தோ தம்மை நியாயப் படுத்துபவரும் ஒரு சராசரி மனிதன் தானே. அவரது கூற்று வேதவாக்காகி விடுமா? அவர்களுக்கு என்ன என்னமேலிட அழுத்தங்களோ யாருக்குத் தெரியும். அதைத் தூர வீசிவிடு. பரந்து விரிந்த ஆசிரிய வாண்மை அற்புதமானது. அதனை அர்த்தமற்ற விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அசிங்கப்படுத்தக் கூடாது. நிறைவான ஆசான்கள் நிறைகுடம் போன்றவர்கள். புகழுக்கும் பழிக்கும் புயலுக்கும் இடிக்கும் விலைபோய் விடக் கூடாது. உன் பாதை சரி. பயணமும் சரி இலக்கை அடைவாய். சந்தோசமாய் போட்டுவா!''

கையெடுத்துக் கும்பிடும் ஆசானும் மாணவனும் பண்பிற்கு இலக்கணமாகத் தெரிகிறார்கள். என்னையறியாமலே எனது முன்னிரு கால்களும் ஒன்று சேர்ந்து கும்பிடுகின்றன... ம்... தூக்கம் வருது... பிறகு சந்திப்பம்..

**பாரதி கணேஷ்**
**சுன்னாகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவிதைக் கலசம்

## யார் நாம்?

யார் நாம்
கேவலம் ஓர் அற்ப மனிதர்கள்
நாம் ஏதோ நிலையானவர் போல்
இறுமாப்புக் கொள்கிறோம்
கொலை, களவு, கொள்ளை
காமம், கஞ்சம், சூது
என்னும் எத்தனையோ
எம்மவர் மனதுள்ளே வாழ்கிறது
அதிலும் பிற உயிர்களைக் கொன்று
அழிக்கின்றோம்
மானிடப் பிறவி ஏனென்றால்
முற்பிறவிப் பாவத்தை நீக்கிடவே
ஆறறிவு கிடைத்துவிட்டால்
அகங்காரம் கொள்வீர்களோ?
ஆண்டவன் ஒருவன் இருக்கிறான்
அனைத்தையும் அவனறிவான்
அழிசெயலில் ஈடுபட்டால்
அழிந்து போவீர்கள்
கேவலம் கெட்ட மானிடப் பதர்களே!
ஜாக்கிரதை! ஜாக்கிரதை!

**ஜெ.தவேதன்**
**ய்.ா.இ.க**

## சரபம்

உறவின்
சிகரம் தொட்ட
திசையறியா
தமிழர்களே
உங்கள்
தவிப்பும்
தேடலும்
முடியுமுன்னே
நீங்கள்
காணாமல்
போய் விடவும்
கூடும்
ஏனென்றால்
நாம் வாழும்
தேசம் அப்படி

**தேன்நிலா**
**நல்லூர்**

## காத்திருப்பின் நீளம்

காலங்கள் மறையுது
காயங்கள் ஆறவில்லை
கால தாமதம் இன்னும்
காயப்படுத்துது...
காற்றும் பாடும் தாலாட்டும்
தவன்று விளையாடிய மண்ணும்
திரண்டு அணைக்கும் விண்ணும்
விளைந்து நிமிரும் வயலும்
உணவு தந்த எம் உழைப்பும்
அங்கே உயிர் இன்றிக் கிடக்குது....
ஏர் பிடித்த நிலங்கள் எல்லாம்
எறக்கம் காட்டின் சிறையிலும்
உறுதி உள்ள நிலங்கள் எல்லாம்
என் இறுதி கிரியை தன்னும்
உள் நுழைய முடியா வண்ணம்
நல் ஆட்சி புரியுது....
காத்திருப்பின் நீளம்
கனதி வரை சென்றால்
ஏற்று நிற்குமோ நீதி
முறைப்படி வாழ காட்டி நிற்குமோ
என் ஜாதி
முகாம்களின் வாழ்வை முடிவில்
கொல்லுமே அதன் நீதி
காத்திருப்பின் நீடிப்பு
ஏமாற்றம் என்றால் – என்றும்
ஏற்று நிற்குமே அது மாற்றம் தன்னை ...

**ஸ்ரீயோதா**
**மண்டைதீவு**

## இராமனும் தமிழரும்

காட்டுக்குச் சென்ற இராமன்
தாகம் எடுக்கவே
குளக்கரை அடைந்தான்

தன் அம்பைக் களைந்து
குளத்து மணலில் சொருகிவிட்டு
தாகம் தீர நீர் குடித்தான்

என்ன கொடுமை
அபாயம் என்போர்க்கு
அபயமளிக்கும் இராமனின்
அம்பில் சிக்கித் தவித்தது
தவளையொன்று

மண்ணில் குற்றிய அம்பை
இழுத்தெடுத்தான் இராமன்
அந்தோ தவளையொன்று
அம்பில் சிக்கித் தவிப்பது கண்டு
இதயம் நொந்தான்

தவளையிடம் இறைஞ்சினான்
தவளையே அம்பைக் குத்தும் போது
நீ சொல்லியிருக்கலாமே என

தவளை சொன்னது
எனக்கு அபாயமெனின்
அபயத்துக்கழைக்கும்
இராமனின் அம்பால் அடிபடும் போது
நான் என் செய்வேன் என

இத் தவளைநிலைதான்–இன்று
தமிழன் நிலையும்
தமிழர் யாரை நம்பினாரோ
தலைவர் என்று
அவரே இன்று எம் முதுகில்
அம்பு குத்திவிட்டார்
அபயத்திற்கு யாரை அழைப்பான்
கதிகெட்ட தமிழன்

**மாவை. நா.கஜேந்திரன்**

# மௌனத்தின் தேடல்– 350



## முன்னேற்றம்

கிறிஸ்துவிற்கு முன்
பின்னென்று
காலகட்டத்தை
வசதி கருதிப் பிரித்து
கணிப்பது போல்
அவதியைத் தரும்
அகதி வாழ்வும்
முட்கம்பிக்குப் பின்
முன்னென்று ஆனது
பொன் விளைந்த
சொந்தக்காணியை
தூர நின்று பார்ப்பதும்
துயரத்தை போக்குமென்று
உலகும் நினைத்து விட்டது

**க.நாகராசா**
**நுணாவில்**

## ஏக்கம்

உன் பார்வையின்
பரிதாபம் கூடவா
இந்தப்
பாவிகள்
மனதை
மாற்றிவிடாது

**தேன்நிலா**
**நல்லூர்**

## முல்லைப்பூவே

முள்வேலிக்குள் முளித்து நிற்கும்
முல்லையே– உனை
முற்றுகை இடவும்
முகர்ந்து ருசிக்கவும்
முட்டாள்கள் அதிகம்
முன்னேறிச் சென்றுவிடு

**உடுவிலூர் கலா**

## ஏக்கத்துடன்

ஏக்கமென்பது
உனக்கு மட்டுமல்ல
தமிழினத்திற்கே
உரித்தானதொன்று...
காணாமற் போன
உறவுகளைத் தேடி
உறவுகளின் ஏக்கம்
சொந்த நிலமின்றி தவிக்கும்
உரியவர்களின் ஏக்கம்
பட்டம்பெற்ற
பல்கலை மாணவர்கள்
வேலையின்றி ஏக்கம்
ஊக்கம் கொடுக்க
யாருமின்றி தொடரும்
வீதியோரப்
போராட்டங்கள்
தேடல் உள்ளவரை
உறவுகளின்
ஏக்கமும்
குறைவதில்லை...?

**சா.தர்சிகா**
**கொக்குவில் மேற்கு**

## கனவுகள் நனவாகும்

முட்கம்பிகள்
உன் கனவுகளுக்கு
முட்களானதா என்று
ஏங்குகிறாயா?
நம்பிக்கையுடன்
மன உறுதி கொண்டு
எழுந்துநில்
உன் கனவுகளும்
நிஜமாகும்
தடைகளையும் வெல்லுவாய்

**சி.பிரியங்கா**
**மட்டுவில் தெற்கு**

## ஏக்கம்

நாட்டைக் காக்கும்
இராணுவம்– நம்
வீடுகளில் உறங்க
தெருத்தெருவில்
நாய்களாய் நாம்
தாய் மடியில்
தலை வைத்து
சொந்த மண்ணில்
தூங்கும் ஏக்கம்
இந்த முள்வேலி போல்
முடிவுற்று போகிறது


**கில்பேட், தம்பசிட்டி**

## எழுந்து வா

முட்கம்பி வேலிக்குள்
முடக்கப்பட்டதே
இளந்தளிர் ஒன்று
வெளியே வரமுடியாமல்
ஏங்கித் தவிக்குது
தனிமையில் நின்று
என்ன பாவம் செய்ததோ
இவ்விளம் பிஞ்சு
அடைத்து வைத்து
கொடுமைப்படுத்துவது
வழமைதானே இங்கு
அடிமை விலங்கை
உடைக்க வாரீர்
அனைவரும் எழுந்து

**யோ.காண்டீபன்,**
**மானிப்பாய்**

# மௌனத்தின் தேடல் –351




**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும் கவிதைகள் மற்றும் வியாசர் பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு 26.04.2017ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகரிக மோகம் நமக்கு வேண்டாமே!

-உடுவிலூர் கலா-




ஓடிக்கொண்டிருக்கும் அதிவேக உலகில் பெண்கள் தம்மை அழகு படுத்த பெரும் முனைப்பாக உள்ளனர். ஆடைக்கலாசாரம், ஆபரணக் கலாசாரம், ஒப்பனைக் கலாசாரம் என பன்முகக் கலாசாரங்களை உள்வாங்கி பொன் போன்ற நேரத்தை வீணடிக்கின்றனர். ஆடம்பர வாழ்வுக்காகத் தம்மை அர்ப்பணிக்கின்றனர். உடல் அழகுக்கு அப்பாற்பட்ட உடைகளுக்கும் அழகுசாதனப் பொருட்களுக்கும் பணத்தை விரயம் செய்கின்றனர். அழகு என்றால் என்ன என்பதை சிந்தித்துப் பார்க்கவே முடியாத அளவுக்கு நாகரிகத்தைத் தேடி ஓடிக் கொண்டிருக்கின்றனர். பெண் என்றாலே அழகுதான். இறைவன் ஒவ்வொரு பெண்ணையும் அழகாகவே படைத்திருக்கிறான். அறிவியலின் அதீத வளர்ச்சியானது பலவித ஆடம்பரங்களை தோற்றுவித்ததன் காரணமாக பெண்கள் தமது அழகை மேம்படுத்துவதாக எண்ணி அசிங்கப்படுத்துகின்றனர்.

பெண்களை அழகுபடுத்துவதில் முதலிடம் வகிப்பது ஆடையானது. இன்ற்றைய உலகானது ஒவ்வொரு நிகழ்வையும் கலைக் கண்ணோட்டத்தோடு தான் பார்க்கிறது. மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகளுள் முக்கியமானது ஆடை. மழை, வெயில், காற்று, பனி என்று இயற்கையின் வெட்ப தட்ப நிலைகளிலிருந்து உடலைப் பாதுகாப்பதோடு அழகை வெளிப்படுத்தவும் நாகரிகத்தின் வெளிப்பாடாகவும் ஆடை அமைகிறது. அழகுடையோரை மட்டுமல்ல அழகில்லாதவர்களையும் ஆடை அழகு செய்கின்றது. ஒரு பெண்ணின் இயல்புகளையும் மனநிலையையும் பார்க்கின்றனர்.

பன்முகக் கலாசாரத்தின் பிடியில் சிக்கியுள்ள இன்றைய பெண்களின் ஆடைத் தெரிவானது பல சந்தர்ப்பங்களில் அருவருப்பானதாகவே உள்ளது. பல கிழிவுகளுடனும் கோணலாகவும் உடலை ஒட்டினாற் போலவும் பலவித பாவனைக்கும் பார்வைக்கும் அசௌகரியமான ஆடைகளையே பெண்கள் விரும்பி அணிகின்றனர். அவையே நாகரிகம் எனவும் கௌரவம் எனவும் நினைக்கின்றனர்

பெண்கள் தமது ஆடையில் அதிக கவனம் செலுத்த வேண்டும். ஆடையானது அணியும் போது திருப்தியானதாகவும் முழுமை வடிவத்தையும் தருவதாக அமைய வேண்டும்.

அடுத்தவர்களின் பரிகசிப்புக்கும் ஏளனத்துக்கும் இடமளியாமலும் ஆபாசத்தைத் தூண்டாமலும் பண்பாட்டினைக் காப்பதாகவும் பெண்களின் ஆடைகள் அமைய வேண்டும். இடத்திற்குத் தகுந்தாற்போல் உடையணியப் பழகவேண்டும். வைத்தியசாலை, பாடசாலை, சுப நிகழ்வுகள், துன்ப நிகழ்வுகள் என இடங்களுக்கு ஏற்றாற்போலும் எமது நாட்டு வெப்ப காலநிலைக்கேற்றவாறும் உடை அணிதல் அவசியம். அதுமட்டுமல்ல வயதுக்கு ஏற்ப ஆடைகளை அணிவது கட்டாயமாகும்.

எமது நாடு வெப்ப வலய நாடாகும். பருத்தி ஆடைகளே வெப்பத்தைக் கடத்துவதற்கும் உகந்தது. பெண்களுக்குச் சில சந்தர்ப்பங்களில் ஆடைகள் அணிவது பெரும் சிரமமாக இருக்கும். தாய்மை அடைந்த பெண்கள் இறுக்கமான செயற்கை நார்களினால் ஆன ஆடைகளை அணியாது பருத்தியிலான தளர்வான ஆடைகளை அணிவது உடலுக்கு சௌகரியமாகும் மனதுக்கு இதமாகவும் இருக்கும். சில வயதான பெண்கள் பருவக் குமரிகள் போல் ஆடை அணிகின்றனர். இவை எல்லாம் எமது பண்பாட்டுக்கு ஒத்துவராது.

அத்தோடு ஒரு சில பெண்களுக்கு திருமணமாகி குழந்தைப் பேறின் காரணமாக உடல் பெருத்து உருண்டு திரண்டு இருக்கும். இவர்கள் அணியும் உடைகளை மட்டுமல்ல உண்ணும் உணவையும் கவனத்திற்கொள்ள வேண்டும். பொருத்தமான ஆடைகள் வயதைத் தக்க வைக்கும்.

நாகரிக வாழ்க்கைக்கு மிகவும் முக்கியமானது உடை முழுமை பேணி அணிய வேண்டியது கட்டாயமாகும். மனித உயிரினம் ஏனைய உயிரினங்களை விட சிறப்பானது. அச்சிறப்பை உடை அணியும் முறைமையே புலப்படுத்துகிறது. இன்றைய நாகரிக உலகில், உடைகள் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. ஒரு பெண்ணை மதிப்பிட உடை முக்கியமானது.

கலைகள் பல. அவற்றுள் உடை உடுத்துவதும் ஒரு வகைக் கலையாகும். குறை மனிதனை நிறை மனிதனாக்குவது உடுத்தும் உடையே. எந்த ஒரு உடையும் உடுத்தும் முறையில் அழகுற அமைந்தால்தான் தோற்றம் பொலிவு பெறும். பண்பாடு என்பது பெண்களின் மனதில் மேன்மை நிலையை ஏற்படுத்தும்.

நாகரிகம் வெளித்தோற்றத்தை அழகு செய்யும். நாகரிகச் சிறப்பை உணர்த்தி நிற்பதில் உடையே முக்கிய பங்கு வகிக்கிறது. நாகரிகம் வளர வளர உடைகளின் வடிவங்களும் வித்தியாசமாக வளர்ச்சியடையும். ஆனால் பெண்கள் நாகரிகத்தை உள்வாங்கும்போது பெண்மைக்கு மெருகேற்றும் ஆடைகளையும் பழக்கவழக்கங்களையும் தெரிவு செய்ய வேண்டியது கட்டாயமானதாகும். ஆடை இல்லாதவன் அரை மனிதன் என்பார்கள். அறிவியல் வளர்ச்சியில் நாகரிகத்தை காரணம் காட்டி அரைகுறை ஆடை அணிவதை தவிர்க்கவேண்டும்.

இன்று பரவலாக இடம்பெறுகின்ற பாலியல் வன்முறைகளுக்கு பெண்கள் அணியும் ஆடைகளே காரணம் என சுட்டிக்காட்டப்படுகிறது. பெண்களே சிந்தியுங்கள். விரும்பிய உடை உடுத்த சுதந்திரம் நமக்குண்டு. ஆனால் நேர்த்தியான உடையை விரும்பி அணிய வேண்டும்.

எமது நாகரிகம் அரைகுறைகளைக் கொண்டிருக்கவில்லை. வேற்று நாகரிக சுவாசமும் நமக்குத் தேவையில்லை. ஆக, பெண்களே எம் வாழ்வு சிறக்க, ஒழுக்கம் பேண பண்பாட்டின் பாரம்பரியம் தக்கவைக்க பெண்மைக்கு முழுமைத்துவம் தரக்கூடிய ஆடைகளையே அணியுங்கள்.

பொருளாதாரத் தேவைகளோடு தினசரி போராடிக் கொண்டிருக்கும் நாம் பெருந்தொகைப் பணத்தை வாரியிறைத்து அழகற்ற ஒழுக்கக்கேடான ஆடைகளை கொள்வனவு செய்வதை விடுத்து அழகான, ஒழுக்கமான ஆடைகளை தெரிவு செய்வோம். பெண்மையைப் புனிதப்படுத்துவோம்.

# ஔவை ஒப்பித்த நான்கு கோடி

அன்றும் இன்றும் என்றும் போற்றப்படும் தமிழ்ப் புலவர்களில் ஔவையார் மிகச் சிறப்புப் பெற்றவர். சிறுவர் முதல் பெரியோர் வரை எல்லோர் நாவிலும் அவரின் நன்னெறி வாக்கியங்கள், பாடல்கள் ஒலித்த வண்ணம் இருக்கின்றன.

ஒருமுறை அரசனின் சபையிலே புலவர்கள் வீற்றிருக்கிறார்கள். அரசன் அவையோரை, புலவர்களை நோக்கி இன்று நான் உங்களுக்கு ஒரு சவால் விடுக்கப் போகிறேன். அச்சவாலை ஏற்று யார் வெற்றி கொள்கிறார்களோ அவர்களுக்கு விலையுயர்ந்த பரிசு அளிக்கப்படும் என்று கூறினான். அவையோரும் புலவர்களும் அரசே சவால் யாது எனக்கூறுங்கள் என்று ஒரே குரலில் ஆர்வமுடன் வினவினர். அரசன் கூறுகிறார் யார் நான்கு நாட்களில் நான்குகோடி பாடல்கள் ஆக்கிச் சபையில் முன்வைக்கிறார்களோ அவர்களுக்கு சிறந்த பரிசு அளிக்கப்படும் என்றான். எல்லோர் முகத்திலும் அதிர்ச்சி... பரபரப்பு...

நான்கு நாட்கள் கெடுவந்து விட்டது. அனைவரும் அரச சபையில் கூடினர். அறிஞர்கள், புலவர்கள், புரவலர்கள் நிறைந்திருக்கின்றனர். அரசர் சபைக்கு வருகிறார். எல்லோரும் எழுந்து பணிந்து அமர்கின்றனர். அரசன் அவையை நோக்கி விளிக்கிறான். புலவர்களே சவாலை நிறைவு செய்வோமா? ஒவ்வொரு புலவர்களின் முகபாவமும் ஒவ்வொரு விதமான நிலையில் ஔவைப்பாட்டியார் மட்டும் அமைதியாக, அடக்கமான புன்முறுவலுடன் வீற்றிருக்கிறார்.

அரசே பாடல்களை ஆக்கிவிட்டோம். ஆனால் ஒரே நாளில் ஒப்புவிப்பது கடினமே எனக்கூறினர் சில புலவர்கள். வேறு சிலர் இன்னும் ஒருநாள் அவகாசம் வேண்டும் என்றனர். அரசன் ஔவையாரைப் பார்த்து அம்மையே உங்கள் பாடல் எந்தளவில் என்றார். அரசே பாடல்களை நிறைவு செய்து விட்டேன். இதோ சபையில் செப்புகிறேன் என்று பாடத் தொடங்கினார்.

மதியாதார் முற்றம் மதித்தொரு
காற்சென்று
மிதியாமை கோடி பெறும் (1 கோடி)

உண்ணீா உண்ணீரென்று உபசரியார்
தம் மனையில்
உண்ணாமை கோடி பெறும் (2 கோடி)

கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார் தம்
மனையிற்
கூடுவது கோடி பெறும் (3 கோடி)

கோடானு கோடி கொடுப்பினுந்
தன்னுடைய நாக்
கோடா(ணா)மை கோடி பெறும் (4 கோடி)

அரசன் ஓடிச்சென்று ஔவையாரை ஆறத் தழுவினான். அதியுயர் பரிசளித்தான். என்னே புலமை, என்னே தமிழின் பெருமை.

**ச.சகலகலாவல்லி**
**பொன்னாலை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத தடைச்சட்டம் எச்சரிக்கும் ஐ.நா. அதிகாரிகள்

இலங்கையின் எதிர்ப்புச் தடைச் சட்டத்தின் (Counter Terrorism Act) சில கோட்பாடு மற்றும் வரையறை தொடர்பில் சீர் திருத்தங்களை மேற்கொள்வதற்காக முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் குறித்து, சில அமைப்புக்கள் தமது அதிருப்திகளை முன்வைத்துள்ளன.

திட்டமிட்ட படுகொலைகள் மற்றும் பலவந்தப் படுகொலைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் சிறப்பு அறிக்கையிடலாளர் கிறிஸ்ரோப் கெய்ன்சும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பாக தற்போது முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் மீதான தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பாக அண்மையில் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் தொடர்பாக மனித உரிமைகளுக்கான நிறுவகம் மற்றும் அனைத்துலக மற்றும் ஆபிரிக்காவில் நிலவும் தொடர்புபட்ட சட்டத்திற்கான பிரிட்டோரியா நிறுவகம் (ICLA) ஆகியன இணைந்து கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளன.

இந்தக் கூட்டறிக்கையை ICLA நிறுவகத்தின் இயக்குநரும், திட்டமிட்ட படுகொலைகள் மற்றும் பலவந்தப் படுகொலைகள்



தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் சிறப்பு அறிக்கையாளருமான பேராசிரியர் கிறிஸ்ரோப் கெய்ன்ஸ் மற்றும் ICLA நிறுவகத்தின் ஆலோசகரான ரொபி பிஷர் ஆகிய இருவரும் இணைந்து தயாரித்துள்ளனர்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பாக சீர்திருத்தங்ளை உள்ளடக்கி 2016இல் முன்வைக்கப்பட்ட சட்ட வரைவானது வரவேற்கத்தக்க விடயமாகும்.

ஆனால் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள சீர்திருத்தமானது இலங்கையால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள அனைத்துலக மனித உரிமைகள் நியமங்களுக்கு முரணாக அமைந்துள்ளன.

நாடாளுமன்றில் சட்டவரைவை முன்வைப்பதற்கு முன்னர் அது தொடர்பாக வெளிப்படையாக கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் பயங்கரவாதத்தைத் தடை செய்வதற்கான சட்ட வரைவானது மனித உரிமைகள் சட்டத்திற்கு ஏற்ப மாற்றப்பட வேண்டும்' என ICLA நிறுவகத்தால் வெளியிடப்பட்ட கூட்டு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலமானது ஏப்ரல் 06, 2017 அன்று இணையத்தில் வெளியிடப்பட்டது. பல்வேறு திருத்தங்களின் பின்னர் இச்சட்ட மூலத்தின் பிரதியானது ஒக்டோபர் 2016 அன்று இலங்கையின் உள்நாட்டு ஊடகங்களில் வெளியிடப்பட்டது. இது பின்னர் அரசாங்கத்தால் உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.


2016இல் வெளியிடப்பட்ட இச் சட்ட மூலமானது அனைத்துலக மனித உரிமை விதிமுறைகளைக் கருத்திற் கொள்ளத் தவறியுள்ளதாக இலங்கை வாழ் சட்டவாளர்கள் மற்றும் பலர் பரவலாக விமர்சனங்களை முன்வைத்தனர்.

இச் சட்ட மூலம் தொடர்பாக அனைத்துலக வல்லுநர்கள் மற்றும் இலங்கையைச் சேர்ந்த வல்லுநர்கள் பல்வேறு சாதகமான மாற்றங்களை முன்வைத்ததன் பின்னர் இதில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

குறிப்பாக பயங்கரவாதம் தொடர்பான வரையறை, இதனுடன் தொடர்புபட்ட விடயங்கள் மற்றும் நிபந்தனைகள், தடுத்து வைக்கப்படும் இடங்கள், உறுதிப்படுத்தப்பட்ட சாட்சியங்களைப் பயன்படுத்துதல் போன்றன தொடர்பில் சில முன்னேற்றங்கள் எட்டப்பட்டன.

எனினும், இலங்கை அரசாங்கமானது பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள சீர்திருத்தங்களை சட்டத்தில் உட்சேர்க்க வேண்டுமாயின் அனைத்துலக மனித உரிமைகள் நியமங்களுக்கு ஏற்ப இதில் சில மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என கெய்ன்ஸ் மற்றும் பிஷர் சுட்டிக்காட்டியுள்ளனர். பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் மாற்றம் கொண்டு வரப்படுவதற்கு முன்னர் இது தொடர்பாக பொதுமக்களுடன் ஆலோசனை மேற்கொள்ளப்படவில்லை என பேராசிரியர்களால் வெளியிடப்பட்ட கூட்டு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றமானது தனிப்பட்ட ரீதியாக தயாரிக்கப்பட்டதாகவும் இதில் எவ்வித வெளிப்படைத் தன்மையும் பின்பற்றப்படவில்லை எனவும் இது தொடர்பில் சிவில் சமூகத்தினர் மற்றும் உள்நாட்டு பங்குதாரர்களுடனும் அனைத்துலகபங்குதாரர்களுடனும் இலங்கை எவ்வித ஆலோசனைகளையும் மேற்கொள்ளவில்லை எனவும் ICLA வெளியிட்டுள்ள கூட்டு ஆவணத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



'இலங்கை நாடாளுமன்றில் முன்வைக்கப்படுவதற்கு முன்னர், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பாக வெளிப்படையாகக் கலந்துரையாடப்பட்டிருக்க வேண்டும். அத்துடன் இச்சட்டத்தில் மாற்றங்கள் கொண்டு வருவது தொடர்பாக ஏற்கனவே கருத்துக்களை வெளியிட்டிருந்த உள்நாட்டு மற்றும் அனைத்துலக ஆலோசகர்கள் மேலும் தமது கருத்துக்களை வழங்குவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டிருக்க வேண்டும்' என கெய்ன்ஸ் மற்றும் பிஷர் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இவர்கள் பயங்கரவாதம் தொடர்பாக இச்சட்ட மூலத்தில் முன்வைக்கப்பட்டுள்ள வரையறை தொடர்பிலும் அதிருப்தி அடைந்துள்ளனர். 2016இல் மேற்கொள்ளப்பட்ட சட்டத் திருத்தத்தில் 'பயங்கரவாதத்துடன் தொடர்புபட்ட குற்றங்கள்' தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள வரையறையானது நியாயமற்றதாகவும் இது இச்சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைத் துஷ்பிரயோகப்படுத்துவதற்கான ஆபத்தையும் கொண்டுள்ளதாகவும் தற்போது வெளியிடப்பட்டுள்ள கூட்டு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமானது அசாதாரண அதிகாரங்களை நிறைவேற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அதாவது சாதாரண குற்றவியல் சட்டத்தின் கீழ் காணப்படாத அதிகாரங்களை இச்சட்டம் கொண்டுள்ளது.

இவ்வாறான அசாதாரண அதிகாரங்கள் அடக்குமுறையைப் பிரயோகிப்பதற்கு துணைபுரிகின்றன என இக்கூட்டு ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமானது இலங்கை அரசாங்கத்திற்கு பல்வேறு அதிகாரங்களை வழங்குகிறது. குறிப்பாக கைது செய்வதற்கான அதிகாரம், சந்தேகத்தின் பேரில் நீண்ட காலம் தடுத்து வைப்பதற்கான அதிகாரம், சொத்துக்களை சுவீகரிப்பதற்கான அதிகாரம், ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கான அதிகாரம், போக்குவரத்துக் தடைகளை விதிப்பதற்கான அதிகாரம், நிறுவனங்களைத் தடை செய்வதற்கான அதிகாரம் எனப் பல்வேறு அசாதாரண அதிகாரங்களை பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமானது இலங்கை அரசாங்கத்திற்கு வழங்குகிறது.

இவை அனைத்தும் அடிப்படை உரிமைகளை அடக்குவதற்குப் போதுமானதாகும். இதேபோன்று பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் இரண்டாவது பகுதியில் இச் சட்டத்தில் குறிப்பிடப்படும் குற்றம் இடம்பெற்றால் அக்குற்றவாளி இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவதற்கான உரிமை வழங்கப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் மூன்றாவது பகுதியில் மூன்று வகையான குற்றங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதாவது முதலாவது வகையாக பயங்கரவாதக் குற்றமும் இரண்டாவது வகையாக பயங்கரவாதத்துடன் தொடர்புபட்ட குற்றமும் மூன்றாவது வகையாக தொடர்புபட்ட குற்றங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என கெய்ன்ஸ் மற்றும் பிஷர் ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படும் ஒருவர் 'தடுப்புக் கட்டளையின்' கீழ் எவ்வித குற்றங்களும் உறுதிப்படுத்தப்படாவிட்டாலும் நான்கு மாதங்கள் வரை தடுத்து வைக்கப்பட முடியும். இது மனித உரிமை நெறிமுறைகளுக்கு முரணானதாகும். எவ்வித குற்றங்களும் நிரூபிக்கப்படாத விடத்தும் சந்தேக நபர்கள் இரண்டு ஆண்டுகள் வரை தடுத்து வைக்கப்படுவதற்கான அதிகாரத்தை இச் சட்டம் வழங்குகிறது.

இச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்படும் ஒருவர் 12 மாதங்களின் பின்னரே நீதி நடைமுறைக்குள் கொண்டு வரப்படுவார். குற்றம் நிரூபிக்கப்படாத சந்தேகநபர்கள் 2 வருடங்கள் வரை தடுத்து வைக்கப்படுவதால் இவர்கள் நீண்ட காலம் தடுப்பில் இருக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும் ஒருவர் குற்றவியல் சட்டத்தில் உள்ளது போன்று சட்டவாளர் ஒருவரின் உதவியை நாட முடியும் எனக் கூறப்படுகிறது. ஆனால் சட்டவாளருக்கு அனுமதி கிடைக்கும் போது மட்டுமே இவர் தடுத்து வைக்கப்படும் சந்தேகநபரைச் சந்திக்க முடியும் எனவும் விசாரணைகள் இடம்பெறும் போது இதற்கு அனுமதிக்கப்படாது எனவும் குற்றவியல் சட்டத்தில் கூறப்பட்டுள்ளதாக கெய்ன்ஸ் மற்றும் பிஷர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

'தற்போது சீர்திருத்தப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தில், சந்தேகநபர் தடுத்து வைக்கப்பட்டுள்ள பொலிஸ்நிலையத்திற்கு சட்டவாளர்கள் சென்று அங்கிருக்கும் பொறுப்பதிகாரியைச் சந்திக்க முடியும் எனக் கூறப்படுகிறது.

ஆனால் குறித்த சந்தேகநபர் மீது மேற்கொள்ளப்படும் விசாரணைகளுக்கு இடையூறு ஏற்படும் எனக் கருதப்படும் சந்தர்ப்பத்தில் சட்டவாளர், சந்தேக நபரைச் சந்திப்பதற்கான அனுமதி வழங்கப்பட மாட்டாது என்பதை நாம் அறிந்து கொண்டுள்ளோம்.

இது தடுத்து வைக்கப்படுவோர் தமது அடிப்படை உரிமைகளைப் பயன்படுத்தி சட்ட நடவடிக்கைகளை அணுகுவதற்குத் தடையாக உள்ளது' என கெய்ன்ஸ் மற்றும் பிஷர் ஆகியோர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும் ஒருவர் சுயாதீனமாக சட்ட ஆலோசனையை எவ்வித வரையறையுமின்றிப் பெற்றுக் கொள்வதற்கு இச்சட்டம் தொடர்பாக அண்மையில் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் உத்தரவாதமளிக்க வேண்டும் என சித்திரவதைகள் மீதான ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் கெய்ன்ஸ் மற்றும் பிஷர் ஆகியோர் கருத்துரைத்துள்ளனர்.

ஆங்கிலத்தில் - Easwaran Rutnam
வழிமூலம் - The Sunday Leader
மொழியாக்கம் - நித்தியபாரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சுறுத்தல் வேடிக்கை



## புரியாத புதிராக வடகொரிய ஜனாதிபதி

**கேள்வி: வட கொரியாவின் ஜனாதிபதி கிம் ஜாங் உன், என்னென்ன சாப்பிடுவார்?**

பதில்: கேக், கம்ப்யூட்டர், கட்டடம், கார் மற்றும் நாய்க்குட்டி.

**"கிம் ஜாங் உன்னுக்கு ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை இருக்கிறதா?"**

"ஆம், இருக்கிறது. ஒற்றை ஆட்சி கூடாது என்பதற்காக வலுவான ஓர் எதிர்க்கட்சியைத் தொடங்கி, அதன் தலைவராகத் தன்னையே அவர் நியமித்துக் கொண்டிருக்கிறார்."

ஓர் அமெரிக்கர், இன்னொருவரிடம் கேட்கிறார். 'நீங்கள் வடகொரிய உணவு வகைகளைச் சாப்பிட்டிருக்கிறீர்களா?' "இல்லை" என்று பதில் வந்ததும் அவர் தொடர்கிறார், 'கவலைப்படாதீர்கள். நீங்கள் மட்டுமல்ல, வட கொரியர்கள்கூட அவர்கள் நாட்டு உணவைச் சாப்பிட்டது இல்லை.'

வட கொரியா குறித்தும், அதன் ஜனாதிபதி கிம் ஜாங் உன் குறித்தும் ஆர்வம்கொண்டு தேடுபவர்களுக்கு இப்படிப்பட்ட தகவல்களே இணையத்தில் அதிகம் கிடைக்கின்றன. "கிம் போல் தலைமுடியைக் கத்தரித்துக் கொள்பவர்களுக்கு மரணதண்டனை உறுதி" என்கிறது ஒரு தளம். "கிம்மின் மனைவியை ஆறு மாதங்களாகக் காணவில்லை. பசியில் அவரையும் கிம் சாப்பிட்டுவிட்டார் என்பது உண்மையா?" எனக் கேள்வி எழுப்புகிறது சீன ஊடகம் ஒன்று. வட கொரியா மேற்கொண்டு வரும் அணு ஆயுதப் பரிசோதனைகள் குறித்து அச்சமூட்டும் தகவல்களைக் கொட்டிக் கொடுக்கிறது, ஒரு தளம். இன்னொரு தளமோ, 'கொரியாவில் தயாரிக்கப்படும் எதுவும் வேலை செய்யாது. அதனால், பயப்படாமல் போய்த் தூங்குங்கள்' என்று அமைதிப்படுத்துகிறது.

சிக்கல் என்னவென்றால், இதில் எது உண்மை, எது நகைச்சுவை என்பதைக் கண்டறிவது சுலபம் அல்ல. அணு ஆயுதப் பரிசோதனைகளை வட கொரியா ஐந்து முறை நிகழ்த்திவிட்டது உண்மை. ஆனால், இந்தப் பரிசோதனைகள் எந்த அளவுக்கு வெற்றி பெற்றிருக்கின்றன எனத் தெரியாது. கிம்மின் மனைவி மட்டுமல்ல, கிம்மும் அடிக்கடி காணாமல் போய்விடக்கூடிய நபர்தான். திடீரென்று பல மாதங்களாக அவரைப் பற்றி ஒரு தகவலோ, அவருடைய படமோகூட வெளியே வராது. ஓர் அரசாங்க அறிவிப்புகூட இருக்காது.

உலகம் குழம்பித் தவித்துக்கொண்டிருக்கும்போது வட கொரியா சில புகைப் படங்களை வெளியிடும். இராணுவத் தளபாடங்களுக்கு மத்தியில் கிம் ஒய்யாரமாகப் பெரிய கம்ப்யூட்டர் முன் நின்று சிரித்துக்கொண்டிருப்பார் அல்லது துருப்புகளைப் பார்வையிடுவார் அல்லது சமீபத்தில் வந்து சேர்ந்த ஒரு படத்தை எடுத்துக்கொள்ளுங்கள். கிம் சிரித்தபடி நின்றுகொண்டிருப்பார். அவர் முதுகின் மீது வயதான ஒரு இராணுவ வீரர் தொற்றிக் கொண்டிருப்பார். உடனே அமெரிக்க ஊடகம் சுறுசுறுப்பாக ஆராய ஆரம்பித்து விடும்.

கிம் ஜாங் உன் பற்றி மட்டும் ஏன் இத்தனை வதந்திகள், குழப்பங்கள், சிக்கல்கள்? அவரைப் பற்றியும் அவர் ஆண்டுவரும் நாட்டைப் பற்றியும் எதையும் உறுதியாக நம்மால் தெரிந்துகொள்ள முடியாமலிருப்பது ஏன்? கிம் எப்படிப்பட்டவர்? அவர் நல்லவரா, கெட்டவரா? அவருடைய கனவு என்ன? அவருடைய செயற்றிட்டம் என்ன? அவருடைய நண்பர்கள் யார், எதிரிகள் யார்? நீண்ட காலமாகவே கடும் பஞ்சத்தில் அந்த நாட்டு மக்கள் தவித்துக் கொண்டிருப்பதாகச் சொல்லப்படுவது உண்மையா? இந்தக் கேள்விகள் எதற்கும் உறுதியான விடைகள் இல்லை. ஏனென்றால், கிம் ஒரு நிரந்தரப் புதிர். வட கொரியா ஓர் இருண்ட நாடு. வெறுமனே ஓர் உவமைக்காகச் சொல்லப்பட்டதல்ல இது. செயற்கைக்கோள் உதவியுடன் இரவு நேரத்தில் கூட வட கொரியாவை ஒருவர் தெளிவாகக் கண்டுபிடித்துவிட முடியும். "வண்ண வண்ண நியான் விளக்குகளால் ஜப்பான், சீனா ஆகிய நாடுகள் ஜொலித்துக் கொண்டிருக்கும்போது வட கொரியாவின் நிலப்பரப்பு மட்டும் முழுக்க அட்டைக்கரியாக இருண்டு கிடப்பதை ஒருவர் காண முடியும். பிரகாசமாக எரியும் ஒரே ஒரு தெருவிளக்கைக்கூட நீங்கள் அங்கே பார்க்க முடியாது" என்கிறார்கள் அங்கே சென்று திரும்பியவர்கள். சூரியன் விடைபெற்றுச் சென்றதும் அங்கே இருள் நிரந்தரமாகக் குடிகொண்டுவிடும். மறுநாள் விடிந்தால்தான் வெளிச்சம். அது வரை இருள் மட்டுமே துணை.

வட கொரிய மக்கள் சந்திக்கும் எண்ணற்ற பிரச்சினைகளுள் முதன்மையானது அங்கு நிலவிவரும் கடும் மின்சாரத் தட்டுப்பாடு. பொழுது சாய்வதற்குள் எல்லா வேலைகளையும் முடித்துக்கொண்டு வீட்டுக்குள் முடங்கிவிடுவது வட கொரிய மக்களுக்குப் பழகிவிட்டது. "குடியிருப்புப் பகுதிகள் மட்டுமல்ல, அரசுப் பணியிடங்கள், வணிகப் பகுதிகள், வீதிகள் என எங்கும் இருள் நிறைந்து கிடப்பதைக் காணலாம்" என்கின்றன சமகால வட கொரியா குறித்து வெளி வந்திருக்கும் சில புதிய நூல்கள். "எங்களுக்கு மின்சாரத் தட்டுப்பாடு இருப்பது உண்மைதான். அதற்குக் காரணம், அமெரிக்கா எங்கள் மீது விதித்திருக்கும் பொருளாதாரத் தடை" என்கிறது வட கொரியா. "தினம் தினம் அணு ஆயுதப் பரிசோதனை செய்து கொண்டிருந்தால், தடை விதிக்காமல் வேடிக்கையா பார்த்துக் கொண்டு நிற்பார்கள்?" என்று திருப்பிக் கேட்கிறது அமெரிக்கா.

அமெரிக்காவைச் சீண்டிக்கொண்டே இருப்பது, கிம்முக்குப் பிடித்த பொழுதுபோக்கு. சென்ற ஆண்டு செப்டெம்பர் 9 ஆம் திகதி அணு ஆயுதப் பரிசோதனையை வட கொரியா நிகழ்த்தியபோது, அமெரிக்கா மட்டுமல்ல உலகமே அச்சத்துடன் திரும்பிப் பார்த்தது.

எப்படியாவது அணு ஆயுதப் பரிசோதனையில் வெற்றிபெற வேண்டும் என்று தீராத துடிப்புடன் இருக்கிறார் கிம். அதற்கான காரணம் புரிந்துகொள்ளக்கூடியதுதான். கிம்மின் தந்தை கிம் ஜாங் இல், வட கொரியாவின் பலமிக்க ஜனாதிபதியாக இருந்ததுடன், அந்நாட்டு மக்களின் நம்பிக்கையைப் பெற்ற ஜனாதிபதியாகவும் நீடித்தார். டிசெம்பர் 2011 ஆம் ஆண்டில் அவர் இறந்ததைத் தொடர்ந்து, கிம் ஜாங் உன் பொறுப்பை ஏற்றார். கிம் ஜாங் இல் உயிருடன் இருந்தபோதே தன் மகனைத் தயார்செய்ய ஆரம்பித்துவிட்டார் என்றாலும், தனித்துவமிக்க எந்தத் திறனையும் கிம் ஜாங் உன் வளர்த்துக்கொள்ளவில்லை. தந்தை வகித்த பதவியும், தந்தை பெற்றிருந்த அதிகாரமும் கைகூடிவிட்டன என்றாலும் அப்பாவிடம் இருந்த மிடுக்கும் கவர்ச்சியும் தன்னிடம் இல்லை என்பதையும் இதை வட கொரியாவும் உலகமும் உணர்ந்திருக்கின்றன என்பதையும் கிம் அறிவார். எனவே, தன்னுடைய தனிப்பட்ட சாதனை என்று சொல்லிக்கொள்ளும் படியாக ஏதேனும் ஒன்றை உடனடியாகச் செய்துகாட்ட அவர் விரும்புகிறார். அப்படி அவர் தேர்ந்தெடுத்திருப்பது தான் அணு ஆயுதம். வட கொரியாவை எப்படியாவது ஓர் அணு ஆயுத நாடாக மாற்றிவிட்டால், அது நிச்சயம் அவர் சாதனையாகவே பார்க்கப்படும்.



மற்றப்படி சர்ச்சைகளுக்கும் எதிர்ப்புகளுக்கும் அவர் அஞ்சுவதாகத் தெரியவில்லை. அப்படி அஞ்சுபவராக இருந்திருந்தால், உலகையே பதைபதைக்கவைக்கும் நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டிருப்பாரா? சில உதாரணங்கள். தன்னுடைய மாமாவும் அப்பாவுக்கு மிகவும் வேண்டப்பட்டவரும், செல்வாக்குமிக்க அரசுப் பதவியை வகித்தவருமான சாங் சோங் தாயெக் என்பவருக்கு, டிசெம்பர் 2013ஆம் ஆண்டில் மரண தண்டனை விதித்தார் கிம். "அவர் நாட்டுக்கு துரோகம் இழைத்துவிட்டார்" எனக் காரணம் சொல்லப்பட்டது. ஊழலில் திளைத்தார் என்பது அவர் மீதான இன்னொரு குற்றச்சாட்டு. மற்றபடி, குறிப்பாக அவர் இழைத்த தவறு என்ன என்பது இன்றுவரை தெளிவாகச் சொல்லவில்லை. "தேவையற்ற குப்பை என்பதால், அகற்றினேன்" என்று ஒருமுறை உரையாற்றும்போது குறிப்பிட்டார் கிம்.

கிம்மால் அகற்றப்பட்ட இன்னொரு 'குப்பை' கிம் ஜாங் நாம். இவர் கிம்மின் அரைச் சகோதரர். அதாவது, கிம்மின் தந்தை கிம் ஜாங் இல்லின் வேறொரு மனைவிக்குப் பிறந்த முதல் மகன். அந்த வகையில் அதிகாரத்துக்கான நேரடிப் போட்டியாக வந்திருக்க வேண்டியவர். ஆனால், கிம் ஜாங் நாம் தன் தந்தையுடன் முன்னரே சண்டையிட்டுப் பிரிந்து சென்றுவிட்டவர் என்பதால், கிம் பதவிக்கு வந்ததை அவர் எதிர்க்கவில்லை. கிட்டத்தட்ட வாழ்நாள் முழுக்க தலைமறைவாகவே இருந்திருக்கிறார் கிம் ஜாங் நாம். வட கொரியாவைவிட்டு வெளியேறி ஜெனிவாவில் படித்தார். அவ்வப்போது தன் சகோதரன் கிம்மைப் பற்றி காரசாரமாக அறிக்கைகள் வெளியிட்டதைத் தவிர, மேலதிகம் எதுவும் அவர் செய்ததாகத் தெரியவில்லை.

இந்த நிலையில், கடந்த பெப்ரவரி 13ஆம் திகதி கோலாலம்பூர் விமான நிலையத்தில் வைத்து கிம் ஜாங் நாம் கொல்லப்பட்டார். கொலைகூட அல்ல, கொல்லப்பட்டவிதம் தான் அதிக அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. ஹொலிவுட் படங்களில் வருவதுபோல் இரண்டு பெண்களை வைத்து நூதனமான முறையில் இந்தப் படுகொலை நிகழ்த்தப்பட்டிருக்கிறது. "வி.எக்ஸ்" எனப்படும் உயிர் கொல்லி வாயு, கிம் ஜாங் நாமின் முகத்தில் வீசப்பட்டிருக்கிறது. நொடியில் சுருண்டு விழுந்து அவர் இறந்துவிட்டார். "இது ஒரு ரியாலிட்டி ஷோ" எனச் சொல்லி, அந்த இரசாயனத்தை அந்தப் பெண்களிடம் கொடுத்து அனுப்பி கிம் ஜாங் நாமின் முகத்தில் வீசச் செய்திருக்கிறார்கள். நாம் ஒருவரைக் கொல்லப் போகிறோம் என்று தெரியாமலேயே கிங்கைக் கொன்றுவிட்டு திரும்பியிருக்கிறார்கள் அந்த இருவரும். இது, கிம் ஜாங் உன்னின் ஏற்பாடு எனச் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

கிம் இதற்கெல்லாம் தயங்காதவர் என்று அமெரிக்காவுக்குத் தெரியும். ஆனாலும், அமெரிக்கா அதிர்ந்ததுக்குக் காரணம், தடை செய்யப்பட்ட இரசாயன ஆயுதத்தை கிம் பாவித்தது தான். அப்படியானால், அணு ஆயுதத்தோடு சேர்த்து நவீன இரசாயன ஆயுதத்தையும் கிம் உற்பத்தி செய்து கொண்டிருக்கிறாரா என்பதுதான்.

வட கொரியாவின் பிரதான எதிரி நாடுகள் மூன்று. முதலாவது, அமெரிக்காவின் இராணுவ ஆதரவுடன் இயங்கிவரும் தென்கொரியா. இரண்டாவது, வட கொரியா மீது பொருளாதாரத் தடைகள் விதித்துள்ள அமெரிக்கா. மேற்கத்தேய நாடுகளுடன் இணைந்து வட கொரியாவை எதிர்க்கும் அண்டைநாடான ஜப்பான். இந்த மூன்று நாடுகளுமே கிம்மை ஒரு புதிராகவே பார்க்கின்றன. இந்த மூன்றும் போதாதென, சீனாவுடனும் நேரடி மோதல்களில் இறங்கிவிட்டார் கிம்.

ஒரே சமயத்தில் அச்சுறுத்தலாகவும் புதிராகவும் வேடிக்கையான மனிதராகவும் கிம் காட்சியளிப்பது, சிக்கலை அதிகப்படுத்தவே செய்கிறது. இவருடைய எதிரிகள் அனைவரும் ஒன்றுபோல் குழம்பிப்போய் நின்று கொண்டிருக்கின்றனர். இவரை என்னதான் செய்வது? சத்தியமாக ஒருவருக்கும் தெரியவில்லை. கிம் ஜாங் உன் பற்றி வெளி வரும் அடுத்த நகைச்சுவைக்காக அல்லது அவரிடமிருந்து வரும் அடுத்த தாக்குதலுக்காக அவர்கள் கைகட்டிக் காத்திருக் கிறார்கள். எது நகைச்சுவை, எது சீரியஸ் என்பதைக் கூட கிம்தான் சொல்ல வேண்டியிருக்கிறது என்பதுதான் இருப்பதிலேயே பெரும் சோகம்!

**ஜூனியர் விகடன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன செய்யும் ஈர்ப்பு விசை?

பூமியில் நிலையாக நாம் நிற்க காரணமே ஈர்ப்புவிசைதான். பேனாவால் எழுத, சாப்பிட, குளிக்க என அனைத்துக்கும் ஈர்ப்புவிசை தேவை. ஈர்ப்புவிசை தினசரி வாழ்வில் கண்ணுக்கு புலப்படாமல் இருந்தாலும் நமது உடலில் ஈர்ப்புவிசையின் தாக்கம் உண்டு.விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் முயற்சியில் ஈடுபட்ட பின், ஈர்ப்பு விசை நமது உடலில் ஏற்படுத்தும் சிறிய மாற்றங்களையும் ஆராய்ச்சியாளர்கள் கவனிக்கத் தொடங்கி விட்டனர். ஏனெனில் ஈர்ப்புவிசையற்ற விண்வெளியில் உடல் தத்தளிக்கத் தொடங்குமே!விண்வெளியில் சில காலம் பணி செய்த விண்வெளி வீரர்களுக்கு, உயரம் அதிகரித்தும், எலும்பின் அடர்த்தி குறைந்திருப்பதையும் கண்டறிந்த அறிவியலாளர்கள் முன்னும் பின்னுமான விண்வெளி பயண மாற்றங்களை பதிவு செய்ய முயற்சித்தனர். பூமியில் ஈர்ப்பு




விசையற்ற அறையை உருவாக்கி, அதில் வீரர்களை தங்கவைத்து உடல்நலனைக் கண்காணித்து பல்வேறு உண்மைகளைக் கண்டறிந்தனர்.ஈர்ப்புவிசை பரப்பில் நமது உடலில் காயம் ஏற்பட்டு இரத்தம் வெளியேறும்போது, உடலின் மெக்கானோரிசெப்டர் மூலம் இது குறித்த தகவல்கள்



உடனே மூளைக்கு கடத்தப்பட்டு இரத்தம்உறைதல்செயற்பாடு தொடங்குகிறது. இதுவே ஈர்ப்பு விசையற்ற சூழலில், செல்களின் இயக்கத்தில் அயன்களின் செயற்பாடு அதீதமாகி, செல்களின் வளர்சிதை மாற்றம் முடக்கப்படுகிறது.

எலும்புகள் மெலியும், நோய்கள் பெருகும்!

1980களிலிருந்து செய்யப்படும் ஆராய்ச்சியிலிருந்து ஈர்ப்பு விசையற்ற இடத்தில் உடலின் மேற்பகுதியிலுள்ள மூளைக்கு செல்லும் இரத்தத்தின் அளவு அதிகரிக்கும்போது, உடலின் நிலையைப் பற்றி மூளைக்கு அறிவிக்கும் நியூட்ரான் ட்ரான்ஸ்மிட்டர்கள், மூலக்கூறுகளின் செயற்பாடுகள் தடைப்படுகின்றன. விண்வெளி வீரர்களுக்கு உணர்வுரீதியான தடுமாற்றங்களும், புரிந்து கொள்வதில் தடையும் உருவாவது இதனால்தான். விண்வெளியில் ஒரு மாதத்திற்கு 1% எலும்பு அடர்த்தி குறையும். ஈர்ப்புவிசையற்ற நிலையில் புரதம் மற்றும் டிஎன்ஏ செயற்பாடு வளர்சிதை மாற்றம் தடைபடுவதால், புதிய எலும்பு



திசுக்கள் உருவாவதில்லை. எனவே விண்வெளியில் உள்ள வீரர்களின் உடலில் எலும்புகளின் அடர்த்தி குறைகிறது.விண்கலத்தில் முதலிலேயே நுண்ணுயிரி நீக்கம் செய்யப்படுகிறது. நாசாவின் அப்பல்லோ 13 விண்கலத்தில் பயணித்த வீரர், ஃப்ரெட் ஹைஸ்க்கு Pseudomonas aeruginosa என்ற பக்றீரியா தாக்குதல் இருப்பது கண்டறியப்பட்டது. நோயெதிர்ப்பு சக்தி குறைவானவர்களைத் தாக்கும் இந்நோயை, ஈர்ப்புவிசையற்ற சூழலே உடலில் உண்டாக்குகிறது என்பது ஆய்வு உண்மை.

பாதிப்பை குறைப்பது எப்படி?

விண்வெளி வீரர்கள் செல்களுக்கு பாதுகாப்பு தர தினமும் 2 மணி நேரம் உடற்பயிற்சி (பளு தூக்குதல், நடைப்பயிற்சி) செய்கிறார்கள். எலும்பு சேதாரத்தை இவை பெருமளவில் தடுப்பதில்லை.செல்களின் வளர்சிதை மாற்றத்தை கட்டுப்படுத்தி இயக்கும் நியூட்ரோட்ரான்ஸ்மிட்டரான GABA வைப்பயன்படுத்திய போதும் விஞ்ஞானிகளால் இதன் இயக்கம் ஏற்படுத்தும் உடலின் மாற்றங்களை தெளிவாக அறிய முடியவில்லை.எளிதாக செரிமானம் ஆகும் நோயெதிர்ப்பு சக்திதரும் உணவு வகைகள் மூலம் ஈர்ப்பு விசையற்ற பாதிப்புகளைக் குறைக்க முயற்சிக்கிறார்கள். முன்பு பூமியின் ஈர்ப்பு விசையைத் தாண்டி ரொக்கெட்டுகளை விண்வெளிக்கு அனுப்புவது பெரிய சவால்தான். ஆனால் அதனை நாம் கடந்து வந்திருப்பது நம் முயற்சிகளால்தான். இதனையும் கடந்து செல்வோம்.




# நாய்க்குட்டிக்கு வீல்சேர்!

இங்கிலாந்தின் பெர்க்ஷையர் பகுதியில் தன் மனைவியுடன் வாழ்ந்து வருகிறார் மைக்கேல். அவர்கள் ஆசையாக பப்பி என்ற நாய்க்குட்டியை வளர்த்து வந்தனர். சில நாட்களுக்குமுன் நடந்த கோர விபத்தில் பப்பியின் பின்னங்கால்கள் இரண்டும் உடைந்துவிட்டன. இதன் பிறகு பப்பி அனுபவிக்கும் கஷ்டங்களை மைக்கேலால் பார்க்க முடியவில்லை.

விலங்கு வைத்தியர்களைச் சந்தித்தார். அவர்களாலும் சரி செய்ய முடியவில்லை. பலரிடம் யோசனை கேட்டிருக்கிறார். பெடலுடன் கூடிய ஒரு வீல் சேரால் நாயை நடக்க வைக்க முடியும் என்ற ஐடியா இணையத்திலிருந்து கிடைத்திருக்கிறது. அந்த சேர் செய்வதற்கான தொகை மைக்கேலிடம் இல்லை. இணையத்தில் தன் நிலையை சொல்லியிருக்கிறார். அவ்வளவுதான். முகம் தெரியாத பலர் பண உதவி செய்திருக்கின்றனர். இன்று பெர்க்ஷையரின் புல்வெளிகளின் நடுவே இருக்கும் தார் வீதியில் வீல் சேருடன் ஒய்யாரமாக மைக்கேலைப் பின்தொடர்ந்து வருகிறது அந்த பப்பி!

இந்த உலகில் இன்னும் நல்ல மனிதர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். யாரென்றே தெரியாத பலரும் எனக்கு உதவினார்கள். அவர்கள் ஒருமுறைகூட என்னையும், பப்பியையும் பார்த்தது கூட இல்லை!" மனம் உருக பேசுகிறார் மைக்கேல்.





# குரங்கு வளர்த்த சிறுமி!


ஓநாய்களால் வளர்க்கப்பட்டு விலங்குகளோடு விலங்காக காட்டில் வாழும் சிறுவன் மோஹ்லி குறித்து 'த ஜங்கிள் புக்' கதையில் படித்திருப்போம். அதையே ஹோலிவுட் படமாகவும் பார்த்து இரசித்திருப்போம். மோஹ்லி போல் நாமும் வாழ வேண்டும் என ஆசைப்படாத சிறுவர்களை விரல் விட்டு எண்ணி விடலாம்.

அந்தக் கனவு நினைவாகி இருக்கிறது. சுரேஷ் யாதவ் ஒரு சப் இன்ஸ்பெக்டர். நேபாளின் எல்லைப் பகுதியில் இருக்கும் கட்டார்னியாகட் வனவிலங்கு சரணாலயம் அருகே வழக்கம்போல் ஒருநாள் ரோந்து போயிருக்கிறார். அப்போது ஒரு சிறுமி குரங்குகளோடு குரங்காக நான்கு கால்களில் நடந்து செல்வதைப் பார்த்திருக்கிறார்.

அதிர்ந்தவர், அச்சிறுமியை மீட்க முயன்றிருக்கிறார். குரங்குகள் தாக்கியிருக்கின்றன. அதையும் மீறி அச்சிறுமியை மீட்டு வைத்தியசாலையில் சேர்த்திருக்கிறார். மனிதர்களைப் போல் அந்த சிறுமியால் பேசவும் நடக்கவும் முடியவில்லை. நான்கு கால்களில் நடக்கிறார். தாவுகிறார். குரங்குகள் போலவே சாப்பிடுகிறார். மனிதர்களைக் கண்டு பயப்படுகிறார். 'விரைவில் அந்த சிறுமியை மனித இயல்புக்கு கொண்டு வந்துவிடுவோம்' என வைத்தியர்கள் நம்பிக்கை அளிக்கின்றனர்.


# கிருமிகளை அகற்றும் வாஷ்வாவ்!

சோப்பில் துவைத்தால் அதிக விலையுள்ள துணிகள் விரைவில் வெளுத்து விடும். சரியான சோப்பினை தேர்ந்தெடுத்து கிடைக்கிற நேரத்தில் துவைத்தாலும் இவை சரியான படி அழுக்கு போக முயற்



சியும் பயிற்சியும் தேவை. இக்குறைபாடுகளை தீர்க்கவே வாஷ்வாவ் வந்திருக்கிறது. இதன் மூலம் அழுக்குகளோடு நுண்கிருமிகளையும் சோப்பின்றி சிம்பிளாக நீக்கமுடியும்.

கருவியிலுள்ள உலோகம், நீரிலுள்ள அயனிகளைப் பயன்படுத்தி ஆக்கிஜன் மற்றும் ஹைப்போ குளோரிக் அமிலம் ஆகியவற்றின் மூலம் அதிக சத்தமின்றி காஸ்ட்லியான துணிகளிலுள்ள அழுக்குகளையும் கூட துல்லியமாக நீக்குகிறது. முதலில் துணிகளைத் துவைப்பதற்கான இடத்தில் வைத்து நீரில் நனைத்து வாஷ்வாவை இயக்கினால் போதும். 30 நிமிடங்களில் துணியிலுள்ள கிரீஸ் கறை உட்பட அனைத்தும் மாயமாகும். பின்னர் எடுத்து நீரில் நனைத்து காயப்போட்டு விடலாம்.




பல இடங்களுக்கும் பிஸினசிற்காக செல்பவர்கள் சோப்புக் கட்டியைத்தூக்கிக்கொண்டு அலைவதை விட எளிமையாக லைட் வெயிட் வாஷ்வாவைக்கொண்டு சென்றுதுவைக்கலாம்.

துவைப்பது குறித்த கவலையை மறந்தே விடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெயரைக் கேட்டவுடனேயே சும்மா அதிருதுல்ல சி.எஸ்.கே. வெறியனின் ஒரு டயறிக்குறிப்பு



சென்னை சுப்பர் கிங்ஸ் பெயரைக் கேட்டவுடனேயே சும்மா அதிருதுல்ல... நாடி, நரம்பு, ரத்தம், சதை என எல்லாத்துலேயும் சென்னை சுப்பர் கிங்ஸ் வெறி.

டோனியின் தலைமையில் 2008இல் இருந்து இந்த சிங்கங்களின் பயணம் தொடங்கியது.

* முதல் ஐபிஎல் பஞ்சாப் அணிக்கு எதிரான ஆட்டத்தில் தனது முதல் ஆட்டத்தையே சென்னை அணி வெற்றியில்தான் தொடங்கி வைத்தது.

பின் விளையாடிய ஆட்டங்களிலும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வெற்றி வாய்ப்பினை தக்க வைத்துக்கொண்டே வந்தது.

அந்தச் சமயத்தில் லீவு விட்ட ஸ்கூல் குழந்தை போல் சர்வதேசப் போட்டியின் காரணத்தால் "மைக்கெல் ஹசி", "மேத்யூ ஹெய்டன்", "ஜேக்கப் ஓரம்" ஆகிய நட்சத்திர வீரர்கள் பாதியிலேயே போக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

அதையடுத்து தொடர்ந்து மூன்று போட்டிகளில் தோற்றுப் போனது சென்னை. அதிலிருந்து பதினாறாவது நாள் வந்தாங்க போர்முக்கு. முன்பு தோற்கடித்த அதே "டெல்லி டேர்டெவில்ஸ்"அணியை "ஃப்ளெம்மிங்", "மோர்கல்", "வித்யுத் சிவராமகிருஷ்ணன்" தயவால் 188 ஓட்டங்களை பெற்று வெற்றியைக் கைப்பற்றினார்கள்.

பின் பஞ்சாப்பிற்கு எதிரான ஆட்டத்தில் "லட்சுமிபதி பாலாஜி" ஹட்ரிக் விக்கெட் எடுத்ததோடு இல்லாமல் 24 ஓட்டங்களை கொடுத்து 4 விக்கெட்டுகளையும் பெற்றார்.

பின் மடமடவென பொயின்ட்ஸ் டேபிளில் மேலே உயர இறுதியில் ராஜஸ்தான் அணியுடன் இறுதிப் போட்டியில் சென்னை 163 ஓட்டங்களுக்கு 5 விக்கெட் இழப்பிற்குக் கௌரவ ஓட்டத்தை அடித்தது. பின் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் அணி பொறுப்பாக ஆடி இறுதிப் போட்டியை வென்றது.

2008 கிண்ணம் சென்னைக்கு ஜஸ்ட் மிஸ்ஸாகி விட்டது. அந்த சீஸனில்தான் ஹெய்டன் மங்கூஸ் பேட்டை ஃபேமஸ் ஆக்கிவிட்டார்.

* இது 2009 ஐபிஎல். மும்பைக்கு எதிரான முதல் ஆட்டத்தில் சென்னை 19 ஓட்டங்களில் வெற்றி வாய்ப்பினை தவறவிட்டது. அதன்பின் பெங்களூர் அணிக்கு எதிரான ஆட்டத்தில் 92 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது சென்னை.

அதற்கு பிறகு விளையாடிய 3 ஆட்டங்களில் தொடர்ந்து தோல்வியைத் தழுவியது சென்னை அணி. என்னடா இது சுப்பர் கிங்க்ஸ"க்கு வந்த சோதனை?னு நெனச்சு மீசையை முறுக்கிவிட்டு களத்தில் துவம்சம் செய்தனர்.

சுரேஷ் ரெய்னாவின் 98 ஓட்டங்கள், ஜகாத்தியின் 4 விக்கெட்டுகள், ஹெய்டனின் 89 ஓட்டங்கள், பத்ரிநாத்தின் அசைக்க முடியாத 50 ஓட்டங்கள் தொடர்ந்து 5 வெற்றிகளைப் பெற உதவியது. இந்த வெற்றிப் பயணமானது பெங்களூருக்கு எதிரான ஆட்டத்தில் முடிவிற்கு வந்தது. முதல் ஆட்டத்தில் 93 ஓட்டங்கள் வென்றதையடுத்து பழி தீர்த்துக்கொண்டது பெங்களூர் அணி. அதன்பின் வெற்றி தோல்வி என மாறி மாறி சந்தித்த சென்னை அணி அரையிறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.

முதல் போட்டியில் பெங்களூருவை தோற்கடித்ததையடுத்து அரையிறுதிப் போட்டியிலும் 6 விக்கெட் வித்தியாசத்தில் சென்னை அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது பெங்களூர் அணி. ஹெய்டன் 12 இன்னிங்க்ஸ்களில் 572 ஓட்டங்களைப் பெற்று ஓரஞ்ச் தொப்பியைத் தக்கவைத்துக்கொண்டார்.

* 2010 ஐ.பி.எல். டெக்கான் சார்ஜர்ஸ்க்கு எதிரான ஆட்டத்தில் தோல்வியுடன் ஆரம்பித்த சென்னை அணி அடுத்த போட்டியில் சிறப்பாக ஆடி கொல்கத்தாவை அவர்கள் ஹோம் கிரவுண்டிலே துவம்சம் செய்தனர்.

சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய "டோனி" 33 பந்துகளுக்கு 66 ஓட்டங்களைப் பெற்று சென்னையை வெற்றியடையச் செய்தார். அடுத்ததாக டெல்லிக்கு எதிரான ஆட்டத்தில் "ஹெய்டன்" அவரது பங்கிற்கு 43 பந்துகளில் 93 ஓட்டங்கள் அடித்து 5 விக்கெட் வித்தியாசத்தில் டெல்லி அணியை வீழ்த்தியது சென்னை.

அதன்பின் இடம்பெற்ற போட்டிகளில் சமநிலை, 3 தோல்விகள் எனப் போய்க்கொண்டிருந்த நேரத்தில் அடுத்தடுத்த இரண்டு ஆட்டங்களிலும் தன் முரட்டுத்தனமான ஆட்டத்தின் மூலம் சென்னை அணியை வெற்றியடையச் செய்தார் முரளி விஜய். முதல் போட்டியில் 78 ஓட்டங்களிலும் இரண்டாவது போட்டியில் அதிரடியாக ஆட்டத்தை வெளிப்படுத்தி 127 ஓட்டங்களைப் பெற்று சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். 54ஆவது போட்டிதான் மறக்க முடியாத போட்டியாக அமைந்தது.

பஞ்சாப்பிற்கான எதிரான ஆட்டத்தில் ஜெயிப்பவர் அரையிறுதிக்குள் முன்னேறும் முக்கியமான கட்டம். அதகள ஆட்டத்தை வெளிப்படுத்திய பஞ்சாப் அணி, 193 ஓட்டங்களை சென்னை அணியின் இலக்காக நிர்ணயித்தது.

அதை நோக்கி ஓடத்தொடங்கிய சென்னை அணியும் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த கடைசி ஓவரில் 16 ஓட்டங்கள் பெற வேண்டுமென்ற இக்கட்டான சூழ் நிலையில் இருந்தது.

துடுப்பாட்ட சைடில் டோனி இருந்த ஒரே ஆறுதல். பந்தை "இர்பான் பதான்" வீச அதை பாரபட்சம் பார்க்காமல் பவுண்டரிக்கு விரட்டியடித்தோடு, கடைசி பந்தில் சிக்ஸர் அடித்து அரையிறுதிக்குள் நுழைந்த வெறியில் ஹெல்மெட்டால் அடித்துக்கொண்டது இன்னும் கண் முன் நிற்கின்றது. கூல் அணித்தலைவரை அப்படி யாரும் பார்த்திருக்க முடியாது.

சென்னை ரசிகர்களால் மறக்க முடியாத தருணமென்றால் அதுதான். அரையிறுதியில் டெக்கானை வீழ்த்தி மும்பை அணியை இறுதியில் சந்தித்தது சென்னை அணி. ஒவ்வொரு நிமிடமும் விறுவிறுப்பின் உச்சத்தையடைய... முடிவில் இறுதிப்போட்டியை வென்று சம்பியன்ஸ் பட்டத்தைப் பெற்றது சென்னை அணி.

இதில் சிறப்பு என்னவென்றால் அதே வருடத்தின் சம்பியன்ஸ் லீக்கையும் வென்று இரண்டு கோப்பையுடன் வலம் வந்தது சென்னை அணி.

* அதற்கு அடுத்த வருடம்... சென்னை அணிக்கு ஒரு சின்ன கெட்டப்பழக்கம்எல்லா வருடமுமே இருக்கும். அது அந்த வருடமும் தொடர்ந்தது. ஆரம்பத்திலேயே வெற்றி பெற்று ரசிகர்களின் ப்ரஷரைக் குறைக்கும் பழக்கமே கிடையாது.

கடைசி நேரத்தில் வேகமாக எக்ஸாம் எழுதும் பாடசாலை மாணவர்கள் மாதிரி முக்கியமான கட்டத்தில் வெற்றி பெற்றால் மட்டுமே இறுதிக்குள் நுழையமுடியும் என்ற தருவாயில்தான் வெற்றியை நோக்கி ஓடும் சுப்பர் கிங்ஸ்.

அதே போல் தொடர்ந்து தோல்விகளை சந்தித்த சென்னை அணி கடைசி 10 போட்டிகளில், 8 போட்டிகளில் வென்று நடுவில் இரண்டு போட்டிகளில் மட்டும் தோற்று இறுதியில் பெங்களூர் அணியை வீழ்த்தி இரண்டாவது முறையாக சம்பியன்ஸ் பட்டத்தை வென்று கோப்பையை தக்கவைத்துக்கொண்டது சென்னை அணி. எவ்வளவு வெற்றி? ஒரே கஷ்டமப்பா..!

அதன் பின்னர் மூன்றுமுறை இறுதிக்குள்ளும் ஒருமுறை அரையிறுதிக்குள்ளும் சென்றது. இதுவரை சென்னை அணி லீக்கிலேயே வெளியேறினதாக சரித்திரமே இல்லை! (க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள் ...

பாடல்:- நிலவே என்னிடம் நெருங்காதே
படம்:- இராமு
பாடியவர்:- பி.வி.ஸ்ரீனிவாசன்



நிலவே என்னிடம் நெருங்காதே
நீ நினைக்கும் இடத்தில் நான் இல்லை..
நிலவே என்னிடம் நெருங்காதே
நீ நினைக்கும் இடத்தில் நான் இல்லை
மலரே என்னிடம் மயங்காதே
நீ மயங்கும் வகையில் நான் இல்லை
நிலவே என்னிடம் நெருங்காதே
நீ நினைக்கும் இடத்தில் நான் இல்லை..

கோடையில் ஒரு நாள் மழை வரலாம்
என் கோலத்தில் இனிமேல் எழில் வருமோ
கோடையில் ஒரு நாள் மழை வரலாம்
என் கோலத்தில் இனிமேல் எழில் வருமோ
பாலையில் ஒரு நாள் கொடி வரலாம்
என் பார்வையில் இனிமேல் சுகம் வருமோ
நிலவே என்னிடம் நெருங்காதே
நீ நினைக்கும் இடத்தில் நான் இல்லை

அமைதியில்லாத நேரத்திலே
அமைதியில்லாத நேரத்திலே
அந்த ஆண்டவன் என்னையே படைத்து விட்டான்
நிம்மதி இழந்து நான் அலைந்தேன்
இந்த நிலையில் உன்னை ஏன் தூது விட்டான்
நிலவே என்னிடம் நெருங்காதே
நீ நினைக்கும் இடத்தில் நான் இல்லை
மலரே என்னிடம் மயங்காதே
நீ மயங்கும் வகையில் நான் இல்லை
நிலவே என்னிடம் நெருங்காதே
நீ நினைக்கும் இடத்தில் நான்.... இல்லை...

# கனவுகளும் பலன்களும்



வீடியோ விளையாட்டு சாதனத்தைக் கனவில் கண்டால் நரம்புத் தளர்ச்சி நோய் வரலாம். அந்த சாதனத்தில் விளையாடுவது போலக் கனவு கண்டால் மூளை பாதிப்பு ஏற்படலாம்.

தொலைக்காட்சிப் பெட்டியைக் கனவில் கண்டால் எதிர்கால வாழ்க்கை சிறப்பாக அமையும். ரி.வி.பெட்டியை இயக்குவது போலக் கனவு கண்டால் திட்டங்கள் உருவாகும். ரி.வி. பெட்டி உடைந்து விட்டது போலக் கனவு கண்டால் தொழிலில் நஷ்டம் ஏற்படும்.

**நீதிமன்றம்-நீதிபதி-சட்டத்தரணியை கண்டால்**

நீதிமன்றத்தை கனவில் கண்டால் நீதிக்காக எத்தனை வருடம் போராடினீர்களோ அதற்கு கைமேல் பலன் கிடைக்கும். அது உங்களுக்கு சாதகமாகவும் மனத்திருப்தியாகவ்வும் அமையும். நீதிமன்ற வழக்கு இல்லாதவர்களுக்கு ஏதாவது வழியில் நீதிமன்றம் ஏறும் நிலை வரும். ஆகவே எச்சரிக்கை உணர்வுடன் நடந்து கொள்வது நல்லது.

நீதிபதியை கனவில் கண்டால் உங்களுக்கு எதிராக வழக்கு கொடுத்தவரே உங்களிடம் சமாதானத்திற்கு வருவார்கள். வழக்குக்கு சம்பந்தம் இல்லாதவர்களிடத்தில் வழக்குக்கான ஆலோசனைன்ய கேட்காமல் இருப்பது நல்லது.

சட்டத்தரணியிடம் உரையாடுவது போலக் கனவு கண்டால் பேச்சினால் எக்காரியத்தையும் சர்வ சாதாரணமாக சாதிப்பீர்கள். வில்லங்கமான காரியத்தில் தலையிட நேரலாம். உங்களிடம் வீண் சண்டை போடவோ சிலர் வருவர். நீண்ட காலமாக ஏதாவது காரியத்திற்காக போராடிக் கொண்டு இருந்தால் அந்தக் காரியத்திற்கான தடைகள் விலகி வேலை கைகூடும்.

சட்டத்தரணியிடம் சண்டை போடுவது போலக் கனவு கண்டால், பெரிய ஆபத்தில் சிக்கிக் கொண்டு திணறுவீர்கள். வசதிகள் இருந்தாலும் அனுபவிக்க முடியாத சூழ்நிலை உண்டாகும். உறவினர்களிடத்தில் சண்டை போடும் நிலை வரும். அவர்களால் தொல்லையும் இருக்கும்.

பொதுவாகவே இரவு ஒரு மணிக்கு கனவு கண்டால் ஒரு வருடத்திற்குள் பலன் கிடைக்கும். இரண்டு மணிக்கு கனவு கண்டால் மூன்று மாதத்திற்குள் பலன் கிடைக்கும். மூன்று மணிக்கு கனவு கண்டால் ஒரு மாதத்திற்குள் பலன் கிடைக்கும். விடியற்காலையில் கனவு கண்டால் உடனே பலிக்கும். ஆனால் பகல் கனவு பலிக்காது என்கிறது கனவு சாஸ்திரம்.

சிலருக்கு கனவு கண்ட சில நாட்களிலேயே பலிக்கும். தீய கனவு கண்டால் நினைத்து நினைத்தே வேதனைப்படுபவர்களும் இருப்பார்கள். அப்படி தீய கனவைக் கண்டவர்கள் இறைவனை நம்பிக்கையுடன் வணங்கினால் தீய கனவுகளும் வெறும் கனவாகவே ஆகிவிடும். மொத்தத்தில் இறைவன் ஒருவனே மிகப் பெரியவன். அவனையே முழுமனதுடன் நம்பினால் சங்கடங்கள் விலகி வாழ்நாள் முழுவதும் எதிலும் சாதிக்கலாம்-புகழ் பெறலாம்.

**திருவிழா-இறைவனைக் கண்டால்**

ஆலயத்திற்குள் செல்வது போல கனவு கண்டால், நண்பர்களின் வட்டாரத்தில் அன்பும் ஆதரவும் ஏற்படும்.

(தொடரும்)

# நிறைகுடம்

(உருவகம்)

அன்பானவர்களே இனிய ஞாயிறு வணக்கம். நான்தான் ஜிம்மிக்குட்டி. பள்ளிக்குப் போற பிள்ளைகளுக்கு ஒரு செய்தியாம். குடை அல்லது தொப்பி போட்டுக் கொண்டு போகட்டாம், நிறையத் தண்ணீர் குடிக்கட்டாம், கடும் வெய்யில்லை நிற்க வேண்டாமாம், கவனமாம்.

ம்... இப்ப வெயில் தணிந்து கிடக்கு. லதாக்குட்டியின்ர அப்பா வாறார். களைச்சுப் போனார்போல. நேரே குளிச்சு உடுப்பு மாத்திப் போட்டு அவரின்ர படிக்கிற மேசையில எதையோ தேடுறார். ஏதோ லீவிலை நிண்டு படிக்கிற படிப்பாம். ஆள் நல்ல கெட்டிக்காரர். பெரியவர் வாறார். சாய்மனைக் கதிரையிலை இருக்கிறார். தொடங்கிட்டினம்... ம்...இனி...தொடர் கதைதான்.

"தம்பி! என்னமாதிரி நீ ஒழுங்கு படுத்தின பெடியன் எப்பிடி ஒழுங்காப் போறானாமோ...பிள்ளையளோடை கவனமாப் படிப்பிக்கச் சொன்னியோ'' உண்மையான கரிசனையாக் கேக்கிறார்.

"ஓமப்பா அவன் நல்ல மரியாதையானவன்- பட்டதாரியும் தானே. நான் ஐயாயிரம் குடுக்கிறனப்பா. வேண்டாமெண்டவன். நான் அதிபருக்கு முன்னாலைதான் குடுத்தனான். அதிபரும் திருப்தியாச் சொன்னவர். இடையிலை போய் பார்த்தாப் போதுமப்பா''

பணிவான பதில் தான். நல்ல பழக்கம்.

"படிக்கிறதுஉன்னுடையவாண்மை விருத்திக்கு- ஆனால் பிள்ளையளின் படிப்பு தடங்கல் படக்கூடாது. இது ஒண்டும் சட்டமோ கட்டாயமோ இல்லை மகன். இது தார்மீகம். பதில் ஒழுங்கு செய்யாத ஆசிரியர்மாருக்கு அதிபரவை கொஞ்சம் கண்டிப்பா இருந்தால் நல்லது. ம்...''

பிள்ளையின்ர படிப்பையும் கவனிக்கத்தானே வேணும். மகன் ஏதோ சொல்லுறார்.

"அப்பா... என்னோடை நல்ல மாதிரி எண்டு சொன்னன் ஒரு மாஸ்ரர். அவரின்ர கடைசிப் பிள்ளையும் லதாக்குட்டியும் ஒண்டாத்தான் படிக்கினம்...அவர்... இப்ப கொஞ்ச நாளா தனிமையா ஒதுங்கி இருக்கிறார்... பாவம் ஏதோ மனசு கஷ்டம்போலை-உங்களோடை கதைக்கக் கேட்டவர்...இப்ப உங்களுக்கு நேரம் இருக்கோப்பா...''

பாத்தியளே கதைக்கிற வடிவை ... வளர்த்த வளர்ப்பு அப்பிடி.

பெரியவர் அந்தரப்படுகிறார்.

''இதென்னய்யா...இவ்வளவு நிதானமாகக் கேட்கிறாய்... ஒரு போனைப் போட்டு வரச் சொல்லய்யா... பாவம்...

நல்லபிள்ளை...என்ன துன்பமோ...'' பெருமூச்சு... ம்.... கேட்டியளே...மற்றவைக்கு ஒரு துன்பமெண்டால் துடிக்கிற துடிப்பு... பெரியவை எண்டைக்கும் பெரியவை தான். ம்...கேற் திறந்து சத்தம் கேக்குது. நான் குலைக்கேல்லை. எட்டிப்பாக்கிறன்... அவர்தான் வாறார் போல...ஒரு பதற்றம், ஒரு பரபரப்பு, வந்திட்டார். பெரியவர் கதிரையைக் காட்டுறார், வணக்கம் சொல்லிப் போட்டு இருக்கிறார்..

"தம்பி...எப்படி இருக்கிறியள்... கண்டும் கனநாள்....'' அன்பான விசாரிப்பு. "சேர்...நான் உங்களிட்டைத் தானே படிச்சனான். வலு நிதானமா உறுதியாத்தான் சேர் நான் என்ரை பொறுப்பை ஏற்று நல்ல றிசல்ட்டும் எடுத்துக் கொண்டுதான் வந்திருக் கிறன்....இப்ப..''-பாவம்... சொல் லக் கஷ்டப்படுறார் போல... பெரியவர் அக்கறையாக் கேக்கிறார்...

''ம்...சொல்லுங்கோ மகன்... இப்ப...'' -ஊக்கம் கொடுக்கிறார்.

''எனக்கு சேர்...சலிப்பு மாதிரி, களைச்ச மாதிரி, ஒரு இயலாமை மாதிரி... என்னத்தைச் செய்து என்ன பிரயோசனம் எண்டு ஒரே விரகத்தியா இருக்கு சேர்...''-பாவம் வேர்க்குது...''விளங்குது தம்பி...நீ எவ்வ ளவோ செய்யிறாய் ஐயா.... ஆனா.. அதுக்கு...'' பெரியவர் மௌனமாய் பார்க்கிறார்.

''ஓம் சேர்...அதுக்கு ஒரு விலை இல்லாத மாதிரி எல்லாருக்கும் முன்னாலை அதுவும் நீக்க விட்டு ட்டு என்னை என்னை கற்பித்தலைக் கோவலப்படுத்திறமாதிரி உரத்த சத்தம் போட்டுக் குற்றம் சாட்டினால்... என்னாலை தாங்கவே முடியேல்லை சேர்... ஐயோ... நான் நல்லாத்தான் படிப்பிச்சனான்''

பெரியவர் தண்ணிக் கிளாசை முன்னுக்குத் தள்ளி வைக்கிறார். அவரும் மடக்குமடக்கெண்டு குடிக்கிறார்... இதென்ன இப்பிடி வேகமாக் குடிக்கிறார். பெரியவர். பெருமூச்சொன்றைவிட்டுக்கொண்டுதலையை மேலும் கீழும் ஆட்டுறார்...

"தம்பி... கல்வித் தகைமை சிறப்புப்பட்டச் சான்றிதழ் தொழில் தகைமை எல்லாம் முதல் தரமான தகுதிகள்... முன்னாயத்தம் சிறந்த கற்பித்தல் முறை, வினாத்தாள் பயிற்சி, மீட்டல்கள், சின்னச்சின்னப் பரீட்சை, தவணைப் பரீட்சைகள், மதிப்பீடு எல்லாமே முறையா நீ செய்திருக்கிறாய். அதோடை பிள்ளையளோடை நல்ல உறவும் அக்கறையும் கொண்டு ஒரு குறையும் இல்லாமல் படிப்பிச்சிருக்கிறாய். பொற்றாரோடும் மதிப்பும் மரியாதையும் புரிந்துணர்வும் நிறைய இருக்கு. இவ்வளவும் உண்மை தானே ஐயா...?''மகிழ்ச்சியோடை அவர் தலையாட்டுறார்.

மூச்சு வாங்குது... பாவம் சரியாப் பாதிக்கப்பட்டிட்டார் போல... விரும்பிப் படிப்பிக்கிற மனிசரை ஏன் இப்பிடி துன்புறுத்தினமோ... பெரியவர் நிமிர்ந்து இருக்கிறார்.

"சரி...மற்றவர்களுக்குத் தெரிதலைவிட உங்கடை மனச்சாட்சிக்கு நீங்கள் நிறைவான ஆசானாகத் தான் செயற்பட்டிருக்கிறியள். அப்பிடியிருக்க எவராவது எதையாவது சொன்னால் அதை எதற்கு உங்களுக்குள் போட்டுக் கொண்டு துன்பப்பட வேணும்.

பிள்ளைகளுக்கு முன்னால் குறை கூறினால்... அது கூறுபவரின் அறியாமை. பிள்ளைகளோ சாதாரண அறிவு மட்டத்தில் உள்ளவர்கள். இதற்கெல்லாம் செவி சாய்க்க ஆரம்பித்தால் உங்கள் செயற்றிறன் வீழ்ச்சியடைந்து விடும். குறை கூறியோ குற்றம் கண்டு பிடித்தோ தம்மை நியாயப் படுத்துபவரும் ஒரு சராசரி மனிதன் தானே. அவரது கூற்று வேதவாக்காகி விடுமா? அவர்களுக்கு என்ன என்னமேலிட அழுத்தங்களோ யாருக்குத் தெரியும். அதைத் தூர வீசிவிடு. பரந்து விரிந்த ஆசிரிய வாண்மை அற்புதமானது. அதனை அர்த்தமற்ற விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அசிங்கப்படுத்தக் கூடாது. நிறைவான ஆசான்கள் நிறைகுடம் போன்றவர்கள். புகழுக்கும் பழிக்கும் புயலுக்கும் இடிக்கும் விலைபோய் விடக் கூடாது. உன் பாதை சரி. பயணமும் சரி இலக்கை அடைவாய். சந்தோசமாய் போட்டுவா!''


கையெடுத்துக் கும்பிடும் ஆசானும் மாணவனும் பண்பிற்கு இலக்கணமாகத் தெரிகிறார்கள். என்னையறியாமலே எனது முன்னிரு கால்களும் ஒன்று சேர்ந்து கும்பிடுகின்றன... ம்... தூக்கம் வருது... பிறகு சந்திப்பம்..

**பாரதி கணேஷ்**
**சுன்னாகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமா செய்தி

# பாகுபலி 2





ஒட்டுமொத்த இந்திய சினிமாவும் கண் விழித்து காத்திருந்தது பாகுபலி-2 படம் எப்போது வரும் என்று தான். கட்டப்பா ஏன் பாகுபலியை கொன்றார், தேவசேனாவை ஏன் பல்வாள்தேவன் சிறை பிடித்தான், சிவகாமியை கொலை செய்ய சொன்னது ஏன்? என பல கேள்விகளுக்கு விடையாக இன்று உலகம் முழுவதும் பிரமாண்டமாக வெளிவந்துள்ளது பாகுபலி-2. இப்படம் முதல் பாகத்தை மிஞ்சியதா? பார்ப்போம்.

முதல் பாகத்தை தொடர்ந்து சிவகாமி உத்தரவின் பேரில் பாகுபலி, கட்டப்பா நாட்டில் மக்களின் நிலையை அறிய ஊர் முழுவதும் சுற்றி வருகின்றனர். அப்போது தேவசேனாவின் (அனுஷ்கா) தைரியத்தை பார்த்த பாகுபலிக்கு காதல் பற்றிக்கொள்கின்றது.

நாட்டை பாகுபலியிடம் இழந்த பல்வாள்தேவனுக்கு தேவசேனா மீது காதல் என்பதை விட, பாகுபலியிடமிருந்து அவளை பிரிக்க எண்ணி சிவகாமியிடம் தேவசேனாவை தனக்கு திருமணம் செய்து கொடுக்குமாறு கேட்கின்றார்.

இதன் பிறகு சிவகாமி தேவசேனாவை தன் மகனுக்கு மணம் முடிக்க கேட்க, தேவசேனா கடும் அதிர்ச்சிக்கு ஆளாகின்றார். இதைத் தொடர்ந்து என்ன ஆகின்றது? கட்டப்பா ஏன் பாகுபலியை கொன்றார் என்பதை சுவாரஸ்யத்தின் உச்சமாக ராஜமௌலி விஷ்வல் ட்ரீட் கொடுத்துள்ளார்.

முதன் முறையாக ஒட்டுமொத்த திரையுலகமும் ஓர் இயக்குநருக்காக படத்தை எதிர்பார்க்கின்றது என்றால் அது ராஜமௌலியாக தான் இருக்க வேண்டும். தனி மனிதனாக 5 வருடம் இப்படத்தை செதுக்கியதற்காகவே எழுந்து நின்று பாராட்டலாம்.

முதல் பாகத்திலேயே பல பிரமாண்டங்கள் காட்ட, இதில் அதை மிஞ்ச வேண்டும் என்பதற்காக தேவையில்லாமல் எந்த ஒரு இடத்திலும் பிரமாண்டத்தை திணிக்கவில்லை. கதைக்கு என்ன தேவையோ அதை தான் எடுத்துள்ளார். கதாபாத்திரங்களின் அழுத்தம் முதல் பாகத்தை விட இதில் நன்றாக உள்ளது.

மேலும், இதில் கட்டப்பா சத்யராஜ் முதல் பாகத்தில் அழுக்கு படிந்த முகம், அடிமை வாழ்க்கை என்று இருப்பார். ஆனால், இதில் கொஞ்சம் கலகலப்பாக காட்டப்பட்டுள்ளார். காமெடி ஒர்க் ஆகியுள்ளது, இருந்தாலும் ஏன் பாகுபலியை கொன்றார் அதை நாங்கள் சொல்ல முடியுமா? திரையில் பார்த்து தெரிந்து கொள்ளுங்கள்.

பிரபாஸ் முழுவதுமாகவே தன்னை ராஜமௌலியிடம் ஒப்படைத்துவிட்டார். பாகுபலி, சிவுடு என இரண்டு கதாபாத்திரங்களிலும் கம்பீரமாக மிரட்டியுள்ளார். அதிலும் பல்வாள்தேவனிடம் நேருக்கு நேர் மோதும் காட்சிகள் அத்தனை கோபங்களையும் கண்களின் வழியே நம்மிடம் சேர்க்கின்றார்.

அனுஷ்கா முதல் பாகத்தில் வெறும் சங்கிலியால் மட்டுமே தான் கட்டப்பட்டு வருவார். ஆனால், இதில் ஹீரோவிற்கு நிகராக தூள் கிளப்பியுள்ளார். அட இதெல்லாம் எப்ப எடுத்த சீன், அனுஷ்கா இவ்வளவு அழகா என கேட்க வைக்கின்றது. (தற்போது தான் எடைபோட்டு விட்டார்), அதிலும், மகிழ்மதிக்குள் இவர் வரும் காட்சி சிலிர்க்க வைக்கின்றது.

படத்தின் முதல் பாதி 'ஆ' என்று அசர வைக்க, இடைவேளை மேலும் நம்மை வேறு லெவலுக்கு எடுத்து செல்கின்றது. அத்தனை எதிர்ப்பார்ப்புடன் இருக்க, இரண்டாம் பாதி 'முதல் பாதி அளவிற்கு இல்லையே, என்ன கிளைமேக்ஸ் கொஞ்சம் எதிர்பார்த்த மாதிரி இல்லையே' என்று நினைக்க வைக்கின்றது.

படத்தின் இரண்டாவது ஹீரோ மரகதமணி என்று சொல்லிவிடலாம், பல இடங்களில் நம்மை அறியாமலேயே எழுந்து நின்று கைதட்ட வைக்கின்றது அவரின் பின்னணி இசை.

படத்தில் இருக்கும் ரம்யா கிருஷ்ணன், நாசர், ராணா, பிரபாஸ், சத்யராஜ் என மொத்த கலைஞர்களும் செமயாக நடித்துள்ளனர்.

படத்தின் விஷுவல் ட்ரீட், இசை, ஒளிப்பதிவு, கொஸ்டியூம் மற்றும் செட் என அனைத்து டெக்னிக்கல் டீமும் 100 சதவீத உழைப்பை கொடுத்துள்ளனர். எல்லா நடிகர்களுக்கும் கொடுத்த முக்கியத்துவம். படத்தில் இடம்பெறும் மாடு சண்டை காட்சிகள். இடைவேளைக்கு முன் வரும் காட்சிகளை மிஸ் பண்ணவே கூடாது.

முதல் பாதியில் இருந்த விறுவிறுப்பு இரண்டாம் பாதியில் ஒருசில இடங்களில் மிஸ்ஸிங்.கிளைமேக்ஸ் காட்சியில் குறை கூற முடியாது, இருந்தாலும் இன்னும் கொஞ்சம் அழுத்தமாக இருக்கலாம். ஒரு சில இடத்தில் லிப் சிங்க் சரியாக இல்லை. இந்திய சினிமாவே பெருமை கொள்ளும் ஒரு படம், இந்த பிரமாண்டத்தை மிஸ் பண்ணிடாதீங்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# திறமையான குள்ளன்

ஏழை விறகுவெட்டி ஒருவன் தன் மனைவியுடன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு ஏழு மகன்கள் இருந்தனர். அவன் எவ்வளவோ கடுமையாக உழைத்தும் அவர்கள் பல நாட்கள் பட்டினி கிடந்தார்கள்.

ஒரு நாள் இரவு அவனுடைய மகன்கள் தூங்கிக் கொண்டிருந்தனர்.

மனைவி அவனிடம், "நாம் எவ்வளவு காலம் துன்பப்படுவது? வயிறார உண்டு எத்தனை நாட்கள் ஆகிறது? நம் மகன்களைக் காட்டில் விட்டுவிட்டு வந்து விடுங்கள். இருப்பதைக் கொண்டு நாம் மகிழ்ச்சியாக வாழலாம்" என்றாள்.

"நீ சொன்னபடியே செய்கிறேன். நாளை அவர்களுக்கு உணவு சமைத்து வை" என்றான் அவன்.

கடைசி மகனான குள்ளன் அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

விடிகாலையில் எல்லோருக்கும் முன் எழுந்தான் அவன். ஆற்றங்கரைக்குச் சென்று அங்கிருந்த சிறுசிறு கூழாங்கற்களை எடுத்தான். சட்டைப் பை நிறைய அவற்றைப் போட்டுக் கொண்டான். வீடு திரும்பினான் அவன். தாயும் தந்தையும் அண்ணன்களும் அவனுக்காகக் காத்திருந்தனர்.

" ஏன் இவ்வளவு நேரம்? அம்மாவிடம் உன் பங்கு அடையை வாங்கிக் கொள். காட்டில் சாப்பிடலாம். இன்று நாம் எல்லோரும் விறகு வெட்டச் செல்கிறோம்" என்றான் விறகுவெட்டி.

எல்லோரும் மகிழ்ச்சியுடன் புறப்பட்டார்கள். கடைசியாகச் சென்றான் குள்ளன். தன் பையிலிருந்த கூழாங்கல்லை வழி எங்கும் போட்டுக் கொண்டே வந்தான்.

நீண்ட தூரம் நடந்து காட்டின் நடுப்பகுதிக்கு வந்தார்கள்.

"இனி என்ன முயன்றாலும் தன் மகன்களால் வீட்டை அடைய முடியாது. அவர்களை ஏமாற்றி விட்டுப் புறப்பட வேண்டும்" என்று நினைத்தான் அவன்.



" நீங்கள் விளையாடிக் கொண்டிருங்கள். நான் சிறிது தூரம் சென்று நல்ல மரமாகப் பார்த்து வெட்டுகிறேன். இருட்டியதும் வீட்டிற்குப் புறப்படலாம்" என்றான் அவன்.

அவர்களும் மகிழ்ச்சியாக விளையாடத் தொடங்கினார்கள்.

அருகில் இருந்த மரத்தில் ஒரு கட்டையைத் தொங்க விட்டான் அவன். காற்று அடிக்கும் போதெல்லாம் மரத்தில் அது மோதியது. விறகு வெட்டுவது போல ஓசை கேட்டது. மகன்களுக்குத் தெரியாமல் வீடு வந்து சேர்ந்தான் அவன்.

அவர்கள் நீண்ட நேரம் விளையாடிக் கொண்டு இருந்தார்கள். இருட்டத் தொடங்கியது.

" தந்தையை அழைத்துக் கொண்டு வீட்டிற்குச் செல்வோம்" என்றான் மூத்தவன்.

எல்லோரும் விறகு வெட்டும் ஓசை கேட்ட இடத்திற்கு வந்தனர். " ஐயோ! அப்பாவைக் காணோமே! இந்தக் காட்டிலிருந்து எப்படி வீட்டுக்குச் செல்வது? கொடிய விலங்குகள் நம்மைக் கொன்று விடுமே! என்ன செய்வது?" என்று அலறினான் இரண்டாமவன்.

" கவலைப்படாதீர்கள். இன்னும் சிறிது நேரத்தில் நிலவு வெளிச்சம் தெரியும். அதன் பிறகு நான் வழி காட்டுகிறேன். நாம் அனைவரும் வீட்டை அடையலாம்" என்று ஆறுதல் சொன்னான் குள்ளன்.

நிலவு வெளிச்சம் பட்டப் பகல் போலக் காய்ந்தது. வழி எங்கும் போட்டு வந்த கூழாங்கல்லை அடையாளமாகக் கொண்டு நடந்தான் குள்ளன். எல்லோரும் பின்தொடர்ந்தார் கள்.

" வீட்டில் தன் மனைவியிடம், நம் குழந்தைகள் காட்டில் எப்படித் தவிப்பார்களோ?" என்றான் அவன்.

" எனக்கு மட்டும் வருத்தம் இல்லையா? நம் கண் எதிரில் ஏன் அவர்கள் துன்பப்பட வேண்டும்? அதனால் தான் அவர்களைக் காட்டில் விட்டுவிட்டு வரச் சொன்னேன். அவர்கள் எங்காவது நலமாக இருக்கட்டும் நான் உணவு சமைக்கிறேன். இருவரும் சாப்பிடலாம்" என்றாள் அவள்.

நள்ளிரவு நேரம். இருவரும் சாப்பிட அமர்ந்தனர்.

கதவு தட்டும் ஓசை கேட்டது. " இந்த நேரத்தில் யார்? கதவைத் திற" என்றான் அவன். கதவைத் திறந்தாள் அவள். தன் மகன்களைக் கண்ட அவளுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. சமைத்து வைத்திருந்த உணவை அவர்களுக்குப் பரிமாறினாள்.

சாப்பாடு முடிந்தது. நடந்து வந்த களைப்பால் அவர்கள் தூங்கத் தொடங்கினார்கள்.

விறகுவெட்டிக்கும் அவன் மனைவிக்கும் சாப்பிட உணவில்லை.

" நம் மகன்கள் வந்து விட்டார்களே. இப்பொழுது என்ன செய்வது?" என்று கேட்டான் அவன்.

" நிலவு வெளிச்சத்தில் வழி கண்டுபிடித்து வந்து விட்டார்கள். அமா வாசையன்று மீண்டும் அவர்களை அழைத்துச் செல்லுங்கள். இன்னும் அதிக தூரம் சென்று விட்டுவிட்டு வாருங்கள். அவர்களால் திரும்ப முடியாது" என்றாள் அவள்.

அமாவாசை வந்தது. விடிகாலையில் தன் மகன்களை எழுப்பினாள் அவள். " காட்டிற்கு விறகு வெட்டச் செல்லும் அப்பாவுடன் நீங்களும் செல்லுங்கள். மதிய உணவிற்காக ஆளுக்கு இரண்டு அடை சுட்டு வைத்து இருக்கிறேன்" என்றாள் அவள்.

குள்ளனுக்கு என்ன நடக்கப் போகிறது என்பது புரிந்தது. கூழாங்கல்லைப் பொறுக்கி வர நேரமில்லை. என்ன செய்வது" என்று குழம்பினான் அவன்.

"நேரமாகி விட்டது. புறப்படுங்கள்" என்று அவசரப் படுத்தினான் விறகுவெட்டி.

அவர்களுடன் கடைசியாகச் சென்றான் குள்ளன். தன் கையிலிருந்த அடையைச் சிறுசிறு துண்டுகள் ஆக்கினான். வழி எங்கும் அதைப் போட்டுக் கொண்டே வந்தான்.

அவன் போட்டு வந்த அடைகளைக் குருவிகளும் எறும்புகளும் சாப்பிட்டு விட்டன. விறகுவெட்டி அவர்களை வழக்கம் போல விளையாடச் சொன்னான். கட்டையைத் தொங்க விட்டுவிட்டு வீடு வந்து சேர்ந்தான். இருட்டத் தொடங்கியது. எல்லோரும் தந்தையைக் காணாது திகைத்தனர்.

" நான் வழி காட்டுகிறேன். கவலைப்படாதீர்கள்" என்றான் குள்ளன். வழி தெரியாமல் அவன் அங்கும் இங்கும் அலைந்தான்.

பக்கத்தில் இருந்த பெரிய மரத்தின் மேல் ஏறினான். தொலைவில் விளக்கு வெளிச்சம் தெரிவதைப் பார்த்தான்.

கீழே இறங்கிய அவன், " அண்ணன்களே! சிறிது தொலைவில் வெளிச்சம் தெரிகிறது. கண்டிப்பாக அங்கே வீடு இருக்க வேண்டும். நாம் அங்கே சென்று இன்றிரவு தங்குவோம்" என்றான்.


எல்லோரும் வெளிச்சம் வந்த இடத்தை நோக்கி நடந்தார்கள். அவர்கள் கண்களுக்குப் பெரிய வீடு தெரிந்தது. அது ஒரு அரக்கனின் வீடு. அரக்கனும் அவனுடைய ஏழு மகன்களும் வெளியே சென்றிருந்தார்கள். அரக்கனின் தாய் மட்டும் அப்பொழுது வீட்டில் இருந்தாள்.

குள்ளன் கதவைத் தட்டினான். அரக்கி கதவைத் திறந்தாள். ஏழு சிறுவர்களைப் பார்த்ததும் அவள் நாக்கில் எச்சில் ஊறியது. " பாட்டி ! இந்தக் காட்டில் நாங்கள் வழி தவறி விட்டோம்" இன்றிரவு மட்டும் இங்கே தங்கிச் செல்கிறோம்" என்றான் குள்ளன்.

(தொடரும்)

காய் குட்டீஸ்!

பசியில் இருக்கும் இந்த முயல் குட்டிக்கு கரட்டை உண்பதற்கு பாதை காட்டுங்க பார்க்கலாம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# facebook

# எகிப்து பிரமிட் மர்மங்கள்

ஜீஷா நகரம் மொத்தமாக மூன்று பிரமிட்டுக்கள் இருந்த போதிலும் மிகவும் உயரமான மகா ஜீஷா மட்டும் கீழ்வரும் தகவல்களில் தரப்படுகின்றது.

➢ ஜீஷா பிரமிட்டு மொத்தம் 13 ஏக்கர் பரப்பில் பரந்துள்ளது.

➢ மகாஜீஷா (Giza) பிரமிட்டு இதன் அடிப்பரப்பு 1,134 அடியாகவும் உயரம் 486 அடி (138.75 மீற்றர்) என அமைந்துள்ளது.

➢ இவை ஒவ்வொன்றும் சராசரி 2.5 தொன் (5,000 இறாத்தல்) நிறை உடைய 21 இலட்சம்கற்களினால்20 வருடகாலத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

➢ நான்கு திசைகளில்முகம் கொண்டுள்ள பிரமிட்டின் வாசல் ...திசையில் அமைக்கப் பட்டுள்ளது.

➢ இதன் வாசல் 9 அடி சதுரமாக நிலத்தில் இருந்து 150 அடி உயரத்திலும் அமைந்துள்ளது.

➢ பிரமிட்டின் வாசலில் இருந்து 324 அடி நீண்ட உள்மன்னை மூன்று தளங்களில்உள்ள 3 மண்டபங்களுக்கு செல்கின்றது.

➢ பிரமிட்டின்முதன்மைகட்டுமானத்தில் இரண்டு மில்லியன் கற்கள் ஒவ்வொன்றும் 1/50 அங்குல இடைவெளியில் பொருத்தப்பட்டுள்ளது.


➢ கட்டி ம்முடிவுற்ற காலத்தில் மிகவும் பளபளப்பாக இருந்த பிரமிட்டு 100 மைல் தொலைவிற்கு சாதாரண கண்களுக்கு புலப்படுமாறு இருந்துள்ளது.

➢ கட்டடம் முடிவுற்ற காலம் முதல் பலகாலமாக புராதன மக்களின் வணக்கத் தலமாக இருந்துள்ளது.

➢ பிரமிட்டின் முக்கிய இராட்சத கல் கட்டுமானம் தவிர 115,000 மணல் உதவியுடன் பளபளப்பு செய்யப்பட்ட சுண்ணாம்பு கற்கள் மேலதிகமாக பாவித்துள்ளனர்.

➢ மேற்கூறிய சுண்ணாம்பு கற்கள் ஒவ்வொன்றும் 1/100 அங்குல இடைவெளியில்பொருந்த வைத்துள்ளனர்.

➢ ஜீஷா பிரமிட்டு நைல் நதி கரையிலும் எகிப்து நாட்டின் எல்லையிலும் உள்ளது. ஜீஷா



என்பதன் அர்த்தம் அரபு மொழியில் எல்லை என்பதாகும்.

➢ கட்டுவதற்கு உபயோகித்த கற்களினால் 20 எம்பயர் ஸ்டேட் கட்டடம் கட்டமுடியும் அல்லது பூமியை சுற்றிவர ஒரு நடைபாதை அமைப்பதற்கு சமம் எனவும் இதன் பிரமாண்டம் வர்ணிக்கப் படுகின்றது.

➢ 3800 வருடங்களாக உலகின் உயர்ந்த கட்டடம் என்ற இடத்தை பிடித்திருந்தது.

## மம்மிப்படுத்துதல்

➢ இறந்தவரின் உடலைத் தனியாக ஒரு கூடாரத்திற்கு எடுத்துச்சென்று, மரணக் கட்டிலில் அவரைக் கிடத்தி பேரீச்சை மதுவாலும் நைல் நதி நீராலும் கழுவுவார்கள்.

➢ உடலின் இடது பக்கத்தில் அறுத்து உள்ளே இருக்கும் பகுதிகளை வெளியே எடுப்பார் கள்.

➢ நுரையீரல் கல்லீரல் வயிற்றுப் பகுதிகள், குடல் பகுதிகள் எடுக்கப்பட்டு கல் உப்பில் பதப்படுத்தப்படும்.

➢ இருதயம் அறிவின் இருப்பிடமாக எகிப்தியர்களால் கருதப்பட்டதால் அது உடலுக்குள்ளேயே இருக்கும்.

➢ ஒரு வளைந்த கம்பியை மூக்கின் வழியாக விட்டு உடைத்து, மூளையை எடுத்து விடுவார்கள். (உண்மையில் அறிவு என்பது மூளை தொடர்புடையது என்ற அறிவு அந்தக் காலத்தில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது)

➢ உடல்கல்உப்பால்மூடப்படும்

➢ நாற்பது நாட்கள் கழித்து உடலை மறுபடியும் நைல் நதி நீரால் கழுவி, அதன்மீது வாசனை எண்ணெய்களைத் தடவுவார்கள். உடல் இப்போது தன்னுடைய ஈரப்பதத்தை முழுவதுமாக இழந்திருக்கும். அதன் பிறகு மரணக்கோவில் என்றழைக்கப்படும் லூசார் கோவிலின் பலிபீடத்தில் சில நாட்கள் வைப்பர். இது நேரடியாக சூரிய ஒளி படும் இடமாதலால் பாலைவன வெயிலின் வெப்பம் காரணமாக உடலின் ஈரப்பதம் முழுமையாக ஆவியாகி இப்போது காய்ந்த உடல் மாத்திரம் இருக்கும்.

➢ உட்றப்பகுதிகள் தனித்தனியாக ஜாடிகளில் **(canopic jars)** வைக்கப்படும்.

➢ உடலைபின்சுடவியதுணியால் இறுக்கமாகச் சுற்றுவார்கள். தலை, கைகள், கால் கள், உடல் பகுதி தனித்தனியாகச் சுற்றப்படும்.

➢ இறுதியில் பிரமிட்டுகளின் மையப்பகுதியில் அரச மரியாதையுடன் எடுத்துச்சென்று அடக்கம்செய்யப்படும். அரசர்பயன்படுத்திய அனைத்துப் பொருட்களும் பிரமிட்டில் வைக்கப்படும். இதில் தங்க வைர நகைகள் மற்றும் இதர விலையுயர்ந்த பொருட்களும் அடங்கும். **(முற்றும்)**

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1059

Search for people, places and things Nagendram Home

### தர்மராசா கோமகன்




### இரஜேஸ் கரன்




### சரவணபவன் சாம்பவன்




### தனுஜா




### நிரஞ்சனா




### தர்சனா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 82

## கல்சியக் குளிசைகளும் மேலதிக கல்சியம் சேர்க்கப்பட்ட பால்மா வகைகளும்



உடம்பு உளைவுகளுக்கும், மூட்டு வலிகளுக்கும் கல்சியக் குறைபாடுதான் காரணம் என்ற ஒரு தப்பபிப்பிராயம் நிலவுகிறது. இதனால் மூட்டுநோ, நாரிநோ ஏற்பட்டவுடன் கல்சியக் குளிசைகளையும் மேலதிக கல்சியம் சேர்க்கப்பட்ட மா வகைகளையும் மக்கள் பாவிக்க தலைப்படுகிறார்கள்.

யாழ்ப்பாணத்திலே எமது குடிதண்ணீரில் பெருமளவு கல்சியம் இருக்கின்றது. இந்த அதிகரித்த கல்சியத்தின் அளவால் ஏதாவது பிரச்சினைகள் தோன்றி விடுமோ என்ற ஏக்கமும் இருக்கிறது.

அத்துடன் யாழ்ப்பாண உணவிலும் போதியளவு கல்சியம் இருக்கிறது. இந்த நிலையில் எமக்கு மேலதிக கல்சியக் குளி



சைகள் தேவைதானா என்ற கேள்வி எழுகிறது. கல்சியம் அளவுக்கதிகமாக உள்ளெடுக்கப்பட்டால் மாரடைப்பு ஏற்படும் வீதம் அதிகரிப்பதுடன் இன்னும் பல சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படமுடியும்.

மேலைத்தேய நாடுகளிலே கல்சியக் குறைபாடு ஒருபெரும்பிரச்சினையாக இருந்து வருகிறது. அதன் காரணமாகப் பலநோய்களும் ஏற்படுகின்றன. இதனால் அந்த நாடுகளிலே கல்சியக் குளிசைகள் பெருமளவில் பாவிக்கப்பட்டு வருகின்றன.

மேலைத்தேய நாடுகளில் வசிக்கும் எமது உறவினர்கள் நல்ல நோக்கத்துடன் இந்தக் கல்சியம் கொண்டசத்துக் குளிசைகள் நிரம்பியபோத்தல்களை இங்கு இருக்கும் தமது உறவினர்களுக்கு அனுப்பி வைக்கின்றனர்.

அந்தகுளிசைகளை யாழ்ப்பாணத்தில் வசிக்கும் எமது மக்களும் பெருமளவில் பாவித்து வருகின்றனர். எமது பகுதிகளில் விற்றமின் D குறைபாடு ஒருபிரச்சினை யாக உருவெடுத்து வருகிறது. இதன் காரணமாக இந்தநிலை உள்ளவர்களுக்கு உடலில் கல்சியத்தின் அளவு குறைவடைய முடியும். இந்தநிலை உள்ளவர்கள் விற்றமின் Dயையும் கல்சியத்தையும் உள்ளெடுக்கலாம்.

ஆனால் சுகதேகியாக இருப்பவர்களுக்கு எமது நீரிலும் அன்றாட உணவிலும் இருக்கும் கல்சியம் போதுமானதாகவே இருக்கிறது. இதற்கும் மேலதிகமாக கல்சியக் குளிசைகளை உட்கொண்டால் உடற்சுகம் பாதிக்கப்படலாம். சிலநோய் நிலைகளில் எமக்கு மேலதிகமான கல்சியக் குளிசைகள் பாவிக்க வேண்டியதேவை இருக்கிறது.


உதாரணமாக எலும்பு சம்பந்தமான சில நோய்கள், சிறுநீரகத் தொழிற்பாடு குறைவடைந்தநிலை, சில குடல் சம்பந்தமான நோய்கள், சிலவகை மூட்டுநோய்கள் போன்றநோய் நிலைகளில் வைத்தியரின் ஆலோசனைக்கு அமைய இந்தக் கல்சியக் குளிசைகளைப் பாவிக்க முடியும். வைத்திய ஆலோசனை இன்றிக் கல்சியக் குளிசைகள் பாவிப்பதைத் தவிர்த்துக் கொள்வது நல்லது.

உடல் நோவுக்கோ, மூட்டுநோவுக்கோ அல்லது நாரிநோவுக்கோ நாம் உள்ளெடுக்கும் கல்சியத்தின் அளவுகுறைந்து இருப்பதுதான் காரணம் என்ற தப்பபிப்பிராயத்தை புரிந்துகொள்ள முயலுவோம்.

இயற்கையான உணவுவகைகளும் சூரிய ஒளியும் எமது ஆரோக்கியத்தை பேணபோதுமானவை என்பதை மனதில் நிறுத்துவோம்.

வைத்தியர். சி.சிவன்சுதன்
பொதுவைத்திய நிபுணர்.

## நீரிழிவு உள்ளவர்கள் இருதயத்தை பாதுகாப்பது எப்படி



### முடியுருநாடிகளில் ஏற்படும் அடைப்புக்களால் ஏற்படும் இருதய நோய்கள்


நீரிழிவு நோயாளிகளில் ஏற்படும் பிரதானமான இருதயநோய்கள் முடியுருநாடிகளில் அடைப்புகள் ஏற்படுவதாலேயே ஏற்படுகின்றன.

இருதயத்துக்குக் குருதியை வழங்கும் முடியுரு நாடிகளில் கொழுப்புப்படிவுகள் ஏற்படுவதாலும், இந்தக் கொழுப்புப் படிவுகள் உடைந்து குருதிக்கட்டிகள் உருவாவதாலும் இருதயத்தின் அந்தக்குறிப்பிட்ட பகுதிக்கான குருதியோட்டம் தடைப்படுகின்றது.

இதனால் அந்தப்பகுதி இறப்படைவதுடன் இருதயத் தொழிற்பாடும் பலவீனம் அடைகின்றது.

இது சாதாரணமான ஒருவரிலும் பார்க்க துரிதமாக நீரிழிவு நோயாளி ஒருவருக்கு ஏற்படும்.

இவர்களின் வாழ்க்கை முறைக்கட்டுப்பாடும் குருதியில் குளுக்கோசின் அளவைத்



தொடர்ந்து சீரான அளவில் கட்டுப்படுத்தலும், மீள இருதய நோய்கள் ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தைக் குறைக்கும் மருந்துகளில் முக்கியமானவை.

குருதி உறைவதைக் குறைக்கும் மருந்துகள்

கொழுப்புப்படிவுகளைக்குறைக்கும் மருந்துகள்

குருதி அழுத்தத்தைச் சீராக்கும் மருந்துகள்

இருதயத் துடிப்பைக் குறைக்கும் மருந்துகள்

நீரிழிவு நோய்க்கான மருந்துகள் என்பவை அடங்கும்.

நீரிழிவுநோயாளிகளில், சிறப்பாக குருதி உறைவதைக் குறைக்கும் மருந்துகளும், கொழுப்புப் படிவுகளைக் குறைக்கும் மருந்துகளும் குருதியின் கொலஸ்ரோலின் அளவு கட்டுப்பாடாக இருப்பினும் கூட வழங்கப்படுதல் அவர்களுக்கான இருதயநோய்க்கான வாய்ப்புக்களை குறைக்கும்.

10 ஆண்டுகளில் 10 வீதத்துக்கும் அதிகமாக இருதயநோய் ஏற்படுத்துவதற்கான வாய்ப்புள்ள நீரிழிவு நோயாளிகளுக்கு வாழ்க்கை முறையில் மாற்றங்களுக்கு அஸ்பிரின் மருந்துகள் பரிந்துரைக்கப்படும்.

40 வயதுக்கு மேற்பட்ட நீரிழிவு நோயாளிகள் இருதய நோய்க்கான வாய்ப்பை அதிகரிக்கும் காரணிகளைக் கொண்டிருந்தாலும் கொண்டிருக்காவிடினும் மருந்துகளுக்கு பரிந்துரைக்கப்படுவார்கள்.

40 வயதுக்கு உட்பட்ட நீரிழிவுநோயாளிகள் இருதய நோய்க்கான மருந்துக்களுக்குப் பரிந்துரைக்கப்படுவார்கள். 40 வயதுக்கு உட்பட்ட நீரிழிவுநோயாளிகளில் காரணங்கள் எதுவுமற்ற நோயாளிகள் ஆண்டுதோறும் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

மருத்துவர்.பூ.லக்ஸ்[illegible]
இருதயநோய் சிகிச்சைநிபுணர்.

மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமானஉங்கள் அபிப்பிராயங்களையும் 0768363858 என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org